# பொருளியல் நோக்கு

ஜனவரி 1996


வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்


மத்திய கிழக்கு
மீது
சிறப்புக்
கண்ணோட்டம்





மக்கள் வங்கி வெளியீடு


# குடியகல்வு தொடர்பான தரவுகள்












# பொருளியல் நோக்கு

மலர் 21 இதழ் 10 ஜனவரி 1996

## உள்ளே

### சிறப்புக் கட்டுரை


மகளிரும் அபிவிருத்தியும் — பெய்ஜிங்கும் அதற்கு அப்பாலும்: இன்றைய மகளிர் எதிர்நோக்கும் சவால்கள் 28


### விஷேச அறிக்கை

#### ஊழியர் குடியகல்வு
#### மத்திய கிழக்கு மீது ஒரு சிறப்பு நோக்கு


ஊழியர் குடியகல்வின் தாக்கம்
இலங்கையின் ஊழியர்குடியகல்வு-
போக்குகளும் அச்சுறுத்தல்களும் 2

மத்திய கிழக்கு நாடுகளுக்கான
தேர்ச்சியற்ற ஊழியர் குடியகல்வு 8

கண்ணோட்டம் 11

வலி மிகுந்த மாற்றம் 14

விடய ஆய்வுகள் - இலங்கை 19

நேருக்கு நேர் 24


**அடுத்த இதழ்**
**போக்குவரத்து : ஒரு கண்ணோட்டம்**

அட்டைப்படம் : எஸ்.பி.குணசேன
ஜே.கே.ஜீ.புஞ்சிஹேவா


வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒருங்கு பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இக்கட்டுரைகள் [illegible] குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# இலங்கையின் ஊழியர் குடியகல்வு : போக்குகளும் அச்சுறுத்தல்களும்

எல்.கே.ருகுணகே

## ஊழியர் குடியகல்வு : அதன் பொருளாதார பங்களிப்பின் முக்கியத்துவம்

இலங்கையின் ஊழியர் குடியகல்வானது, முதன்முதலாக ஆங்கில ஆட்சியின் கீழ் 20ஆம் நூற்றாண்டின் முன் அரைப் பகுதியிலேயே நிகழ்ந்துள்ளது. இலங்கைத் தமிழர் சிறுதொகையினர் தொழில் நாடி மலேசியாவுக்கு இடம் பெயர்ந்து சென்றமையே அதுவாகும். எவ்வாறாயினும், சர்வதேச ரீதியான ஊழியர் குடியகல்வு பற்றிய அனுபவத்தை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னரே இலங்கை தெளிவாக அனுபவிக்கத் தொடங்கியது. சுதந்திரத்தின் பின் இலங்கையைச் சேர்ந்த பறங்கி இனத்தவர் அவுஸ்திரேலியாவையும் நியூசிலாந்தையும் நோக்கிக்கிப் பெயரும் ஒரு போக்கு காணப்பட்டது. இக்காலம் தொட்டு இந்நாட்டில் இருந்து வெளிநாடு சென்றோர் பற்றிய குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின்படி, 1957-1971 இரு தசாப்த காலத்தில் 423,503 இலங்கையர் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். அவர்கள் எக்காரணங்களுக்காகச் சென்றனர் என்ற தகவல்கள் இல்லை. அவ்வாறு, நிச்சயித்துக்கூற முடியாவிடினும், 1960-1968 காலப் பகுதியில் 188 இலங்கை வைத்தியர்கள் பிரித்தானியாவில் குடியுரிமை பெற்றுள்ளனர். மேலும், 1971-1972 காலப் பகுதியில் 379 தொழில்சார் நிபுணர்கள் பசுந்தரைகளைத் தேடிக் குடிபெயர்ந்துள்ளனர். வைத்தியர், கணக்காளர், பல்கலைக்கழக விரிவுரையாளர் என்போர் அவர்களில் அடங்குவர்.

1972ஆம் ஆண்டினை அடுத்த இரு தசாப்த காலம் இலங்கையில் நிகழ்ந்த ஊழியர் குடியகல்வில் அதிகரிப்பினைத் தெளிவாகக் காட்டுகின்றது. 1973 நடுப் பகுதியில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் 'ஒபெக்' நாடுகள் ஒரு பீப்பா எண்ணெய் விலையை 33 அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதெனத் தீர்மானித்தன. இதனால் ஏற்பட்ட மத்திய கிழக்கு நாடுகளின் துரித பொருளாதார வளர்ச்சியின் பாரிய தாக்கம் காரணமாக குடிபெயரும் ஊழியர்களுக்கான ஒரு திறந்த சந்தையாக அந்நாடுகள் விளங்கத் தொடங்கின. அந் நாடுகள் அரேபிய, ஆசிய ஊழியர்களுக்கு மட்டுமல்லாது

அட்டவணை 1
இலங்கையிலிருந்து தொழிலுக்காக - குடிபெயர்ந்தோர் 1972 - 1994
அளவு

| வருடம் | உத்தியோகபூர்வ | மொத்தம் |
|---|---|---|
| 1972-1975 | 2,365 | - |
| 1976-1978 | 14,241 | - |
| 1979 | 9,423 | 25,875 |
| 1980 | 7,502 | 28,644 |
| 1981 | 15,000 | 57,447 |
| 1982 | 22,450 | - |
| 1983 | 18,085 | - |
| 1984 | 15,713 | - |
| 1985 | 12,374 | - |
| 1986 | 16,546 | 30,797 (1) |
| 1987 | 16,127 | - |
| 1988 | 18,973 | - |
| 1989 | 24,724 | - |
| 1990 | 42,624 | 55,574(2) |
| 1991 | 65,007 | 80,473(3) |
| 1992 | 55,673 | 124,494 |
| 1993 | 48,743 | [illegible]29,076 |
| 1994 | 60,167 | 130,027 |

1. ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களுக்கு மட்டும்.
2. மார்ச் தொடக்கம் ஆகஸ்ட் வரை விமான நிலைய மதிப்பீடு
3. ஜூன் தொடக்கம் டிசம்பர் வரையிலும் விமான நிலைய மதிப்பீடு

ஐரோப்பிய நாடுகளின் ஊழியர்களுக்கும் புகலிடமாக விளங்கின. எனவே, பிலிப்பைன்ஸ், கொரியா, தாய்லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகள் தமது ஊழியர்களை வழங்குவதன் மூலம் மத்திய கிழக்கு நாடுகளின் இந்த ஊழியர் சந்தையில் பிரவேசித்தன.

திட்ட அமுலாக்கல் அமைச்சு, இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து செல்வோரின் புள்ளிவிபரத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அப்பயணிகளால் விமான நிலையத்தில் பூர்த்தி செய்யப்படும் வெளியேறுகைப் பத்திரங்களை (Embarkation Card) பயன்படுத்தியது. இத்தகவல்கள் 1979 இல் 20,980 பேர் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதைக் காட்டியதோடு, இது அமைச்சு முன்னர் மேற்கொண்ட கற்கைகளின் படி உத்தியோகபூர்வ வழிமுறைகளின் கீழ் வெளியேறிய 9423 பேர் என்ற தொகையை விட இரட்டிப்பானதாகும். அட்டவணை 1 இல் காட்டியவாறு, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தின் மூலம் செய்யப்பட்ட ஆறுமாத கால மதிப்பீடு மற்றும் தரவு பகுப்பாய்வுகளின் படி உத்தியோகபூர்வ வழிமுறைகளுக்கு ஊடாகக் குடிபெயர்ந்த தொகைக்கும் மொத்த உண்மைக் குடியகல்வுத் தொகைக்கும் இடையில் பெரிய இடைவெளி காணப்படுகின்றது. அந்த ஆறுமாத காலத்துள் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை நாடிச் சென்றோர் தொகை கணிப்பீடுகளுக்கமைய 30,797 ஆக இருப்பினும் (விடுமுறைக்காக

அட்டவணை 2

தொழிலாளர் குடியகல்வு - பெண்களின் பங்கேற்பு (மொத்தம்)

| வருடம் | மொத்தம் | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| 1979 | 25,875 | 13,633 | 52.7 | 12,242 | 47.3 |
| 1980 | 28,644 | 14,101 | 49.2 | 14,543 | 50.8 |
| 1981 | 57,447 | 27,287 | 47.5 | 30,160 | 52.5 |
| 1986* | 39,797 | 9,512 | 30.9 | 21,285 | 69.1 |
| 1992 | 124,494 | 35,099 | 28.2 | 89,395 | 71.8 |
| 1993 | 129,076 | 35,496 | 27.5 | 93,580 | 72.5 |
| 1994 | 130,027 | 21,329 | 16.4 | 108,698 | 83.5 |

* ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களுக்கு மட்டும்

ஆதாரம் : 1. திட்ட அமுலாக்கல் அமைச்சு
2. வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகம் 1990
3. வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகம் - விமான நிலைய மதிப்பீடு

இலங்கை திரும்பியோர் சேர்க்கப்படவில்லை) 7774 பேர் அல்லது 25% மட்டுமே உத்தியோகபூர்வ அமைப்புக்களுக்கு ஊடாகச் சென்றுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தரவுகளைப் பெறுவதற்காக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்தின் மூலம் 1990 மார்ச் மாதத்தில் விமான நிலைய மதிப்பீட்டு அலகு ஆரம்பிக்கப்பட்டது. உத்தியோகபூர்வ அமைப்புகளின் ஊடாக வெளிநாடு சென்ற தொகையிலும் வெளியேறிய மொத்த தொகையின் நூற்றுவீதம் அதிகமாக இருந்தமை இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. இதன்படி, 1992 இல் நாட்டை விட்டு வெளியேறியோரின் மொத்தத் தொகை 124,494 ஆக இருக்க, அதில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சென்றோர் தொகை 55,673 அல்லது 45% ஆக மட்டுமே இருந்தது. 1993 இல் உத்தியோகபூர்வ அமைப்புகளின் ஊடாகச் சென்றோர் தொகை 48,743 ஆக இருக்க, மொத்தமாக வெளியேறியோர் தொகை 129,076 ஆக இருந்தது. எனவே, இது உத்தியோகபூர்வ வெளியேறுகையை 38% ஆகக் குறைத்துள்ளதைக் காட்டுகின்றது. 1994 இல் வெளியேறியோரின் மொத்தத்தொகை ஏறத்தாழ 130,000 ஆக இருக்க, அதில் உத்தியோகபூர்வ அமைப்புகள் ஊடாகச் சென்றோர் ஏறத்தாழ 60,000 ஆக இருந்தனர் (ஏறத்தாழ 46%).

ஊழியக் குடியகல்வின் இயல்புகளை ஆராய்கையில் அதில் பெண்களின் சதவீதம் உயர்வாகக் காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 1979 இல் தொழில்களுக்காக வெளியேறியோரின் மொத்தத் தொகையில் பெண்களின் பங்கானது முதல் தடவையாக ஆண்களின் தொகையை மேவிச் சென்றதோடு அது 1993 இல் 72.5% ஆகவும், 1994 இல் 83.5% ஆகவும் காணப்பட்டது. மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த சமூகத் தராதரம் இவ்வுயர் வீத அதிகரிப்புக்குக் காரணமாகும். இந்நிலைமையில் அரபிகள் தமது வீட்டு வேலைகளுக்காக வெளிநாடுகளின் வீட்டுப் பணிப் பெண்களை நாடி நின்றனர். இது ஒரு வகையில் சமூக அந்தஸ்தின் ஒரு வெளிப்பாடாக அமைந்தது.

1975 இன் பின்னர் ஏனைய துறைகளுக்கான ஊழியர் கேள்வி வீழ்ச்சியடைந்தாலும், வீட்டுப்பணிப் பெண்களுக்கான கேள்வி நிலையாக இருந்தது. வீட்டுப் பணிப் பெண்களை வேலைக்கு அமர்த்துகையில் முஸ்லிம் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இவ்விடயத்தில் இலங்கை



ஏனைய ஆசிய (பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா) நாடுகளை விடக்கூடிய பயனைப் பெற்றுக் கொண்டது. காரணம், அந்நாடுகளில் தேவையான பெண்கள் இருந்தாலும் அவர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்ப அவை விரும்பாமையாகும். வெளிநாட்டுத் தொழில்களுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகப் பெண்களை அனுப்புவதை இந்தியா முற்றாகத் தடை செய்தது. பங்களாதேஷும் பாகிஸ்தானும் வெளிநாடுகளுக்கான ஊழியர் ஏற்றுமதியில் முன்னணி வகித்த போதும் அவை கலாசார, சமய காரணங்களுக்காகப் பெண்களை மனைப் பணிப் பெண்களாக அனுப்பவில்லை. இவ் விடயத்தில் இலங்கைக்குப் போட்டியாகப் பிலிப்பைன்ஸும் இந்தோனேசியாவும் அமைந்தன. பிற்பட்ட ஆண்டுகளில் அந்நாடுகளில் கொணரப்பட்ட சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக

அட்டவணை 3

இனம் மற்றும் பால் அடிப்படையில் குடியகல்வு: ஜூலை-செப் 1993

| | பெண் | | ஆண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண் | % |
| சிங்களவர் | 6,398 | 51.8 | 22,123 | 68.2 | 28,521 | 64.0 |
| தமிழர் | 1,117 | 9.2 | 927 | 2.8 | 2,044 | 4.6 |
| முஸ்லிம் | 4,565 | 37.7 | 9,344 | 28.8 | 13,909 | 31.2 |
| ஏனையோர் | 33 | 0.3 | 59 | 0.2 | 92 | 0.2 |
| மொத்தம் | 12,113 | 100 | 32,453 | 100 | 44,566 | 100 |

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகம்

அவையும் பெண்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தின. எனவே, இலங்கை வெளிநாட்டுச் சந்தையில் வீட்டுப் பணிப் பெண்களை நிரம்பல் செய்வதில் தனியுரிமையை அனுபவிக்கத் தொடங்கியது. இத் துறையில் முகாமைத்துவம், ஆய்வு என்பனவற்றில் ஈடுபட்டுள்ள திரு. டேவிட் சொய்ஸாவின் குறிப்புகளின்படி, தொழில் கொள்வோர் முஸ்லிம் பெண்களுக்கான குடியகல்வுச் செலவுகளைத் தாமே தாங்கிக் கொண்டதால் தொழில் முகவர்களும் முஸ்லிம் பெண்களை அனுப்புவதில் விருப்புக் கொண்டனர்.

1986 இன் பின்னர் ஆடைத் தொழிற்சாலைகளில் பெண் ஊழியர்களுக்கான கேள்வி தோன்றியமை இங்கு மற்றொரு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் மூலம் பெண்களுக்கான குடியகல்வு மேலும் வலுப்பெற்றதுடன் 1992 இல் இது 50,000 ஐத் தாண்டிச் சென்றது.

ஊழியர் குடியகல்வில் இனரீதியான காரணியை ஆராயும் பொழுது முஸ்லிம்களினதும் தமிழரினதும் பங்கு சிறப்பிடம் பெறுவதை காண முடிகிறது. 1976 க்கு முன்னர் தமிழரின் பங்குபற்றுதலும் 1976 இன் பின்னர் முஸ்லிம்களின் பங்குபற்றுதலும் சிறப்புற்று விளங்குகின்றன. 1974 ஆம் ஆண்டு அமைச்சரவை உபகுழு அறிக்கையின்படி, குடியகல்வில் தமிழர் பங்கு 1971 இல் 20.4% ஆக இருந்து 1974 இல் 40% ஆகக் காணப்பட்டது. 1976 இன் பின்னர் முஸ்லிம்களின் பங்கு 31% ஆக அதிகரித்தது.

1956 இன் சிங்கள மொழிக் கொள்கையை அடுத்து, இலங்கை அரசியல் மீது தமிழர்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி மேற்போந்த குடியகல்விற்கான போக்கினை அவர்கள் மத்தியில் தோற்றுவித்தது. மேலும், முஸ்லிம்களுக்கு வாய்ப்பான கலாசாரச் சூழல் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவியதால் அந்நாட்டுத் தொழில் வாய்ப்புகளின் பால் முஸ்லிம்கள் - குறிப்பாக முஸ்லிம் பெண்கள் - ஈர்க்கப்பட்டனர். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு, வெளிச் செல்லும் தொழிலாளரின் வயதமைப்பைக்

அட்டவணை 4

குடிபெயர்ந்த தொழிலாளரின் வயதுப் பகிர்வு

| வயது (வருடங்கள்) | ஆண் | % | பெண் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| < 20 | 570 | 2.7 | 5,721 | 5.3 | 6,291 | 4.8 |
| 21 - 25 | 4,872 | 22.8 | 18,833 | 17.3 | 23,705 | 18.2 |
| 26 - 30 | 5,428 | 25.4 | 22,208 | 20.4 | 27,636 | 21.3 |
| 31 - 35 | 4,299 | 20.2 | 29,959 | 27.6 | 34,258 | 26.3 |
| 36 - 40 | 3,360 | 15.8 | 22,066 | 20.3 | 25,426 | 19.6 |
| 41 - 45 | 1,954 | 9.2 | 8,707 | 7.7 | 10,361 | 8.0 |
| 46 - 50 | 749 | 3.5 | 1.419 | 1.3 | 2,1618, | 1.7 |
| 51 + | 97 | 0.4 | 85 | 0.1 | 182 | 0.1 |
| Total | 21,329 | 100 | 108,698 | 100 | 130,027 | 100 |

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, 1994

அட்டவணை 5

குடிபெயர்ந்த தொழிலாளர்களின் சிவில் நிலைமை (%)

| சிவில் நிலைமை | மதிப்பீடு I | | | மதிப்பீடு II | | | மதிப்பீடு III | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| திருமணமானவோர் | 60.0 | 64.6 | 63.5 | 67.3 | 74.7 | 71.2 | 68.3 | 78.91 | 77.18 |
| திருமணமாகாதோர் | 18.9 | 19.3 | 19.2 | 32.7 | 25.3 | 28.8 | 31.7 | 21.09 | 22.82 |
| குறிப்பிடாதவர்கள் | 20.5 | 16.1 | 17.3 | - | - | - | - | - | - |

மதிப்பீடு I ஜூலை - ஆகஸ்ட் 1992, மதிப்பீடு II ஜூலை - அக். 1993, மதிப்பீடு III ஜன.-டிசம். 1994

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகம்.

அட்டவணை 6

குடிபெயர்ந்த தொழிலாளரின் மாவட்ட ரீதியான பகிர்வு (%)

| மாவட்டம் | மதிப்பீடு I 1979 | மதிப்பீடு II 1980 | மதிப்பீடு III 1981 | மதிப்பீடு IV 1983 | மதிப்பீடு V 1994 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 57.6 | 53.0 | 49.5 | 23.3 | 17.6 |
| கம்பஹா | 15.8 | 15.9 | 14.5 | 7.3 | 7.0 |
| களுத்துறை | 3.8 | 3.7 | 4.4 | 5.4 | 5.9 |
| கண்டி | 4.0 | 5.8 | 5.5 | 10.5 | 9.4 |
| மாத்தளை | 1.0 | 1.0 | 1.2 | 3.0 | 2.9 |
| நுவரெலியா | 0.4 | 0.3 | 0.6 | 1.0 | 1.3 |
| காலி | 4.0 | 4.2 | 4.8 | 6.4 | 6.9 |
| மாத்தறை | 1.0 | 0.9 | 1.3 | 3.4 | 2.6 |
| அம்பாந்தோட்டை | 0.7 | 1.0 | 1.0 | 1.4 | 1.4 |
| யாழ்ப்பாணம் | 4.0 | 5.6 | 6.9 | 1.60.2 | 1.0 |
| மன்னார் | 0.1 | 0.0 | 0.2 | 0.2 | 0.3 |
| வவுனியா | 0.1 | 0.1 | 0.1 | 0.0 | 0.3 |
| முல்லைத்தீவு | 0.0 | 0.0 | 0.0 | 4.3 | - |
| மட்டக்களப்பு | 0.4 | 0.6 | 0.6 | 0.0 | 3.9 |
| கிளிநொச்சி | 0.0 | 0.0 | 0.0 | 3.4 | - |
| அம்பாறை | 0.2 | 0.3 | 0.3 | 1.8 | 4.3 |
| திருகோணமலை | 0.5 | 0.6 | 0.6 | 11.0 | 2.7 |
| குருணாகல் | 1.3 | 1.6 | 2.0 | 4.3 | 10.4 |
| புத்தளம் | 1.0 | 1.5 | 1.3 | 2.6 | 4.7 |
| அநுராதபுரம் | 0.2 | 0.2 | 0.4 | 1.2 | 4.0 |
| பொலனறுவை | 0.0 | 0.0 | 0.1 | 1.8 | 1.7 |
| பதுளை | 0.6 | 0.7 | 0.6 | 0.1 | 1.9 |
| மொனராகலை | 0.0 | 0.0 | 0.1 | 1.7 | 0.3 |
| இரத்தினபுரி | 0.3 | 0.3 | 0.3 | 4.1 | 1.6 |
| கேகாலை | 1.0 | 1.3 | 1.8 | - | 5.9 |
| குறிப்பிடப்படாதவை | 2.0 | 1.4 | 1.9 | - | - |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

ஆதாரம் : மதிப்பீடு I, II, III - திட்ட அமுலாக்கல் அமைச்சு
மதிப்பீடு IV - விமான நிலைய மதிப்பீடு, ஜன. - மார்ச், 1993
மதிப்பீடு V - விமான நிலைய மதிப்பீடு, ஜன.- டிசம். 1994

கணிப்பது தொடர்பான ஒரு முக்கிய மூலாதாரமாகும். 1994 இல் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை நாடிச் சென்றோரில் பெரும்பான்மையினர் 31-35 வயதெல்லைக்கு உட்பட்டவராவர். ஆண் ஊழியர்களில் அதிக சதவீதமானோர் 26-30 வயதெல்லையில் அடங்கினர். பெண்களையும் பொறுத்து அவ்வெல்லை 31-35 ஆகக் காணப்பட்டது. அரபு நாடுகள் பெண்களை வேலைக்கு அமர்த்துகையில் அவர்களின் வயது 35 ஐத் தாண்டியிருப்பதை விரும்பியமை அதற்கான காரணமாகும்.

குடித்தொகை அதிகரிப்பு தொடர்பாக, வெளிநாட்டு தொழில் வாய்ப்புப் பெற்றவர்களின் விவாக நிலைமை முக்கியமானதொரு காரணியாகும். விவாகமானவர்களின் குடியகல்வும் உரிய வயதில் விவாகமாகாமையும் பிறப்பு வீதத்தை வீழ்ச்சியடையச் செய்யும் முக்கிய காரணிகளாகும். மேலும், விவாகமானவர்கள் இரண்டு வருடத் தொழில் ஒப்பந்தத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றபோதும் அடுத்தடுத்து அவ்வொப்பந்தங்களை அவர்கள் புதுப்பித்து நீண்ட காலம் அந்நாடுகளிலேயே தங்கி விடுவதால் பிறப்பு வீதம் குறைய அதுவும் ஒரு காரணியாகின்றது.

அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளவாறு விவாகமான தொழிலாளர்களின் தொகை முதற் மதிப்பீட்டில் 63.5% ஆகவும், இரண்டாம் மதிப்பீட்டில் 71.2% ஆகவும், மூன்றாம் மதிப்பீட்டில் 77.1% ஆகவும் அதிகரித்துச் சென்றுள்ளதை அவதானிக்கலாம். ஆரம்ப கட்டத்தில், வெளியேறுவோர் பெரும்பான்மையினர் நகர்ப்புறத்தவராக இருந்தனர். 1975 இல் வெளிச் சென்றோரில் 75% கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருந்ததோடு, அது 1980 இலும் 1981 இலும் முறையே 70% ஆகவும் 65% ஆகவும் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், தற்போதைய குடியகல்வு முறையில் இந்நிலைமை குறிப்பிடத்தக்கதொரு மாற்றமாகும். 1993ஆம் ஆண்டின் முதல் மூன்று மாத காலத்தில் குடியகன்று சென்ற 39,379 பேரில் 23% கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், 7% கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும்

அட்டவணை 7

**வெளிநாடுகளில் தொழில் புரிவோர் பகிர்வு**
**இலங்கை விமான நிலைய ஆய்வு - 1992, 1993, 1994**

ஆட்கள் எண்ணிக்கை

| | 1992 எண் | % | 1993 எண் | % | 1994 எண் | % |
|---|---|---|---|---|---|---|
| சவுதி அரேபியா | 41,083 | 33 | 51,413 | 39.8 | 4,500 | 34.61 |
| குவைத் | 32,368 | 26 | 30,362 | 23.5 | 33,273 | 25.59 |
| எமிரேட்டுகள் | 22,409 | 18 | 19,901 | 15.4 | 17,982 | 13.83 |
| லெபனான் | 3,145 | 3 | 4,389 | 3.4 | 7,953 | 6.12 |
| ஓமான் | 8,715 | 7 | 5,520 | 4.3 | 4,523 | 3.48 |
| பஹ்ரைன் | 6,225 | 5 | 5,684 | 4.4 | 5,624 | 4.32 |
| ஜோர்தான் | 3,511 | 3 | 3,329 | 2.6 | 4,830 | 3.71 |
| கட்டார் | 1,655 | 1 | 3,114 | 2.4 | 4,121 | 3.17 |
| மாலைதீவு | 2,490 | 2 | 2,309 | 1.8 | 2,391 | 1.84 |
| சிங்கப்பூர் | 1,775 | 1 | 2,065 | 1.6 | 1,975 | 1.52 |
| சைப்ரஸ் | - | - | 608 | 0.5 | - | - |
| கிரீஸ் | - | - | 132 | 0.1 | - | - |
| ஏனையவை | 1,118 | 1 | 250 | 0.2 | 2,350 | 1.81 |
| மொத்தம் | 124,494 | 100 | 129,076 | 100 | 130,027 | 100 |

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகம்.

அட்டவணை 8

**தொழில் வகை அடிப்படையில் பகிர்வு**

| மனிதவலு தொகுதி | 1992 எண் | % | 1993 எண் | % | 1994 எண் | % |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமை | 1,245 | 01 | 380 | 0.3 | 366 | 10.3 |
| நடுத்தர மனிதவலு | 6,225 | 05 | 6,476 | 5 | 2,198 | 1.7 |
| தேர்ச்சி பெற்றோர் | 22,409 | 18 | 17,927 | 14 | 14,917 | 11.5 |
| தேர்ச்சியற்றோர் (பணிப்பெண்கள் தவிர) | 9,960 | 08 | 15,876 | 12 | 9,885 | 7.6 |
| பணிப்பெண்கள் | 84,655 | 68 | 88,417 | 69 | 102,661 | 78.6 |
| மொத்தம் | 124,494 | 100 | 129,076 | 100 | 130,027 | 100 |

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகம்.

அட்டவணை 9

**தனிநபர்கள் அனுப்பிய பணமும் தெரிவு செய்யப்பட்ட சில பண்டத் தொகுதிகளின் அந்நியச்செலாவணி சம்பாத்தியங்களும் (1976 - 1994) (ரூ. பத்து இலட்.)**

| வருடம் | தனிநபர்கள் அனுப்பிய பணம் | தேயிலை | இறப்பர் | தெங்கு products | ஆடைகள் | மொத்த ஏற்றுமதி சம்பாத்தியங்கள் | மொ.உ.உ இல் தனியார் அனுப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1976 | 108 | 2,100 | 890 | 383 | 70 | 4,815 | 2.2 |
| 1977 | 190 | 3,503 | 931 | 496 | 120 | 6,638 | 2.9 |
| 1978 | 610 | 6,403 | 2,0 | 1,2 | 481 | 13,206 | 4.6 |
| 1979 | 936 | 5,722 | 2,491 | 1,699 | 1,108 | 15,273 | 6.1 |
| 1980 | 2,518 | 6,170 | 2,590 | 1,234 | 1,814 | 17,598 | 14.3 |
| 1981 | 4,430 | 6,440 | 2,889 | 1,438 | 3,000 | 21,043 | 21.1 |
| 1982 | 6,024 | 6,342 | 2,323 | 1,496 | 3,502 | 21,454 | 28.1 |
| 1983 | 6,916 | 8,295 | 2,852 | 1,921 | 4,738 | 25,096 | 27.6 |
| 1984 | 7,653 | 15,764 | 3,301 | 2,118 | 7,566 | 37,347 | 20.5 |
| 1985 | 7,920 | 12,003 | 2,566 | 3,093 | 7,960 | 36,207 | 21,9 |
| 1986 | 8,873 | 2,953 | 2,622 | 2,389 | 9,629 | 34,072 | 26.0 |
| 1987 | 10,324 | 10,654 | 2,929 | 2,140 | 12,897 | 41,133 | 25,1 |
| 1988 | 11,386 | 12,299 | 3,706 | 1,538 | 14,260 | 46,928 | 24.3 |
| 1989 | 12,830 | 13,664 | 3,112 | 2,865 | 17,631 | 56,175 | 22.8 |
| 1990 | 16,054 | 19,823 | 3,080 | 2,783 | 25,163 | 71,623 | 21.0 |
| 1991 | 18.311 | 17,867 | 2,641 | 2,619 | 33,261 | 82,225 | 22.3 |
| 1992 | 24,037 | 14,893 | 2,960 | 3,691 | 53,209 | 107,855 | 22.3 |
| 1993 | 30,592 | 19,911 | 3,086 | 2,796 | 68,150 | 138,175 | 22.1 |
| 1994 | 35,345 | 20,964 | 3,582 | 3,761 | 76,614 | 158,554 | 22.3 |

ஆதாரம் : மத்திய வங்கி அறிக்கைகள் 1976 - 1994

இருந்தனர். இப்பொழுது குருநாகல் போன்ற கிராமப்புறப் பிரதேசங்கள் முன்னணிக்கு வந்துள்ளன. 1994 ஆம் ஆண்டின் விமானநிலைய மதிப்பீட்டின் படி கொழும்பு மாவட்டத்தின் பங்கு மேலும் 17% ஆகக் குறைந்துள்ளதுடன், குருநாகல், கேகாலை, காலி, கண்டி போன்ற மாவட்டங்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன.

வெளிநாட்டு ஊழியர்களைப் பெறும்நாடுகளில் சவுதி அரேபியா முதனிலை நாடாக இருப்பதோடு (ஏறத்தாழ 35%) குவைத்தும் ஐக்கிய அரவு எமிரேட்ஸூம் முறையே 26%, 14% என ஊழியர்களைப் பெற்று வருகின்றன.

இவ்வூழியர்களின் தேர்ச்சிநிலை பற்றி ஆராய்கையில் அவர்கள் தொழிற்திறன் அற்றவர்கள் என்ற விபரம் தெரிய வந்துள்ளது. 1992 இல் நாட்டைவிட்டு வெளியேறிய மொத்தப் பணியாட்களின் 76% ஆனோர் வீட்டுப் பணிகளுக்கும் கூலி வேலைகளுக்குமே சென்றுள்ளனர். இத்தொகை 1993 இல் 81% ஆகவும், 1994 இல் 87% ஆகவும் அதிகரித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளின் ஊழியச் சந்தை அதன் தோற்றத்தில், தொழிற்திறனுள்ள ஊழியர்களை வேண்டி நின்ற போதிலும் அச்கேள்வியானது பிற்பட்ட காலத்தில் தொழில் திறனற்ற ஊழியர்களைப் பெறும் நிலைக்கு மாறிச் சென்றுள்ளது.

நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக குடியகல்வினைக் குறிப் பிடலாம். வெளிநாட்டுத் தொழில்கள் மூலமான சம்பாத்தியம் அண்மைய ஆண்டுகளில் ஏனைய வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்திய வழிமுறைகளை விட முன்னணியில் திகழ்கின்றது. மேலும், அதன் பங்களிப்பு காரணமாக உண்ணாட்டு வேலையின்மைக் குறைப்பும் வருமான ஏற்றத்தாழ்வுக் குறைப்பும் ஏற்பட வெளிநாட்டுத் தொழில் புரிவோரின் சேவை உதவியுள்ளமையை இங்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். 1976 இல் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளில் இருந்து பெறப்பட்ட பிரத்தியேக பண வருமானத்தின் கணிசமான அதிகரிப்புக்குக் காரணம் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை

அட்டவணை 10

வெளிநாடுகளில் இலங்கையின் ஊழியர் படை-1994 - 1994

கடல்கடந்த ஒப்பந்த தொழிலாளர்

| நாடு | மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை | % |
|---|---|---|
| சவுதி அரேபியா | 200,000 | 40.0 |
| குவைத் | 80,000 | 16.0 |
| எமிரேட்டுகள் | 75,000 | 15.0 |
| லெபனான் | 25,000 | 5.0 |
| ஓமான் | 25,000 | 5.0 |
| பஹ்ரைன் | 25,000 | 5.0 |
| ஜோர்தான் | 15,000 | 3.0 |
| கட்டார் | 10,000 | 2.0 |
| ஏனைய மத்திய கிழக்கு நாடுகள் | 10,000 | 2.0 |
| தூர கிழக்கு ஆசிய நாடுகள் | 15,000 | 3.0 |
| ஆபிரிக்க நாடுகள் | 10,000 | 2.0 |
| ஆசிய நாடுகள் | 10,000 | 2.0 |
| மொத்தம் | 500,000 | 100 |

ஆதாரம் : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், புள்ளிவிபர கைநூல் 1994

வாய்ப்புகளுக்கான சந்தை உருவாகியமையாகும். தனியார் பண அனுப்பீடுகளின் அதிகரிப்புக்கு எடுத்துக் காட்டாக 1975 இல் இலங்கைக்கு அனுப்பபட்ட 60 மில். ரூபா 1976 இல் 108 மில். ரூபாவாக உயர்ந்தமையை இங்கு குறிப்பிடலாம்.

இதுவரை காலமும் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறையாக விளங்கிய தேயிலை ஏற்றுமதி வருமானத்தை, 1980 களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமான வருமானம் மிகைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு மேலோட்டமான நோக்கில் இந்த வருமானம் ஆடை ஏற்றுமதி வருமானத்திற்கு இரண்டாவதாகத் தோன்றினும், ஆடை ஏற்றுமதி மீதான ஓர் அண்மைய ஆய்வின்படி, இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட் செலவினை அதன் ஏற்றுமதி, வருமானத்தில் (53,209 மில்) இருந்து கழித்தால்அதன் தேறிய பெறுமதி 30% ஆக மட்டுமே (15,963 மில். ரூ) இருக்கின்றது. அவ்வாறெனின், இவ்வருடத்தில் முக்கிய வெளிநாட்டுச் செலாவணி வருமான ஊடகமாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பானது சென்மதி நிலுவை வருமானத்தின் பிரதான ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றது.

ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்வோரின் ஏறத்தாழ 125,000 என்ற தொகையை ஒப்பிட்டு நோக்குகையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பானது தொழிலில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதில் முக்கிய பங்கேற்றிருப்பது தெளிவாகின்றது. இலங்கை மத்திய வங்கியின் 1992 ஆம் ஆண்டறிக்கையின் படி இந்நாட்டு வேலையின்மை பிரச்சினையைக்

அட்டவணை 11

ஊழியத்தை வழங்கல் செய்யும் ஏனைய முக்கிய நாடுகள்

(தொழிலாளர் குடியகல்வு புள்ளிவிவரங்கள்)

| நாடு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 101,724 | 103,814 | 147,131 | 188,124 | 244,500 |
| பர்மா | 8,142 | 8,725 | 13,912 | 13,912 | - |
| இந்தோனேஷியா | 84,074 | 86,264 | 149,782 | 149,782 | - |
| கொரியா | 63,647 | 55,774 | 45,713 | 34,632 | - |
| மலேசியா | 55,025 | 63,012 | - | - | - |
| பிலிப்பைன்ஸ் | 458,626 | 446,075 | 615,019 | 686,461 | 689,200 |
| தாய்லாந்து | 125,314 | 63,024 | 63,849 | 81,759 | 138,000 |
| பாகிஸ்தான் | 98685 | 115,520 | 147,344 | 191,500 | 154,500 |
| இந்தியா | 126,786 | 143,600 | 117,500 | - | - |

ஆதாரம் : 1. 'ஏஷியன் மைக்ரண்ட்', அக்/ டிசம்.1994 இதழ்
2. சர்வதேச தொழில் தாபனம், பாங்கொக்
3. 'ஏஷியன் பசுபிக் மைக்ரேசன் ஜர்னல்', (1992)

குறைப்பதில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முக்கிய காரணியாகத் திகழ் வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், வெளிநாட்டு ஊழியச் சந்தைக்கான வருடாந்த நிரம்பலானது 125,000 ஆக அதிகரித்துள்ளமையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வா றாயினும், வெளிநாடு செல்லும் பணியாட்களில் 70% ஆனவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாவர். மேலும், இவர்கள் ஊழியர் படையில் சேர்த்துக் கொள்ளப்படாத பிரிவுக்கு உரிய வராவர். எனவே, ஊழியர் படை மீதும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பது மீதும் இவர்கள் செலுத்தும் பாதிப்பு குறைவானது என்ற தர்க்கமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தாகும்.

இவ்விடயம் தொடர்பான பல்வேறு மதிப்பீடுகளின் படி திறன் சாரா வேலை வாய்ப்புகளுக்காகச் செல்லும் 7% முதல் 25% ஆன பெண்கள் உண்மையில் ஏதோ ஒரு வருமான ஈட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். எனவே, இவ் வகையான குடியகல்வு உண்ணாட்டு ஊழியர் படை மீது பாதிப்புச் செலுத்தவில்லை என முற்றாகத் தள்ளுபடி செய்ய முடியாது. மறு புறம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மதிப்பீடு களின் படி மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தொழில்களில் ஈடுபட்டுள்ள மொத்த இலங்கையர் தொகை 500,000 ஆக இருப்பதோடு, இத்தொகை நாட்டின் ஊழியர் படையின் 6% ஆகும். எவ்வாறாயினும் குடித்தொகை மதிப்பீட்டு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் வேலையின்மை பற்றிய அறிக்கைகளோடு ஒப்பிடுகை யில் இது 39% ஆகும். இது வேலை யற்றோர் என்ற நிலைக்கு உட்படு வோரின் பெரும் தொகையை உள்ளடக்குகின்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப் பானது வருமான ஏற்றத் தாழ்வினைக் குறைப்பதில் செல்வாக்குச் செலுத்து வது மற்றுமொரு சமூகரீதியான நன்மையாகும். பல்வேறு மதிப்பீடு களின்படி, மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரிவோர் பிரதானமாக, வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தோராவர். அவர்கள் வீடு, சொத்துக்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களை வாங்கும் சக்தியினை இப்புதிய வருமான

அட்டவணை 12

. வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளில் மதிப்பிடப்பட்டுள்ள ஊழியத் தேவை
(வெளிநாட்டு தொழிலாளர் '000)

| நாடு | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|
| சவூதி அரேபியா | 3104.4 | 3075.8 | 3044.8 | 2010.5 | 2972.6 | 2930.9 | 2885.2 |
| குவைத் | 644.2 | 639.9 | 635.4 | 630.6 | 635.4 | 628.0 | 614.5 |
| பஹ்ரைன் | 109.1 | 107.0 | 104.8 | 102.5 | 100.0 | 97.5 | 94.8 |
| கட்டார் | 153.0 | 153.0 | 152.9 | 152.8 | 152.7 | 152.5 | 152.5 |
| எமிரேட்டுகள் | 1096.7 | 1100.4 | 1104.4 | 1107.6 | 1111.1 | 1114.5 | 1117.7 |
| ஓமான் | 324.8 | 323.9 | 322.9 | 321.6 | 320.1 | 318.4 | 316.4 |
| மொத்தம் | 5431.2 | 5400.0 | 5365.2 | 5325.6 | 5281.9 | 5233.8 | 5181.1 |

ஆதாரம் : ஜீவொட் அன்னாம் 1992

மார்க்கத்தின் மூலம் பெற்றுக் கொண்டனர். மேலும், மதிப்பீடுகளின் படி, இக்குடும்பங்களின் சராசரி அளவு 5 அங்கத்தவர்களைக் கொண்டதாகும். எனவே, 2,500,000 மக்கள் தற்போது வெளிநாட்டுத்தொழில் வாய்ப்புகளில் தங்கியிருக்கக் காணலாம். இது மொத்த சனத்தொகையில் 15% ஆகும். இது இத்துறையின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றது.

## இத்தொழில் துறையின் எதிர்காலம்

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பானது ஊழியர் ஏற்றுமதித் தொழிற்றுறை என்ற எல்லையை நோக்கி விரிவடைந்துள்ளதை நடைமுறை உண்மைகள் காட்டு கின்றன. 1985 இன் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 21ஆம் ஷரத்தின்படி, ஊழிய ஏற்றுமதித் தொழிற்றுறை சட்ட ரீதியான முகாமைத்துவத்தை வேண்டி நின்றதோடு அது 350 தொழில் முகவர் நிலையங்களின் ஊடாக ஒரு நிலையான பொருளாதாரச் செயற் பாடாக மாறியது. அண்மைக் காலத்தில் மேற்சொன்ன விடயமானது சந்தைப் பன்முகமாக்கத்திற்கு உட்படுத் தப்பட்டது. இது ஜப்பான், மலேசியா, கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் ஊழியச் சந்தையில் பிரவேசித்ததன் மூலம் மரபு ரீதியான ஊழியச் சந்தையில் மட்டும் தங்கியிருப்பதில் இருந்து விடுபட்டுச் செல்லும் ஒரு போக்கினைக் காட்டுகின்றது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கை களின் படி காலத்துக்குக் காலம் வெளிநாட்டு ஊழியர்கள் தேவைப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளின் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்பொழுது பூர்த்தியாக்கப்பட்டுள்ள துடன், அந்நாடுகள் தமது உண்ணாட்டு ஊழியர்களை வேலைகளில் அமர்த்தும் முயற்சியை மேற்கொண்டுள்ளது வெளிநாட்டு ஊழியர்களுக்கான கேள்வியைக் குறைத்துள்ளது. எனினும், இப் பிராந்தியத்தில் வீட்டுப் பணிப் பெண்களுக்கான தேவை தொடர்ந்தும் நிலவுவதால், இது இலங்கையை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. இந் நாடுகள் வீட்டுப் பணிப் பெண்களை வேலையில் அமர்த்துவதை ஒரு சமூக அந்தஸ்தாக கணிப்பதால் அவ் வூழியர்களுக்கான கேள்வி தொடர்ந்தும் இருந்து வரும். மத்திய கிழக்கில் அரசியல் ஸ்திரத்தன்மையைக் காட்டும் அறிகுறிகளும் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகளைக் கவர்ச்சியாக்கும் என்பதோடு, இந்நிலைமையானது அரபு-ஸ்ரேல் யுத்த முடிவினையும் லெபனானின் உண்ணாட்டு யுத்த முடிவினையும் அடுத்துத் தோன்றிய தாகும். மேலும், குவைத் ஆக்கிரமிப் பினை அடுத்து குவைத்தும் ஏனைய நேச நாடுகளும் சூடான், எமன், லிபியா ஆகிய நாட்டவர்களைப் பெருமளவில் வெளியேற்றியமையும், அரபு நாடுகளில் ஆசியர்களுக்கான தொழில் வெற்றிடங்கள் அதிகரிக்கக் காரணமாகியுள்ளது.

2000 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு மனிதவலுத் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளின்படி 1994 க்கும் 2000 க்கும் இடையில் வெளிநாட்டு ஊழியர் பங்களிப்பானது 5% ஆல் மட்டுமே வீழ்ச்சியடையும். ஊழியர்களுக்கான கேள்வியில் எதிர்காலத்தில் ஒரு பலமான மாற்றம் நிகழாவிடினும், புள்ளிவிபரங்களின் படி ஊழியர் நிரம்பலில் ஒரு போட்டி ஏற்படலாம். இச் சூழ்நிலையில் இலங்கையானது பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேர்ச்சியற்ற தொழிலாளர் குடியகல்வு

கலாநிதி சந்ரா அத்தநாயக்கா



1970 களின் முற்பகுதியில் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தமது 'ஒபெக்' அமைப்பை நிறுவியதன் பின்னர் செய்யப்பட்ட (சுத்திகரிக்கப் படாத) மசகு எண்ணெய் விலை யேற்றம் காரணமாக அந்நாடுகளுக்குள் 'எண்ணெய் டொலர்கள்' பெருக்கெடுத்துப் பாய்ந்ததுடன், அதன் விளைவாக, வரலாற்றில் என்றுமில்லாதவாறு அந்நாடுகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இந்நாடுகள் உண்ணாட்டு மனிதவலுவைக் கொண்டு மட்டும் தமது அபிவிருத்தித் திட்டங்களைச் சமாளிக்க முடியவில்லை. எனவே, எல்லாத் தரங்களிலுமான மனித வலுவிற்கான கேள்வி-அதாவது, உயர்ந்த, மத்திய, கீழ்மட்ட மனித வலுத் தேவை - உருவாக்கம் பெற்றது. அபிவிருத்தி நடவடிக்கைகளின் தொடக்க கட்டத்தில் இக்கேள்வியானது அண்டைய அரபு நாடுகளான எமன், சூடான், எகிப்து போன்ற நாடுகள் மூலம் ஈடு செய்யப்பட்டது. பின்னர் இவ்வூழியச் சந்தையானது ஏனைய நாடுகளுக்கும் திறந்து விடப்பட்டது. பிலிப்பைன்ஸ், இந்தியா, கொரியா, தாய்லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலிய நாடுகள் இக்கேள்விக்கான எதிர்விளைவைக் காட்டி நின்றன.

1970 களின் பிற்பகுதியில் இலங்கை அரசாங்கம் அறிமுகம் செய்த "சுதந்திர வெளியேற்ற" குடியகல்வுக் கொள்கையின் பின்னரே தொழில் திறனற்ற கீழ்மட்ட ஊழியர் குடியகல்வு மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி சிறப்பான விகிதத்தில் நடைபெற்றது. அண்மைய மதிப்பீடுகளின்படி ஏறத்தாழ 500,000 தொழில் திறனற்ற இலங்கை ஊழியர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிகின்றனர். அதன் காரணமாக சர்வதேச ரீதியான குடியகல்வின் அளவும் பாதிப்பும் இன்று இலங்கையைப் பொறுத்துப் பாரியதாகவும் வெளித்தெரியக் கூடியதாகவும் உள்ளது.

ஆரம்பத்தில் பின்னடைந்ததும் ஓரிடத்தில் தேங்கி நின்றதுமான ஒரு பொருளாதார அடிப்படையில் உருவாகிய இச்செயற்பாடானது பின்னர் சில வெளிவாரியான உந்துதல்களால் முன்னேற்றமடைந்தது. மத்திய கிழக்கு நாட்டு மக்கள் செல்வச் செழிப்பால் மேம்பட்டதாலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாலும் அந்நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களுக்கும் பிள்ளைப் பராமரிப்புப் பெண்களுக்குமான விசேட கேள்வி தோன்றியது. இக் காரணிக்கான மற்றுமொரு உந்துதலாக உண்ணாட்டு வெளிநாட்டு ரீதியில் தனியார் நிறுனங்களும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசுத்துறையும் துரிதமாகத் தோன்றியமை அமைந்தது. குடியகல்வின் அதிகரிப்பினை இந்நிலைமையானது வெகுவாகத் தூண்டியது.

## குடியகல்வுச் "சட்டங்கள்"

உலகின் பல பாகங்களிலும் குடியகல்வின் நேரிடையான தாக்கங்கள் ஆராய்ந்து பதியப்பட்டுள்ளன. குடியகல்வு பற்றிய ஆரம்பகாலக் கோட்பாட்டாளரான E.G.ரெவன்ஸ்ரைன் இத் துறை பற்றிப் பின்வருமாறு கருத்துரைக்கின்றார்:

"குடியகல்வு என்பது வாழ்வும் வளர்ச்சியுமாகும் : ஓரிடத்தில் தேங்கியிருக்கும் சனத்தொகை அவ்விடத்திலேயே பதங்கெட்டு விடும்" . மேலும், 1985 மார்ச் மாதத்தில் அரச புள்ளிவிவர கழகத்தில் சமர்ப்பிக்கப் பட்ட அவரது "குடியகல்வுச் சட்டங்கள்" என்ற ஆக்கத்தில் ஏழு கருது கோள்களை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். இச்சட்டங்களின் இறுதிச் சட்டம் பொருளியல் ஆதிக்கம் சார்பான விடயத்தைச் சுட்டி நிற்கின்றது.


"தீய அல்லது துன்பகரமான சட்டங்கள், வரிச்சுமை, கவர்ச்சியற்ற காலநிலை, அதிருப்தியான சமூகச் சூழல் (அடிமை வியாபாரம், போக்குவரத்து) போன்ற பலவந்தங்கள் குடியகல்வுகளைத் தூண்டியதுடன், இன்னும் தூண்டுகின்றன. பௌதீக வாழ்வில் மேதகு நிலையை எய்த வேண்டும் என்ற இயல்பான ஆர்வத்தில் நிகழும் குடியகல்வுகளோடு மேற்கூறப்பட்ட காரணங்களை எவ்விதத்திலும் சமப்படுத்தி நோக்க முடியாது" (பக்கம் 286).

மத்திய கிழக்கை நோக்கிய தொழில் திறனற்ற ஊழியர்களின் குடியகல்வானது மக்கள் தம் வாழ்வில் பௌதிக ரீதியான உயர்தர நிலையை அடைய வேண்டும் என்ற இயல்பான ஆசையின் வெளிப்பாடாகும். இப்பிரிவிற்கு உட்பட்ட ஊழியர்கள் இலங்கையின் கீழ்மட்டப் பொருளாதாரப் பிரிவிலேயே அடங்குகின்றனர். உண்ணாட்டில் இவர்களின் மாத வருமானம் ரூ.1000 க்கும்

குறைவானதாகும். எனவே, இவ் வகையானோரின் குடியகல்வானது அவர்கள் வறுமைப் பிடியில் இருந்து மீட்சி பெற எடுக்கும் ஒரு முயற்சியாக அமைவதோடு, பொருள்சார் செல்வம் ஈட்டுவதே அவர்களின் முதன்மை நோக்கமாகும்.

வெளியேற்றும் காரணிகளும் காணப் படுகின்றன. இவை வரைபடத்தில் முறையே +, – என்ற குறியீடுகளால் காட்டப்படுகின்றன. 0' கள் மக்கள் பொருட்படுத்தாத இடையூறுகளைக் காட்டுகின்றன. + குறியீட்டுக் காட்டுகளும் – குறியீட்டுக் காட்டுகளும்

குடியகல்வின் மூலம், போக்கிடம் மற்றும் இடையூறுகள்




குடியகல்வினத் தீர்மானிக்கும் காரணிகள்

எவ்வாறாயினும், சமூகத்தின் கீழ்மட்டக் குழுக்களைச் சேர்ந்த அனைவரும், வெளிநாடுகளுக்கான குடியகல்வினை மேற்கொள்வதில்லை; மேலும், அவ்வாறு செல்வதற்கான மன இசைவும் அவர்களிடத்தே காணப்படவில்லை. எவரட் லீ (1966) என்பவரின் குடியகல்வு பற்றிய விருத்தி செய்யப்பட்ட சூழல் மாதிரியைக் கொண்டு இவ்விடயத்தினை மதிப்பீடு செய்யலாம். குடியகல்வு மீதான தீர்மானங்கள் எடுப்பதிலும் குடியகல்வுப் போக்கின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை லீ பின்வரும் நான்கு தலைப்புகளில் சுருக்கித் தந்துள்ளார் :

1. மூல பிரதேசம் தொடர்பான காரணிகள்

2. சென்றடையும் பிரதேசம் தொடர்பான காரணிகள்

3. எதிர்நோக்கும் இடையூறுகள்

4. தனிப்பட்ட காரணிகள்

இங்கு முதல் மூன்று காரணிகளும் திட்டரீதியான அளவினைக் காட்டுகின்றன. ஒவ்வொரு பரப்பிலும் மக்களை அதனில் நிலைக்கச் செய்யும் அல்லது அவர்களைக் கவரும் எண்ணற்ற காரணிகள் காணப்படுகின்றன. அவ்வாறே அவர்களை

மூல, செல்லுமிடங்கள் சார்ந்து ஒவ்வொரு குடியகல்வோரையும் வேறுபடுத்தி வரைவிலக்கணம் செய்கின்றன. மூல பிரதேசத்திலும் செல்லும் பிரதேசத்திலும் காணப்படும் ஒப்பீட்டு ரீதியான விளைவாக குடியகல்வு செயற்படலாம். + இனதும் – இனதும் ஓர் எளிமையான கணிப்பீடு குடியகல்வுச் செயற்பாட்டினை தீர்மானிக்கமாட்டாது. ஒவ்வொரு மூல பிரதேசத்திலும் காணப்படும் ஸ்தம்பித நிலையை நீக்குவதற்குத் தேவையான அசைவுக்குத் துணை நிற்கும் ஏனைய காரணிகள் போது மானதாக இருக்க வேண்டும்.

குடியகல்வு மீதான இடையூறுகள்

மூல பிரதேசத்துக்கும் போய்ச் சேர வேண்டிய பிரதேசத்திற்கும் இடையில் பல்வேறு இடையூறுகள் காணப்படுகின்றன. அவை சிலருக்குக் கடினமானவையாயும் சிலருக்கு வெற்றிகொள்ள முடியாதவையாயும் காணப்படும். இந்த இடையூறுகளில் முக்கியமாக ஆய்வுக்குட்பட்டிருப்பது தூரம் பற்றிய தடையாகும். மற்றும் பௌதிகத் தடைகளாக குடியகல்வுச் சட்டங்களும் செலவுகளும் காணப்படுகின்றன. இவை எல்லா குடியகல்வாளரும் எதிர்கொள்ள வேண்டியனவாகும். – மேலும். கூறப்பட்ட தடைகளின் விளைவு குடியகல்வாளர் எதிர்கொள்ளும் மற்றும் தடைகளிலும் தங்கியிருக்கின்றது. சில குடியகல்வாளரைப் பொறுத்தவரை அவர்கள் எதிர்

கொள்ளும் தடைகளை மிக இலகுவாக வெற்றி கொள்ள முடிவதோடு மற்றும் சிலருக்கு அவற்றை வெற்றி கொள்வது மிகச் சிரமமாகும்.

இறுதியாக, பல்வேறு மட்டங்களில் ஆட்கள் மீது பாதிப்புச் செலுத்துகின்ற அல்லது குடியகல்விற்குத் தடையாக இருக்கின்ற அல்லது அக்குடியகல்வினை இலகுபடுத்துகின்ற பல பிரத்தியேக காரணிகள் உண்டு எனலாம். இப்பிரத்தியேக காரணிகளில் சில அந்நபரின் வாழ்க்கை முழுவதிலும் அல்லது குறைந்தும் கூடியும் நிலையாக இருப்பதோடு மற்றும் சில காரணிகள் வாழ்க்கை வட்டத்தின் அவ்வக் கட்டங்களோடு தொடர்புறுக் காணப்படுகின்றன.



பயணம் தொடங்கும் பயணம் முடியும் இடங்களில் இரு வகைத் தடைக் காரணிகள் இருப்பது, இடைப்பட்ட தடைக்காரணிகள் இருப்பது மற்றும் பிரத்தியேக தடைக்காரணிகள் இருப்பது என்ற அம்சங்கள் உள்ளடக்கிய குடியகல்வு பற்றிய எண்ணக் கருவானது, குடியகல்வு பற்றி நாமறிந்த பல்வேறு விடயங்களின் பால் கவனம் செலுத்தத் தூண்டு கின்றது.

இலங்கையில் இருந்து வெளியேறும் தொழில் திறனற்ற ஊழியர்கள் தாம் மத்திய கிழக்கிற்குச் செல்ல முன்னர் தமது மூல பிரதேசத்திலும் தாம் செல்லும் இடத்திலும் நிலவும் +, – சார் குறியீட்டு நிலைமைகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறே அவர்கள் இடைநடுவில் சந்திக்கும் தடைகளை வெற்றிகொள்ள

வேண்டியதோடு குடியகல முன்னர் தமது தனிப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு தேட வேண்டும். எவ்வாறாயினும், மொத்தச் செயற்பாடு மீதான மீள்மதிப்பீடானது சில வேளை குடியகல்வுப் பிரவாகத்தைத் திசை திருப்பவும் கூடும். மேலும், சில வேளை மூல பிரதேசத்திலும் சென்றடையும் இடத்திலும் செயற்படும் காரணிகள் மேலும் மோசமடைந்து குடியகல்வின் பின்னர் அதற்குரியவரின் முயற்சியை அனர்த்தமாக்கி விடலாம்.

தொழில் திறனற்ற ஒரு சிறு தொகைக் குடியகல்வாளர்- குறிப்பாக ஆண்கள்- நிர்மாணத்துறை வேலைகளிலேயே ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வூழியர் தொகுதியில் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர் - அதாவது, ஒவ்வொரு 5 பேருக்கும்நால்வர் என்ற விகிதத்தில்- வீட்டுப் பணிப்பெண்கள், பிள்ளை பராமரிப்பு ஆயாக்கள் என்ற ரீதியில் பெண்களாகக் காணப்படுகின்றனர்.

**தொழில் திறனற்ற ஊழியர் குடியகல்வினைத் தோற்றுவிக்கும் காரணிகள்:**

கிடைக்கப் பெறும் தகவல்களின் அடிப்படையில் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய தொழில் திறனற்ற ஊழியர் குடியகல்வினைப் பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன :

- ஒப்பீட்டு ரீதியில் ஒரே வகைத் தொழில்களுக்கு உண்ணாட்டில் வழங்கும் வேதனத்தை விட மத்திய கிழக்கு நாடுகள் வழங்கும் வேதனம் உயர்ந்ததாய் இருத்தல்.
- சமமான தொழில்கள் தொடர்பாக உண்ணாட்டில் நிலவும் சமூக, கலாசார மனப்பாங்குகள் வெளிநாடுகளைப் பொறுத்து வேறுபடல்.
- சமூக, கலாசார விழுமியங்களின் மீதான நகரமயமாக்கம், கல்வி, நவீனத்துவம் போன்ற தொடர்ந்து வரும் மாற்றங்கள் சார்ந்த பாதிப்பு.
- இந்நாடுகளில் தொழில் புரிந்து பயன்பெற்ற நண்பர், உறவினரின் (தூண்டற்) செல்வாக்கு.
- வெளியேறுவதற்கான வசதிகள்
- இலவச உணவு, இருப்பிட வசதி, உடை, இலவச பயணம் போன்ற மேலதிகப் பயன்கள். மேலும், தொழில்களுக்குச் செல்வோர் தொழில்புரியும் குறுகிய காலத்தில் கணிசமானளவு பணத்தைச் சேமிக்கக் கூடியதாய் இருத்தல்.
- தொழில் புரிவோர் தாம் ஈட்டும் பணத்தை சுதந்திரமாகவும் திரவ நிலையிலும் தம் நாட்டுக்கு அனுப்பக் கூடிய வாய்ப்பு.
- வறுமைப் பிடியில் இருந்து விடுபடுவதற்காக உண்ணாட்டில் ஒரு தொழிலைப் பெறும் வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல்.

மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய ஊழியர் குடியகல்வினைத் தீர்மானிக்கும் காரணிகள் மேற்போந்தவற்றில் எதுவாயினும், பொருளாதார நலன் கருதிய நோக்கத்தினை இங்கு புறம்பாக வலியுறுத்த வேண்டியதில்லை. சுதந்திரமான குடியகல்வுக் கொள்கையினைப் பின்பற்றும் இலங்கை அரசாங்கம் அதன் மூலம் பல்வேறு பயன்களை அடையப் பெற்றுள்ளது. நாட்டில் நிறை தொழிலாக்கம், தொழிலின்மையைக் குறைத்தல் என்ற பிரச்சினையை குறிப்பிட்டதோர் அளவிற்குத் தீர்த்து வைத்தல் ஒரு புறமிருக்க, தொழில் திறனை வளர்ப்பதற்காக இலங்கை பெருமளவு நிதியினைச் செலவு செய்து உருவாக்கப்பட்டவர்களை விட தொழில் திறனற்ற தொழிலாளர்களின் குடியகல்வு வேலை வாய்ப்புகள் நாட்டிற்கு அதிக நிதி வருவாயை ஈட்டித் தருவதில் பங்களிப்புச் செய்துள்ளன. அது மட்டுமல்லாது, இலங்கையில் கீழ் மட்ட வருமானம் பெறும் பிரிவினர் தாம் உழைக்கும் வெளிநாட்டுத் தொழில்கள் மூலமான வருமானம் காரணமாக வருமான ஏற்றத்தாழ்வையும் குறைத்துள்ளனர். ஆரம்ப கால கட்டத்தில் தொழில்களுக்காகக் குடிபெயர்ந்து சென்றோர் நகர்ப்புறப் பகுதிகளைச் சேர்ந்தோராயினும் இன்று இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் இருந்தும் ஆட்கள் வெளிநாட்டுத் தொழில்களுக்குச் செல்கின்றனர். எனவே, இது இப்பொழுது ஒரு நாடளாவிய செயற்பாடாகும். ஊழியர் குடியகல்வு காரணமாக சர்வதேச ரீதியாக நாடுகளுடன் நட்புமுறைத் தொடர்புகளும் வளர்ந்துள்ளன. எனவே, இலங்கை, மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தனது தொழில் திறனற்ற ஊழியர்கள் செல்லும் விடயத்தில் நேரிடையான அணுகுமுறையைப் பின்பற்றுவது தெளிவாகத் தெரிகின்றது. இவ்வாறு வெளியேறுவோர்களுக்கான குறைந்தபட்ச சம்பளத்தை விதிக்கும் நடவடிக்கையையும் இலங்கை மேற்கொண்டுள்ளது. பயண முடிவிடங்களில் இலங்கைத் தூதராலயங்கள் குடிபெயர்ந்து செல்வோருக்கு குறிப்பிட்ட சேவைகளையும் நல்குகின்றன.

இந்நாடுகளில் தொழில் புரியும் தொழில் திறனற்ற ஊழியா சிலர் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளமை பற்றிய செய்திகள் உண்ணாட்டு செய்தித்தாள்களில் வெளியிடப்படினும், அந்நாடுகளை நோக்கிய ஊழியர் வெளியேறுகையானது தொடர்ச்சியாகவே நடைபெறுகின்றது. அவர்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகளில் ஒப்பந்தத்திற்கு முரணான குறைந்த வேதனம், மேலதிக வேலை, ஓய்வு நேரக் குறைவு, எசமானர்களின் தாக்குதல்கள், எசமானரின் முறைகேடான நடத்தை, தரம் குறைந்த வாழ்க்கை வசதிகள், சிலவேளைகளில் போதிய உணவு தரப்படாமை என்பன அடங்குகின்றன. தொடர்ச்சியாகவே இம் முறைப்பாடுகள் செய்யப்படினும் தம் வேலைகளை விட்டு விடும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. இவ்வாறான துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் வெளிநாட்டுத் தொழில்களைத் தேடிப்பெறும் விடயமாக அரசாங்கத்தின் முறையான திட்டங்கள் இல்லாவிடினும் ஊழியர்கள் தாமாக அத்தொழில்களை நாடும் ஊக்கம் குறையவில்லை. எனவே, அவர்களை வெளிநாட்டுத் தொழில்களை நோக்கித் தள்ளிவிடும் காரணிகள் எவ்வளவு வலுவானவை என்பதும், தொழில் திறனற்றோரின் பொருளாதார அபிலாஷைகள் எவ்வளவு முதன்மை பெறுகின்றன என்பதும் இங்கு வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மையாகும்.

36 ஆம் பக்கம் பார்க்க)

# "பெண்கள் வெளிநாடுகளில் வீட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது. அவர்கள் உயர் தொழில்களுக்கு மட்டுமே பயிற்றுவிக்கப்பட வேண்டும்"

கருத்து

விக்டர் ஐவன் கூறுகின்றார்

**வளைகுடா நாடுகளில் ஆசியர்கள் - குறிப்பாகப் பெண்கள் - ஏன் பாலியல் ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர் ?**

இதற்குப் பல காரணங்கள் உண்டு. எனது அபிப்பிராயப்படி மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆரம்ப கட்டத்தில் முதல் குழுவாக நமது சமூகத்தில் இருந்து அனுப்பப்பட்டவர்கள் நம்பகமும் கற்பொழுக்கமும் குறைந்த பெண்களாவர். 1970 களின் பிற்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளில் முதல் தடவையாகத் தொழில் வாய்ப்புகளுக்கான சந்தை திறக்கப்பட்ட பொழுது வீட்டுப் பணிகளுக்கான பெண்கள் சர்வதேச சந்தையில் முதன் முறையாக நிரம்பல் செய்யப்பட்டனர். பழைமைப் பண்புகளைக்கொண்ட இலங்கைப் பெண்கள் கலாசார ரீதியாக வீடு என்ற எலலைக்குள் வாழ்ந்ததால் புதிய வெளிநாட்டுத்தொழில்களுக்குச் செல்ல அஞ்சினர். இது இவ்வாறிருக்க, உண்ணாட்டில் இவர்கள் பல்வேறு பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்கியதுடன் மத்திய கிழக்கில் கவர்ச்சியான சம்பளமும் வழங்கப்பட்டது. எனவே, விபசாரிகள் போன்ற கற்பொழுக்கம் குறைந்த பெண்களும் முடிச்சு மாறுதல் போன்ற குற்றத் தொழில்கள் மற்றும் நிரந்தரமற்ற தரங்குறைந்த தொழில்கள் செய்தோரும் முகவர்களால் ஆசை காட்டி (ஏமாற்றி) அனுப்பப்பட்டனர். இம்முகவர்கள் அன்றும் இன்றும் தொழில்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதைவிட பல தரத்தோரையும் கலப்பாகத் தெரிவு செய்து அனுப்புவதுடன் தாம் பெறும் 'கமிஷன்' பணத்திலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றனர். தொழில் தரம் பற்றிய கவனக் குறைவு இலங்கையில் காணப்படும் ஒரு பொதுப் பிரச்சினையாகும்.

**இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளை நாடுவதை நீங்கள் முற்றாக எதிர்ப்பதென்பது அதன் பொருளாகுமா?**

இல்லை. இலங்கைப் பெண்கள் வெளிநாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக இருப்பதையே எதிர்க்கின்றேன். பொருளாதார ரீதியாகக் கவனம் கொள்ளும்பொழுது போதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் இலங்கை பொருளாதார அமைப்பின் இயலாமை காரணமாக அவர்கள் நிச்சயமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நாட வேண்டியுள்ளனர். உண்ணாட்டுப் (வசதிகளை) பயன்களைப் பெற்றுக்கொடுக்காத நிலையில் அவர்களை நாட்டுக்குள் தடுத்து வைப்பதானது எவ்விதத்திலும் நியாயமாகாது. இன்றைய திறந்த பொருளாதார முறையில் ஒருவரின் சம்பளத்தில் மட்டும் ஒரு குடும்பம் தங்கி வாழ்வது சிரமமானது. ஆனால், அவர்கள் பயிற்றப்பட்ட தொழில்களையே நாடுதல் வேண்டும். அதாவது தாதித்தொழில், வர்த்தக சிப்பந்தித் தொழில், ஆடைக் கைத்தொழில் முதலியவற்றையே நான் இங்கு கருதுகின்றேன்.

மத்திய கிழக்கானது இன்று அதற்குரிய வாழ்வு வழிமுறைகளைக்கொண்ட ஒரு சிக்கலான பிராந்தியமாகும். ஒன்றன்பின் உன்றாக வந்த அரசாங்கங்கள் இந்நிலைமையை விளங்கத் தவறியதுடன் நம் நாட்டுப் பெண்கள் அயற் சூழல் நாடுசளில் தொழில்வாய்ப்புகளில் பிரவேசிக்கும்பொழுது அவ்வமுக்கத்திற்குப் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்யவும் தவறியுள்ளன. இன்றுவரை அரசாங்கம் இது தொடர்பானதொரு சட்ட ஒழுங்கமைப்பு இருக்க வேண்டும் என்ற தேவையையும் உணரத் தவறியுள்ளது. ஆனால், இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் தம் ஊரியர்களைக் காப்பதற்கு சட்டக் காப்பீடுகளை ஏலவே செய்துள்ளன. அந்நாடுகளின் ஊழியர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பொறிமுறையின் ஊடாக அவர்களின் தொழில் கொள்வோரிடம் விளக்கப்பத்திரம் (Clearance) பெற்ற பின்னரே அத்தொழில்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். பெண்கள் குழுக்களாக வேலை செய்யும்பொழுது அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. வாழ்க்கையின் பல அம்சங்கள் தொடர்பாக அவர்களுக்குக் குரல் எழுப்பலாம். ஒரு வீட்டு எசமானின் தயவில் வாழும் ஒரு பணிப் பெண்ணுக்கு அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடையா.

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை எவ்வாறு அதிகரிப்பதென்ற விடயத்தை அரசாங்கம் விளங்கிக் கொள்ளவில்லை. நமது பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகப் போகவேண்டியதில்லை: பீஜி தீவுகள் போன்ற அண்டைய நாடுகளில் போதுமான வேலைவாய்ப்புகள் உண்டு. எடுத்துக்காட்டாக அந்நாடுகளில் ஆடைக் கைத்தொழில்களுக்கு போதுமான வேதனம் வழங்கப்படுகின்றது. தனியார் முகவர் நிறுவனங்களுக்கான ஒரு காத்திரமான திட்டத்தினை வகுக்குமாறு கௌரவ தொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ச அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். அம் முகவர் நிலையங்களுக்கு அரசாங்கம் சதவீத அளவில் ஆட்களை வழங்கலாம் அல்லது நிலவும் தொழில் வெற்றிடங்களுக்கு ஏற்றபடி ஆட்களை வழங்கலாம். இந்நடவடிக்கையானது மத்திய கிழக்கில் மட்டுமல்லாது பரவலாக முழு உலகிலும் நல்ல தொழில்களைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பினை உருவாக்கும். நம்பகமான வெளிநாட்டுத் தொழில் முகவர்களையும் இத்திட்டம் ஈர்க்கலாம். அரசாங்கம் இவ்வாறானதொரு முகவர் முறை சார்ந்த மூலதனத்தைக் கொண்டிருந்தால் தரப்படும் தொழில்களின் தன்மை பற்றியும் அவற்றிற்கான நிபந்தனைகள் பற்றியும் குரல் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மூலம் குறிப்பிடத்தக்க வருமானம் நாட்டுக்குள் வருவதால் இவ்வாறான திட்டங்களால் அரசாங்கம் அவ்வருமானத்தை இழக்கின்ற நிலைக்கு ஆளாக முடியாது. விஞ்ஞானத்துறை சார்ந்த பேனா பிடிக்கும் உயர் ஊழியரை அரசாங்கம் பயிற்றுவிக்க ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் செலவாகின்றது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்க உதாரணமாகும். ஆனால், தாதித் தொழில்,

ஆடைக் கைத்தொழில் போன்ற துறையினரைப் பயிற்றுவிக்கும் செலவு மிகக் குறைவானதாகும். ஏனெனில், அவர்களை ஓர் இலட்சம் ரூபாய் செலவில் பயிற்றுவித்து வெளிநாட்டுக்கும் அனுப்பலாம்.

மேற்கூறப்பட்ட தொழில் துறைகளைச் சார்ந்தவர்களை பயிற்றுவிப்பதால் வீட்டுப் பணித்துறை சார் ஊழியர்கள் நஷ்டமடைய மாட்டார்களா ?

இல்லை. வீட்டுப் பணித்துறைக்குத் தகுதியாக இருக்கின்றவர்களை வர்த்தக விற்பனைத்துறை, ஆடைக்கைத் தொழில்துறை என்பவற்றில் இலகுவாகப் பயிற்றுவிக்கப்படலாம். கிரீஸ், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் வர்த்தக விற்பனை போன்ற துறைகளில் நல்ல வேலை வாய்ப்புகள் நிலவுகின்றன. எழுத்தறிவில் ஒரு முன்னணி நாடு என்ற வகையில் நாம் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவுவதன் மூலம் உண்ணாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் நிலவும் தாதிமார்களுக்கான தொழிற் சந்தைக் கேள்வியைப் பயன்படுத்தவாம். அபிவிருத்தியடைந்த நாடுகள் வழக்கமாக அந்நாடுகளில் நிலவும் தொழில்சார் தரவுகளையும் கேள்வியையும் திரட்டி உண்ணாட்டுச் சந்தையில் அவற்றிற்கு இருக்கும் தொழில் வாய்ப்புக்களை விளம்பரப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 2000 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிகப் பாரிய அளவிலான இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்வதற்காக பல்லாயிரக்கணக்கான தொழிற்படை இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது. இதன் ஆரம்ப நிர்மாண வேலைகளுக்காகத் தேவைப்படும் தொழில் திறன் சார் மற்றும் அரைத் தொழில் திறன் சார் வேலைப்படையினர் தருவிப்பது பற்றித் திட்டமிடப்பட வேண்டியுள்ளது. இலங்கைக்கு இத்துறையில் காலடி எடுத்து வைக்கலாம். சில வேளை அரசாங்கத்தின் உதவியுடனேனும் நமது தொழிலற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும். எவ்வாறாயினும் அரசாங்கம் இவ்வேலைகட்கான உள்ளார்ந்த ஆற்றல்களின் பொறுப்பேற்றலை இன்னும் செய்யவில்லை. இவ்வாறான தொழில்வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக தொடக்கச் செலவாக அரசாங்கம் 10 இலட்ச ரூபாவை செலவு செய்ய வேண்டியுள்ளது. அரசாங்கம் ஒருவரை அவுஸ்திரேலியாவுக்கத் தொழில் வாய்ப்புக்கு அனுப்ப 1 இலட்சம் ரூபாய் செலவுசெய்ய வேண்டும். மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புகளை நாடும் முஸ்லிம்களைப் பொறுத்த வரை முஸ்லிம் தொழில் முகவர்கள் அவர்களின் வேலையமர்த்தற் செலவுடன் விமானப் பயணச் செலவைத்தாங்க வேண்டும். எவ்வாறாயினும் வறிய சிங்களக் கிராமத்தவர்களைப் பொறுத்தவரை தொழில் முகவர்கள் அவர்களுக்கான செலவுகளைத் தாங்குவதில்லை. இவர்கள் விடயத்தில் நடுவர்கள் பணம் செலுத்துவதுடன் கிராமப்புறத்தோன் மாதத்துக்கு 20% என்றபடி வட்டிச் சுமைக்கு ஆளாகின்றான். இறுதியில் இந்நிலைமையானது அவனை முன்னரிலும் மோசமான நிலைக்குத் தள்ளிவிடுகின்றது.

எனவே, அரசாங்கத்தினதும் சமுகத்தினதும் தவறு காரணமாக இப்பெண்கள் விபச்சாரம்செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். தற்போது மத்திய கிழக்கில் தொழில்புரியும் 10000 முதல் 15000 வரையிலானவர்கள் தாம் பட்ட கடனை தமது சம்பாத்தியத்தைக் கொண்டு திரும்பச் செலுத்தமுடியாத காரணத்தால் தமது குடும்பத்துக்கும் நாட்டுக்கும் முகம் கொடுக்கமுடியாமல் தாய் நாடு திரும்பாது உள்ளனர். தற்போது பொருளாதாரம் வெளிநாட்டுப் பண அனுப்புகையிலேயே தங்கியுள்ளது. வெளிநாட்டுப் பண அனுப்புகை 1993 இல் 30590 மில். ரூபாயாக இருந்தது. அவ்வருடத்தில் தேயிலை ஏற்றுமதி வருமானம் 19911 மில். ரூபாய், சுற்றுலாத்துறையால் பெறப்பட்ட வருமானம் 10000 மி.ரூபாய் மட்டுமே. முதலீட்டுச் சபைத்திட்டங்கள் மூலமான உச்ச சம்பாத்தியம் 76,740 மில்லியன்களாக இருப்பினும் மூலப்பொருட்கள் மற்றும் இணைந்த செலவுகளைக் கவனத்தில் கொள்ளுமிடத்து தேறிய இலாபம் 23000 மில். ரூபாவாகக் குறைகின்றது. மொத்த சம்பாத்தியத்தில் 70% மான தொகை உற்பத்திச் செலவுகளுக்கும் உற்பத்தியாளரின் இலாபத் துக்குமாகக் கவரப்படுகின்றது. வெளிநாட்டுத் தொழில்களால் பொருளாதாரத்திற்குப் பாரிய நன்மைகள் கிடைப்பினும் துரதிர்ஷ்டவசமாக அரசாங்கம் அவர்கள் வெளிநாடுகளில் இருக்கும் காலத்தில் அவர்கள் மீது கவனம் செலுத்துவதில்லை. குடியகல்வோரை வீட்டுப் பணிகளுக்காகப் பயிற்றுவதைவிட ஆடைக் கைத்தொழில் துறையில் பயிற்றுவிப்பதானது அவர்களது தனிப்பட்ட அந்தஸ்தைக் காட்ட உதவுவதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் குறைக்கும். அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தைப் பயனுள்ளதாகச் செலவு செய்யவும் கற்றுக் கொடுக்க வேண்டும். பல எடுத்துக்காட்டுகளின்படி மத்திய கிழக்குத் தொழில்களுக்குச் செல்வோர் தாம் சம்பாதித்துச் சேகரிக்கும் முழுப் பணத்தையும் விமான நிலையத்தில் தீர்வையற்ற பொருட்களை வாங்குவதில் செலவு செய்கின்றனர்.

வெளிநாட்டுத் தொழில்புரிவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு நீங்கள் கூறும் யோசனைகள் என்ன ?

குடியகல்வோர் இங்கும் வெளிநாட்டிலும் தமது தொழில் சார்பாக நியாயமான தொடர்புகளை வளர்த்துக் கொள்வதை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அரசு இவ்விடயத்தில் முக்கிய பாத்திரத்தை ஏற்றுச் செயற்பட வேண்டும்.

(அ) சேமிப்புத் திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டுமென முன் மொழிகின்றேன். தொழிலுக்காக வெளியேறுவோர் தமது சேமிப்புகளை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். உதாரணமாக, தாட்ச்சர் அரசாங்கம் பிரித்தானிய 'ரெலிகொம்' நிறுவனத்தைத் தனியார் மயப்படுத்தியபோது கம்பெனி தனியாருக்கும் பங்குகளைக் கொடுப்பதற்கு மேலாக தனி நபர்கள் அதன் பங்குகளை வாங்க ஊக்குவித்தது. அரசாங்கத்தின் இந்த ஊக்குவிப்பு ரீதியானதும் முதனிலைப்படுத்தலுமான விளம்பரத்தை அடுத்து இரண்டு மில்லியன் பங்குதாரர்கள் அதற்குள் பிரவேசித்தனர்.

(ஆ) அரசாங்கம் தொழில்களை வகைப்படுத்த வேண்டியதுடன் அந்த ஒவ்வொரு தொழில் வகைக்கும் தொழில் வழங்கும் நாடுகள் செலுத்த வேண்டிய வேதனத்தை அந்நாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

(இ) அரசாங்கம் தொழிலுக்காக வெளியேறுவோரின் செலவுகளைத் தானே ஏற்க வேண்டும். வெளியேறுவோர் தாம் அதற்காக மீளக்கொடுக்கும் பணத்தை விட அரசாங்கத்தின் செலவு அதிகமாக இருக்கும்.

(ஈ) அரசாங்கம் ஏனைய வங்கிச் சேவைகளோடும் கடன் வழங்கும் நிறுவனங்களோடும் ஒன்றிணைந்து வெளியேறுவோருக்குக் குறைந்த வட்டி வீதங்களில் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அத்துடனே அரசாங்கம் தொழில்களில் இருந்து திரும்பி வருவோருக்கு நியாய விலைகளில் நிலங்களை வாங்க விசேட உதவிகள் செய்ய முடியும். உதாரணமாக, 1980 களின் தொடக்கத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்த முதல் குழுவிற்கு வீடு கட்டுவதற்காக வாங்கிய நிலங்களுக்கு சலுகை விலைகள் விதிக்கப்பட்டன.

(உ) இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து செல்லும் தொழிலாளரின் பாதுகாப்பை முகவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் வெளியேறுவோரிடம் 'கமிஷன்' பணம் அறவிடக்கூடாதநோடு அரசாங்கம் உரிய முகவர்களுக்கு அக்கமிஷனை வழங்க வேண்டும்.

(ஊ) தனது மக்கள் வீட்டுப் பணிகளிலும் தகுதி குறைந்த வேலைகளிலும் ஈடுபடுவது அரசாங்கத்துக்கு ஒரு மனக் கிலேசத்தை ஏற்படுத்தும். எனவே, வெளிநாட்டுத் தொழில்களை நாடுவோருக்கு பொருத்தமானதும் கௌரவமானதுமான தொழில்களைப் பெற்றுக் கொள்ளப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். உண்ணாட்டிலும் சர்வதேச

ரீதியாகவும் முக்கியத்துவம் பெறும்தொழில்களில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

நமது மொத்தமான கல்விமுறை, தொழில்களை முன்னோக்கி இளைஞர்களை அவற்றின் பால் ஊக்குவிக்கும் வகையில் திட்டமிடப்படவில்லை. ஆனால், ஏனைய பல நாடுகள் ஆரம்பக் கல்வி மட்டத்தில் இருந்தே மாணவர்கள் குறிப்பிட்டதொரு தொழிலை இலக்காகக்கொண்டு கல்வி கற்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்குப் போதிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தொழிற்பயிற்சிச் செலவுகளைச் சந்திப்பதற்காக வழங்கப்பட்ட மானியமான 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை பயன்படுத்தவில்லை. இவ்வாறான மானியங்களை பல்வேறுபட்ட தொழில்களுக்கான பயிற்சி நிலையங்களை அமைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக குடியகல்வோரின் உளச்சார்புக்கும் கல்வித் தகைமைக்கும் பொருத்தமாக கனனி முறை, ஆடைக் கைத்தொழில், மொழிகள் கற்றல், கப்பற்றொழில் போன்ற பயிற்சித்துறைகளைக் கவனத்தில் கொள்ளலாம். ஆங்கிலம் தொடர்பு மொழியாதலால் அது தனியாகக் கற்பிக்கப்பட வேண்டும். ஆகவே, அரசாங்கத்தின் உதவியுடன் இயங்கும் குடியகல்வோர் தொழில் பயிற்சித்திட்டங்களின் பால் தயக்கமின்றித் தனியார் கம்பெனிகள் கவரப்படுவதற்கும், உள்ளார்ந்த ஆற்றல் கொண்ட குறித்த தொழில்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துவதில் அக்கம்பெனிகளை போட்டியிடச்ச செய்வதற்குமான சூழலை உருவாக்க முடியும்.

(எ) தற்போது வெளிநாடுகளுக்குக் குடியகல்வோர் நலனைக் கவனிப்பதற்கு ஒரு திட்டம் இல்லாத அதேவேளை இலங்கையில் அவர்களால் விட்டுச் செல்லப்படும் குடும்பங்களைப் பொறுத்தும் நிலைமை அதுவே. இவ்விடயம் தொடர்பாக மரபுரீதியான உபாயம் குறுகிய பங்கினையே வகிக்கின்றது. முக்கியமாக ஒரு நலன்புரி அலுவலர் தொழில் கொள்ளும் நாட்டில் குடியகல்வோரின் அடிநிலையில் இருந்தே அவர்களைக் கவனிக்கவும் மீளாய்வு செய்யவும் தொடர்பாடவும் முடியும். 25000 பேர்களுக்கு மேற்பட்ட வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கை வேலைப்படையினரின் நலன்களைக் கவனிக்க அந்த ஒவ்வொரு நாட்டிலும் ஒரு நலன்புரி அலுவலரை நியமிக்க வேண்டும் என்ற வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்தின் திட்டம் பற்றி நானறிவேன். வெளிநாட்டுத் தூதரக ஆளணியினர் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் மாற்றப் படுவதும் அவ்வுத்தியோகத்தர் குறைந்தளவிலேனும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. மறுபுறம் நீண்ட காலம் தங்கியிருக்கும் தூதரக ஊழியர்கள் இலகுவாகவே வெளிவாரியான ஊழற் செல்வாக்கு களுக்கு ஆளாவதுடன் அவர்கள் பிழையான முகாமைத்துவ நடவடிக்கைகளிலும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

(ஏ) குடியகல்வோரின் பருமன் மிக்கதும் பல்வேறு பட்டதுமான பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாட்டு அமைச்சினால் மட்டும் இயலாதுள்ளதால் ஊழியர் குடியகல்விற்கென தனியானதொரு அமைச்சினை நிறுவுவது மிகப் பயனுள்ளதாகும். இந் நோக்கிற்காக வெளிநாடுகளில் தவிக்கவிடப்பட்டுள்ள ஊழியர்களைத் திருப்பியழைப்பதற்கான நிதியத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

(ஐ) ஊழியர் குடியகல்வு தொடர்பாக பல வெறுக்கத்தக்க காரணிகள் காணப்படுகின்றன. குறிப்பாக அவை விவாகமான பெண்கள் தொடர்பானவை. அதிகப்பட்சமாக அவர்களின் குடும்பங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. குடியகல்வோரும் அவர்களின் குடும்பங்களும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை கையாள்வதற்கு நிறுவனங்கள் இருக்க வேண்டும். தனியாக விடப்படும் குடும்பங்களின் தேவைகளையும் முன்னேற்றத்தையும் கவனிப்பதற்கு நலன்புரி அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். உதாரணமாக பிள்ளைகளின் நலன்கள், அவர்களின் பாடசாலைச் செயற்பாடுகள் என்பன.

(ஒ) குடியகல்வோர் தாம் எதிர்பார்த்துச் செல்லும் தொழில்களுக் கான தகுதிகள் என்ன என்பது பற்றி ஆலோசனை கூறப்பட வேண்டும். அது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைக்க உதவும். உதாரணமாக, வெளிநாட்டில் மோட்டார் சாரதித் தொழிலை எதிர்பார்த்துச் செல்வோருக்கு சர்வதேச வாகன சாரதி உத்தரவுப்பத்திரம் இருத்தல் வேண்டும். அதனைப் பெற்றுக் கொள்ளும் ஆலோசனை அவர்களுக்கு முன்கூட்டியே கொடுக்கப்பட வேண்டும். சர்வதேச வாகனம் செலுத்தல் உத்தரவுப் பத்திரமற்றோர் எதிர்நோக்கும் சங்கடங்களுக்கு பல எடுத்துக்காட்டுகள் உண்டு. குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரம் கிடைக்கும் வரை பல மாதங்கள் தொழில் கொள்வோரின் வீட்டில் தங்கி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறது. இக்கால கட்டத்தில் அவர்களின் இருப்பு வசதிக்கும் உணவுக்கும் ஈடாக அவ்வெசமானர்களுக்கு பல இழிவான கடமைகளைச் செய்யவேண்டி ஏற்படுகின்றது.

(ஓ) நிரந்தர உடல் ஊனங்களுக்கு ஆளாகின்றவர்களுக்கு இப்போது காப்புறுதி வழங்கப்படுகின்றது. உள ஊனங்களுக்குமாக அதனை விரிவாக்குவது கட்டாயமாகும். அரசாங்கம் உண்ணாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை புரியும் தனது பிரசைகள் தொடர்பான எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான உபாயங்களையும் திட்டங்களையும் கவனமாகத் தீட்டி வெளிநாடுகளுக்குக் குடியகல்வோர் பிரச்சினைகளைக் குறைக்கவும் வகை செய்ய வேண்டியதோடு இதற்காகப் படிப்படியான அணுகுமுறை நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.



# மகளிர் குடியகல்வு : வலி மிகுந்த மாற்றம்

மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் செழிப்பு நிலையின் உச்ச கட்டத்தில் அந்நாடுகளில் தோன்றிய தொழில் திறனற்ற , அரைத் தொழில் தேர்ச்சி ஊழியர்களுக்கான மற்றும் மனித வலுவிற்கான கேள்வியானது, இலங்கையின் தொழில் இன்மைப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு வசதியான வாயிலைத் திறந்துவிட்டது. இத் தொழில்களைத் தேடிச் செல்வோருக்கு இலங்கை அரசாங்கம் பல வசதிகளைச் செய்து கொடுத்தது. உதாரணமாக, வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகளைப் பெறுவதில் உள்ள சட்டங்களை அரசாங்கம் தளர்த்தியது.

1977 க்கு பிற்பட்ட கால கட்டத்தில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதில் தனியார் துறைக்கு முன்னுரிமை கொடுக்கும் கொள்கை அரசாங்கத்தால் பின்பற்றப்பட்டது. எனினும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கும் தொழில் முகவர் நிறுவனங்கள் மீது, அரசின் கட்டுப்பாட்டை நிலை நிறுத்துவதற்காக ஒட்டுமொத்த குடியகல்வோர் கொள்கைத் தீர்மானம் அரசினாலேயே எடுக்கப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டும் முக்கிய துறையாக வெளிநாட்டுத் தொழில் வருமானம் காணப்பட்ட போதும், அவ் வருமானத்தை பெற்றுத் தருவோரின் நிலைமை எவ்விதத்திலும் திருப்தியாக இருக்கவில்லை. சப்பற் பொருட்களை ஏற்றுமதி செய்வது போலும் மாடுகள் போன்ற மிருகங்களை ஏற்றுமதி செய்வது போலும் மனிதர்களை கணிக்க முடியாது. வெளிவாரியான சூழல் மாற்றங்களுக்கு இலகுவாக இசைந்து கொடுப்பது, மனித நடத்தைப் போக்கை வரைவிலக்கணம் செய்ய முடியாமை போன்ற காரணங்களால் ஏற்றுமதி செய்யப்படும் ஊழியர்களின் நலனை உத்தரவாதப்படுத்தும் நோக்கம் கொண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் போலவே வேலை வழங்கும் நாடுகளிலும் - குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் - நடைமுறையில் உள்ள தொழிற் சட்டங்கள் வீட்டுத்துறை ஊழியர்களைப் பாதுகாப்பன அல்ல. மத்தியகால அடிமைத்துறைச் சேவைக்கு ஒத்ததாக இருப்பது இந்த வீட்டுத் துறை ஊழியத்தின் முக்கியமானதோர் இயல்பாகும். இங்கு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளின் எசமானர்கள் தாம் கொண்டுள்ள செல்வச் செருக்கு காரணமாக தம் வீட்டுப் பணிப் பெண்களின் உடலும் ஆத்மாவும் தமக்குச் சொந்தமானவை எனக் கருதுகின்றனர்.



வெளிநாடுகளில் - குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில்- தொழில் புரியும் ஆசியத் தொழிலாளர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றமையும் ஊழியச் சுரண்டலுக்கு ஆளாகின்றமையும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளன. அவ்வாறே அவ்வூழியர்களைச் சேவையில் ஈடுபடுத்துவோர் தொடர்பான கட்டுப்பாட்டுச் சட்டங்களின் தேவையும், குடியகல்வோர் நலன்புரி வசதிகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் விசாரணை நோக்கங்களும் கட்டாயமானது என்பது உணரப்படுகின்றது.

இலங்கையில் இருந்து குடியகன்று செல்லும் ஊழியர்களில் பெருந் தொகையானோர் வீட்டுப் பணிப் பெண்களாவர். 1994 இல் மேற்கொள்ளப்பட்ட விமான நிலைய மதிப்பீட்டின்படி வெளிநாட்டுத் தொழில்களை நாடி நம் நாட்டில் இருந்து சென்ற 130,027 பேரில் 102,661 பேர் - அதாவது, 78.9% - வீட்டுப் பணிப் பெண்களாக இருந்தனர். அவர்களின் 13,240 வீட்டுப் பணிப் பெண்கள் சவுதி அரேபியாவிலும் 4,382 பேர் ஐக்கிய அரபு அமீர் குடியரசிலும், 13,963 பேர் குவைத்திலும், 1,168 பேர் ஓமானிலும் 850 பேர் பஹ்ரைனிலும் சேவை செய்தனர். அவர்களின் மொத்தத் தொகை 33,603 ஆக இருந்ததோடு, அது 1990 ஆம் ஆண்டின் மொத்த தொகையான 19,571 லும் இரு மடங்குக்கு அண்மித்ததாகும். அது 1986 ஆம் ஆண்டின் 4,898 லும் ஏழு மடங்குகளாகும்.

கிடைக்கப் பெறும் சான்றுகளின் படி அரசின் தலையீடும், அது வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடும் தனது நாட்டவர் சார்பில் ஒரு நடுவர் போல செயற்படுவதும் ஊழியச் சுரண்டலின் அளவினைக் குறைக்கவும் சில சமயங்களில பூரணமாகவே நடவடிக்கைகளை மாற்றியமைக்க முடியும் என்பதும் தெரிய வந்துள்ளது.

அபூதாபியில் தொழில் பெறுவதற்காக தனது வயதை 28 எனப் பிழையான தகவல்களைக் கொடுத்து 16 வயதுடைய பிலிப்பைன்ஸ் யுவதியான சாரா பபலகன் என்பவரை இங்கு உதாரணமாக எடுப்போம். அவள் தனது எசமானால் கெடுக்கப் பட்ட பின்னர் அவரைச் கத்தியால் குத்திக்கொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டாள். அவளுக்கு மன்னிப்பு வழங்குமாறு பிலிப்பைன்ஸ் அரசாங்கமும் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளும் பரவலாக விடுத்த வேண்டுகோளின் பேரில் அவளுக்கான மரண தண்டனை இரத்துச் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படாத ஒரு தொகைப் பணம் நட்டஈடாக வழங்கப்பட வேண்டும் என விதிக்கப்பட்டது. இந்த 'இரத்தப் பணம்' என்ற தண்டனை பழைய கோத்திரங்களுக்கிடையில் பிணக்குத் தீர்க்கும் பண்டைய பெடொய்ன் முறையாகும். அவ்வாறே

குறிப்பிட்ட கால எல்லைக்குள் 20 கசையடிகளும் அவளுக்கு விதிக்கப் பட்டன.

மறுபுறம் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்ணான ப்ளோர் கொனரெம்ப் லேசன் என்பவர் இரட்டைக் கொலைக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டதை ராமோஸ் அரசாங்கம் விழிப்பாகச் செயற்பட்டிருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். அக்குற்றச்சாட்டானது அவளின் எசமானினால் இட்டுக்கட்டப் பட்டது என்பதற்கு சாட்சிகள் இருந்தன.

மத்திய கிழக்கில் நிகழ்ந்த சோகமயமான மரணங்களில் இலங்கையைப் பொறுத்தும் குறைவில்லை. மத்திய கிழக்குக் கலாசாரத்தை விளங்கிக் கொள்ளாமையும் அல்லது அது பற்றி பிழையாக விளங்கிக் கொண்டமையும் இவ்வாறான மரணங்கள் சிலவற்றிற்குக் காரணமாகி இருக்கலாம்.

தனது எசமானின் குழந்தையைக் கத்தரிக்கோலால் குத்திக் கொன்ற குற்றத்திற்காக ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட 19 வயதான சித்தி பாத்திமாவின் கதை சோகமயமானது. குற்றம் இழைத்ததாக ஏற்றுக் கொண்டால் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதெனக் கொடுக்கப் பட்ட வாக்குறுதி காரணமாக சிறைச் சாலையில் அவள் ஒரு பொய் யான வாக்குமூலத்தை அளித்தாளா என்பது பற்றி இலங்கை அதிகாரிகள் என்றாவது விசாரித்து அறியவில்லை. நீதிமன்றத்தில் அவள் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதால் அவளின் சார்பில் தலையிடவோ தண்டனையைக் குறைக்கும்படி கேட்கவோ தமக்கு இயலாது என அவர்கள் கூறினர். அக்குழந்தையின் மரணம் பாத்திமாவின் எசமானி மகள் கையால் மேல் மாடியில் இருந்து தவறுதலாக விழுந்ததால் நிகழ்ந்ததென அச்சம்பவத்தை நேரில் கண்ட ஓர் இலங்கையரின் சாட்சி கூட விசாரிக்கப் படவில்லை. பாத்திமா சிறையிடப் பட்டதும் பின்னர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதும் கூட அமைச்சின் மூலமோ அல்லது தூதுவராயலத்தினாலோ அறிவிக்கப்படவில்லை. பதிலாக எமீர் இராச்சியததின் உள்ளகத் தகவல்துறை மூலமே அது செய்யப்பட்டது. இவ்வாறான விடயங்களில் தலையிடுவதற்குள்ள உரிமை தூதரக அதிகாரிகட்கு இருக்க வேண்டினும் சில வேளை சம்பந்தப்பட்டவர்களின் உந்துதலால் தூதரக அதிகாரிகளுக்கோ அல்லது அவளின் குடும்பத்தவருக்கோ இடமளிக்கப்படவில்லை. இவ்வனைத்து விடயங்களையும் சீர்தூக்கிப் பார்க்கையில் சம்பவம் சரியாகத் தேடி அறியப்படவில்லை என்பதும் இது தொடர்பான துப்புகள் இன்றுவரை துலக்கப்படாமலே இருக்கின்றன என்றும் கூறலாம்.

அது மட்டுமல்ல மீண்டும் 1995 ஏப்ரலில் லெபனானில் இருந்து இரண்டு பெண் சடலங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப் பட்டதுடன் அது பற்றி ஏற்கத்தக்க சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

1995 இல் வெளிநாடு சென்றோரிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் :

| | |
|---|---|
| சவுதி அரேபியா, ஜோர்தான் லெபனான் (அண்ணளவாக) | 1,800 |
| குவைத் | 2,100 |
| அபூதாபி | 900 |
| ஓமான் | 100 |



மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கிடைக்கும் அறிக்கைகளின்படி மரணங்களின் தொகை 15-20 வரையாகும்.

விபத்துக்குள்ளானவரின் பால் வேறுபாடு, சமயம் என்பவற்றின் படி நஷ்ட ஈட்டுத்தொகையும் வேறுபடும். முஸ்லிம் இனத்தவர்களுக்கு 100% நஷ்டாடு கிடைப்பதுடன், கிறிஸ்தவர்களுக்கு 50% நட்டாடு கிடைக்கின்றது. 1995 ஜனவரி, அக்டோபர் மாதங்களுக்கிடையில் 7.8 மில்லியன்கள் இலங்கைக்கு நட்டஈடாகக் கிடைத்தன. முறைப்பாடுகளில் அதிகமானவை தமது இராணுவத்தில் தொழில் புரியும் எசமானர்களுக்கு எதிரானவையாகும். அதாவது இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரானவையாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் 4000 மட்டிலானவர்களுக்கு உதவி செய்துள்ளதாகக் கூறப்படும் லண்டனில் அமைந்துள்ள (Kalayan) கலயான் என்னும் நிறுவனம் கூறுவதன்படி, அவர்களால் நேர்முகமாக விசாரிக்கப்பட்ட 755 பெண்கள் மத்தியில் 88% வாய்மொழி மூல ஏச்சுப் பேச்சுக்களையிட்டும், 38% தாக்குதல்களை இட்டும், 55% முறையாகச் சம்பளம் தரப்படாமையையிட்டும், 42% நித்திரை செய்யக் கட்டில் வழங்காமையையிட்டும், 10% பாலியல் இடையூறுகளையிட்டும் தமது முறைப் பாடுகளைச் சமர்ப்பித்தனர்.

## வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்களின் விரிவாக்கப்பட்ட பொறுப்புகள்

வெளிநாட்டுத் தூதரசங்களின் மரபு ரீதியான கடமைகளை குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தூதரகங்கள் செய்கின்றன. இராசதந்திர சேவைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் படி ஒரு தூதரகத்தின் கடமைகளாவன :

(அ) ஏற்றுக் கொள்ளும் நாட்டில் அனுப்பும் நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

(ஆ) சர்வதேச சட்டத்திற்கு இயைபான வரையறைகளுக்கு உட்பட்டு நாட்டினதும் நாட்டுப் பிரசைகளினதும் அபிலாசைகளைப் பாதுகாத்தல்.

(இ) ஏற்றுக் கொள்ளும் நாட்டின் அரசாங்கத்தோடு கலந்தாலோசிப்பதும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலும்.

(ஈ) ஏற்றுக் கொள்ளும் நாட்டின் எல்லாச் சட்ட உபாய வழிமுறைகளையும் நிலைமைகளையும் அபிவிருத்திகளையும் மதிப்பீடு செய்து, தம் நாட்டு

அரசாங்கத்திற்கு அறிக்கை விடுதல்.

(உ) ஏற்றுக் கொள்ளும், அனுப்பும், நாடுகளுக்கிடையில் நட்புறவுகளை விருத்தி செய்தலும், அந்நாடுகளின் பொருளாதார, கலாசார, விஞ்ஞான ரீதியான தொடர்புகளை விருத்தி செய்தலும்.

சர்வதேச தொடர்புகளில் துரித வளர்ச்சியும் பரஸ்பர தங்கியிருத்தலும் அண்மைக் காலங்களில் விருத்தியடைந்துள்ளமையால் தூதரகங்களின் கடமைப் பங்கிலும் விடயப் பரப்பிலும் குறிப்பிடத்தக்கதொரு விரிவு காணப்படுகின்றது.

பொருளாதாரத்தை திறந்து விடுதல், நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை விருத்தி செய்தல் என்ற நோக்கங்களோடு 1977 க்குப் பிற்பட்ட காலத்தில் அரசாங்கத்தால் பொருளாதாரத் திட்டங்கள் தொடங்கப்பட்டதோடு, அவ்வேலைத் திட்டங்களுக்கு இணக்கமாக வெளிநாடுகளில் அமைக்கப்பட்டுள்ள தூதரக சேவைகள் திட்டமிட்டுச் செயற்படும் கொள்கை பின்பற்றப் பட்டது. நாட்டு மக்களின் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் போன்ற அதிக விரிவான நடவடிக்கைகளின் பால் கவனம் செலுத்த வேண்டுமென தூதரக சேவைகள் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

தொழிலற்ற பெருந்தொகையினருக்கு தொழில் வழங்குதலானது பொருளாதாரத்தை மீள வலுவடையச் செய்யும் நடவடிக்கைகளில் முதன்மை பெறுகின்றது. தொழிலற்றவர்களை அரவணைக்கும் அளவிற்கு உண்ணாட்டுப் பொருளாதார வளமோ வெளிநாட்டு உதவிகளால் கிடைக்கும் வளங்களோ போதாமையினால் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கும் கொள்கை மேற்கொள்ளப்பட்டது. தேசிய ரீதியாகத் தொழில்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் குறைந்த தொழிற்றிறனற்ற அல்லது அரைத் தொழில் திறன்கொண்ட குழுக்கள் இத்துறையில் இலக்காக்கப் பட்டதால் இக் கொள்கை மேலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

இந்நிலைமையில் தொழில்களுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெருந்தொகையினரின் விருப்பு வெறுப்புகளை நிறைவு செய்யும் பொறுப்பு இலங்கைத் தூதரக சேவைகளுக்கு ஏற்பட்டது. சவுதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு அமீர் இராச்சியம் போன்ற நாடுகளில் மேற்கூறப்பட்ட தேவை கருதியே தூதரகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையர் பெருந்தொகையாக வளைகுடா நாடுகளை நோக்கிக் குடிபெயர்ந்ததால் அந் நாடுகளில் மேலதிக தூதரக செயலகங்களை நிறுவும் தேவை ஏற்பட்டது. இத்தேவை தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு மட்டுமல்லாது, இலங்கையரின் தேவைகளைக் கவனிப்பதற்குமாக ஏற்பட்டது. உண்மையில் பக்தாத், கெய்ரோ முதலிய நாடுகளில் தூதரகங்கள் அப்போது வேறுபல தேவைகளை முன்னிட்டே ஆரம்பிக்கப்பட்டன.



நமது நாட்டு ஊழியர்களை வழங்க முடியும் என்ற விளக்கத்தை தேவை நாடுகளுக்குக் கொடுப்பதே தூதரகங்களின் முதல் வேலையாக இருந்தது. உதவும் நாட்டில் அவ்விளக்கத்தை அறிய வேண்டியவர்களில் தொழில் கொள்வோர், கைத்தொழில் அதிபர்கள், தொழில் முகவர்கள் என்போர் அடங்கினர்.

மத்திய கிழக்குத் தொழிற் சந்தையின் பால் ஈர்க்கப்பட்ட ஊழியர்களின் வகை அடிப்படையிலும் வெளிநாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் தம் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளுக்கு மேலதிகமாக மேலும் பல சேவைகளைச் செய்ய வேண்டி இருந்தது. மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற ஊழியர்களில் அதிகமானோர் கிராமப்புறங்களைச் சேர்ந்தோராவர். முற்பட்ட காலங்களில் மேற்கத்திய நாடுகளுக்குத் தொழில் தேடிச் சென்றவர்கள் போலல்லாது இத்தொழிற் சந்தையில் பிரவேசித்தவர்கள் முடப்பட்ட கலாசார, புவியியல், விஞ்ஞான வரையறைகட்கு உட்பட்டோர் ஆதலால் அவர்கள் மீது கூடிய கவனம் செலுத்த வேண்டியிருந்தது. தமது எதிர்கால எசமானர்களுடனான உடன்படிக்கைகள் பற்றியோ தொழில் புரியச் செல்லும் நாடுகளின் சூழலமைப்பு பற்றியோ அவர்களுக்குப் போதிய விளக்கம் இல்லாமையால் அவர்கள் வீட்டுப் பணித்துறையில் மட்டுமல்லாது ஆடைக் கைத்தொழிற்றுறைகளிலும் சுரண்டலுக்கு ஆளாகினர்.

பெறப்படும் தொழில்களின் இயல்பு காரணமாகவும் தூதரகங்களின் கடமைகள் அதிகரித்தன. வேலை தேடிச் சென்றோரில் பெரும்பான்மையினர் வீட்டுப் பணிகளிலும் கூலித் தொழில்களிலும் ஈடுபடும் தொழில் திறனற்ற தொழிலாளராகக் காணப்பட்டனர். இவர்கள் தமது நலன்புரி விடயமாகப் பூரணமாகவே தமது எசமானர்களிலேயே தங்கியிருந்தனர். எனவே, அவர்களின் அடாவடித்தனங்களும் சுரண்டலும் அதிகரிக்க வாய்ப் பேற்பட்டது. எனவே, வேலை நேரம், சம்பள கொடுப்பனவு, வசதிகள் என்பன குறித்து அடிக்கடி பிணக்குகள் தோன்றின. இவ்வூழியர்களுக்கு மிக நெருங்கக்கூடிய நிறுவனம் தூதரகங்களாக இருந்ததால் அவர்கள் நிவாரணம் பெற அவற்றை நாடிச் சென்றனர்.

எவ்வாறாயினும், தூதரகங்களில் போதிய வளங்கள் இல்லாததால் ஓர் அவல நிலைமை தோன்றும் போது குடியகல்வாளருக்கு உதவும் வல்லமை அவற்றுக்கு இல்லை. இச்சிரமமான காரியத்தை நிறைவு செய்வதற்காக ஜோர்தான், லெபனான், கடார், பஹ்ரைன், மேலும் 8 மத்திய கிழக்கு நாடுகளில் குடியகல்வாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்காக மேலும் 'கொன்சல் செயலகங்கள்' சிலவற்றை நிறுவுவதற்கு இலங்கை எதிர் பார்க்கின்றது.

இப்பொழுது 4 தூதரகங்களில் அதாவது, சவுதி அரேபியா, குவைத்,

அபூதாபி, ஓமான் ஆகிய நாடுகளில் தொடர்பாடல்களுக்காக தொழிலாளர் நலன்புரி அதிகாரிகள் ஐவர் உள்ளனர். தொழில் புரியும் குடியகல்வாளர் 25,000 பேர்களுக்கு அதிகமாக இருக்கும் நாடுகளில் நலன்புரி அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கை இப்போது எடுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், அவ்வதிகாரிகள் ஊழியர் முறைப் பாடுகள் மீதும், முகவர்கள் தலையிட்டு முன்வைக்கும பிரச்சினைகள் மீதும் மட்டுமே செயற்படும் அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

ஊழியக் குடியகல்வாளரின் நலன்புரியினை விருத்தி செய்யும் ஒரு பெரும் கடமையினை தூதரகங்கள் செய்த போதும் தொழில் தரும் நாடுகளில் எவ்வாறான தொழில்களுக்குக் கேள்வி உண்டு என்ற விடயத்தினை தேடி அறிந்து, தொழில் வாய்ப்புகளைத் தேடிப் பெற்றுக்கொள்வதில் இதைவிட அக்கறை கொள்ள வேண்டும்.

தவறாகப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒரு நடுவராகச் செயற்படும் பொறுப்பும் தூதரகங்களுக்கு உண்டு. உதாரணமாக, தொழிலாளர்-தொழில் கொள்வோருக்கிடையில் ஏற்படும் பிணக்குகளில் தூதரகங்கள் கவனம் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அந்த இரு தரப்பினரும் பயனடையும் வகையில் அதனைத் தீர்த்து வைக்கத் தூதரகங்களுக்கு முடியும். வீட்டுப்பணிப் பெண்கள் போன்ற பிரிவினர்களுக்கு பாதுகாப்பானதும் பயனுள்ளதுமான ஒரு சூழலை ஏற்படுத்துவதில் அவற்றின் சேவை ஈடுபடுத்தப்பட முடியும் என்பது மட்டுமல்லாமல் தொழில் கொள்ளும் நாட்டு அதிகாரிகளின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் சம்பாதித்துக் கொள்ளவும் உதவும். சில வேளை இலங்கைத் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வதில் அந் நாடுகள் அதிக அக்கறை காட்டும் நிலைமையையும் ஏற்படுத்தலாம்.

வெளிவிவகார அமைச்சின் கடமை

வெளிநாடுகளுக்குக் குடியகல்வோர் பற்றிய விடயப் பரப்புக்குப் பொறுப்பாக உள்ள வெளிநாட்டு அமைச்சு தேசிய தொழிலாளர் குடியகல்வு தொடர்பாகப் பொறுப்பாக்கப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அவ்வாறே வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் உரிமைகளைக் காப்பதற்கான எந்தவொரு சட்டமும் இல்லை. உண்ணாட்டில் வேலை செய்வோராயினும் வெளிநாடுகளில் வேலை செய்வோராயினும் பொதுவாக இலங்கை ஊழியர்கட்கான சட்ட திட்டங்களுக்கே உட்படுகின்றனர். குடியகல்வோர் சுரண்டல்கள் பற்றி அமைச்சுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளின் மீது அவர்கள் இலங்கையராக இருக்கும் அளவுக்கே தீர்வுகள் கிடைக்கின்றன.

இலங்கையருக்கும் அவர்கள் வேலை செய்யும் நாட்டு மக்களுக்குமிடையில் ஏற்படும் பிணக்குகளில் தலையிடும் அதிகாரத்தை அமைச்சுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியமாகும். சித்தி பாத்திமாவின் சம்பவத்தில் எடுத்துக் காட்டியவாறு அமைச்சின் தலையீட்டுக்குரிய செயல் ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் தீர்ப்புக் கூட மாறுவதற்கு அது துணை நின்றிருக்கலாம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் எச்சந்தர்ப்பங்களில் உதவ முன்வருகின்றது ?

1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டுச் சேவைகள் சட்டத்தின் 15 வது உறுப்புரையின் படி வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன:

(1) இலங்கையருக்காக இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதும் அவற்றை விருத்தி செய்தலும்.

(2) வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான உதவி உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

(3) இலங்கையில் பெறக்கூடிய தொழில் திறன்களுக்காக வெளிநாட்டுச் சந்தைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

(4) தொழில்களில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள் பற்றி வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு கலந்தாலோசித்து உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்க உதவுதல்.

(5) வெளிநாட்டுச் சேவை முகவர் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதும், கடல்கடந்த சேவைகளுக்காக இலங்கையரைச் சேர்த்துக் கொள்வதும்.

(6) இலங்கைக்கு வெளியே தொழில் புரிவதற்காகச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதும், அவ்வாறான உத்தரவுப் பத்திரங்கள் மீதான நியமங்களையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தலும்.

(7) தொழில் வழங்கல் உடன்படிக்கைகளுக்கான தரங்களை விதித்தலும் அதுபற்றிக் கலந்தாலோசிப்பதன் மூலம் உடன்பாட்டுக்கு வருதலும்.

(8) சேர்த்துக் கொள்ளும் உடன்படிக்கைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக, உரிய வெளிநாட்டு அதிகாரிகள், தொழில் கொள்வோர், தொழில் நிறுவனங்கள் என்பவர்களோடு உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளல்.

(9) நியாயமான சம்பளம், தொழில் தரம் என்பவற்றை உறுதிப் படுத்தும் மாதிரித் தொழிற் சேவை உடன்படிக்கையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

(10) தொழில்களுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் எழுத்து மூலங்கள், தஸ்தாவேஜுகளின் உண்மைத் தன்மையைப் பரிசீலனை செய்தல்.

(11) இலங்கையருக்கு வெளிநாடுகளில் உள்ள தொழில்வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகளையும் கற்கைகளையும் மேற்கொள்ள

(12) இலங்கையர் வெளிநாடுகளுக்குத் தொழிலுக்குச் செல்வதையும் தொழிலிலிருந்து திரும்பி வருதலையும் மேற்பார்வை செய்வதற்கான விபரங்கள் அடங்கிய தகவல் வங்கியொன்றை நிறுவிச் செயற்படுத்துதல்.

(13) இலங்கைக்கு வெளியே தொழில் புரியும் இலங்கையரின் நலன்களையும் பாதுகாப்பையும் குறித்து நடவடிக்கை எடுத்தல்.

(14) ஊழியர் நலன்புரி நிதியம் ஒன்றினை உருவாக்குதல்.

(15) தொழில்களுக்காக வெளிநாடு செல்வதற்குத் தெரிவு செய்யப்படும் இலங்கையருக்கான பயிற்சி, உத்தரவுப் பத்திரங்களை விநியோகித்தல் என்பவற்றைச் செய்தல்.

(16) வெளிநாட்டுத் தொழில்களுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் இலங்கையருக்கு உதவுதல்.

(17) இலங்கைக்கு வெளியே தொழில் புரியும் இலங்கையரிடம் இருந்து அன்பளிப்பு, பங்களிப்புகளை இலங்கைக் குடும்பங்களின் புனருத்தாரணம், வழிகாட்டல், ஆலோசனை வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் பயன்படுத்துவதும் அவ்வாறான குடும்பங்களுக்குத் தகவல்களையும் உதவிகளையும் பெற்றுக் கொடுத்தலும்.

(18) இலங்கைக்கு வெளியே தொழில் புரியும் இலங்கையர் சார்பில் முதலீடுகளைச் செய்யும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளல்.

(19) இலங்கைக்கு வெளியே தொழில்களில் ஈடுபட்டுப் பின்னர் இலங்கைக்குத் திரும்பும் இலங்கையரைப் புனருத்தாரணம் செய்யும் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

தொழில் வழங்கும் நாடுகளை நோக்கிக் குடியகன்று செல்வது தொடங்கி திரும்பி வருபவர்களைப் புனருத்தாரணம் செய்தல் வரையிலான ஊழியர் குடியகல்வின் ஒவ்வொரு அம்சமும் இந்நோக்கங்களுக்கு உட்படினும் தனது அடிப்படைக் கடமையாகிய மனித வலுவைச் சேர்த்துக் கொள்ளல் என்ற நடவடிக்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு ஈடுபட்டு வந்துள்ளது. அடிப்படையில் ஊழியர் குடியகல்வு தொடர்பாக எழும் எல்லா அவசர நிலைமைகள் தொடர்பாகவும் செயற்படும் ஒரே குறிக்கோளை முன்வைத்து உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு அவ்வாறு இயங்கத் தவறுவதற்கான அடிப்படைக் காரணம் அது தன்னளவில் நிறைவெய்துவதற்கான மனித வலுவும் மூலதன வளங்களும் அதனிடத்து இல்லாமையாகும்.



## முகவர் நிறுவனங்களின் தலையீடு

இப்பொழுது இலங்கையில் ஏறத்தாழ 500 தொழில் முகவர் நிறுவனங்கள் செயற்படுகின்றன. 1995 இல் அவ்வாறான 477 நிறுவனங்கள் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டன. தாம் தொழில் வழங்கும் குடியகல்வோருக்கு அந்நிறுவனங்கள் பொறுப்புக்கூற வேண்டுமென ஏற்கப்பட்டாலும் பொறுப்பு பற்றிய தெளிவான வரையறைகள் தென்படவில்லை.

அவற்றிற்குரிய பொறுப்புகள் தொடர்பான தெளிவற்ற சில விடயங்களை மட்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் வெளிநாட்டு அமைச்சும் எடுத்துக் காட்டியிருப்பினும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை அவ்வாறு முயற்சி எடுக்கப்பட்டிருந்தாலும் அது மிகக்குறுகிய அளவிலாகும்.

குடியகன்று செல்லும் ஊழியர்கள் முகம் கொடுத்த திகிலூட்டும் அனுபவங்கள் பல. தொழில் முகவர் நிறுவனங்கள் அவர்களுக்கு வாய்ப்பான தொழில்களைப் பெற்றுத் தருவதாகப் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து பண மோசடி செய்யும் சுயநலப் போக்கு காரணமாகவே இவை நிகழ்ந்துள்ளன.

இது தொடர்பாக இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் பின்பற்றும் குடியகல்வுக் கொள்கையினை இலங்கையும் பின்பற்றுவது முக்கியமாகும். அந்நாட்டுச் சுதேசிகளை வெளிநாட்டுத் தொழில்களுக்கு அனுப்ப முன்னர் தொழில் வழங்கும் நாடுகளில் உள்ள முகவர் நிறுவனங்களிடம் அத் தொழில்கள் பற்றிய மதிப்பீட்டினை அந்நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. அவ்வாறு பரிசீலனை செய்கையில் குறிப்பிட்ட தொரு தொழில் முகவர் நிறுவனம் தகுதியற்றதெனக் கண்டால் அதனூடாகத் தொழில் பெறுவது பிரசைகளுக்குத் தடைசெய்யப்படும்.

தொழில் முகவர் நிலையங்களின் குறிப்பிட்ட கடமைகளை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதாவது, சட்டரீதியான தொழில்களை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்வதைப் பட்டாயப்படுத்தல், நலன்புரி அலுவலர், தூதரகங்கள் மற்றும் குடியகல்வோரிடம் இருந்து முறைப் பாடுகள் செய்யப்படின் தொழில் முகவர் நிலையங்களை இரத்துச் செய்து விடுதல் போன்றன அந் நடவடிக்கைகளில் அடங்கும். பதிவு செய்யப்படாத முகவர் நிறுவனங்கள் சட்டரீதியற்றவை எனக் கணிக்கப்படும். கடந்த வருடம் அவ்வாறான இரு நிறுவனங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

## விடய ஆய்வுகள் : இலங்கை

தயாரிப்பு : சோபாலிகா பெர்னான்டோ கருணா கமகே ரேணுகா ஜெயராஜ்

விடய ஆய்வு 1

இது மத்திய கிழக்கிலும் டச் அருபா தீவுகளிலும் பல முறை வெளிநாட்டு வேலை வாய்ப்பினை மேற்கொண்ட 40 வயதான சிவில் பொறியியலாளர் பற்றியது. அவர் தற்சமயம் சவுதி அரேபியாவில் தொழில் புரிகிறார். அவரது ஒப்பந்த காலம் ஆறு மாதம் முதல் இரு வருடங்கள் வரை மாற்றம் அடைந்தது.

இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டதாரி பயிற்சி நெறியைப் பயின்றவர். இவரது இரு பிள்ளைகளும் தற்சமயம் முறையே க.பொ.த. (உயர்தர) க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு அமர்ந்துள்ளனர். அவரது மனைவி வீட்டுக்கு வெளியே எவ்வித தொழிலையும் செய்யவில்லை. ஒன்பது பேரைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவரான இவருக்கு எவ்வித வருவாயும் அற்ற வயோதிப தாயும் உண்டு.

இவர் முன்பு இலங்கையில் பரந்தன் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றியபோது கிடைத்த வருமானம் அவர் எதிர்பார்த்த வாழ்க்கைத்தரத்தை கொண்டு நடாத்த போதியதாக இல்லாமையால் வெளிநாட்டு பகமையை நாடினார்.

அவர் புரிந்த எல்லா வெளிநாட்டுத் தொழில்களும் கட்டட நிருமாணத் துறையின் கண்காணிப்பாளர் மட்டத்திலானது. அவரது தொழிலின் தன்மையைப் பொறுத்து அவரது சேவைக்காலம் குறுகியதாக அமைந்தது. அவர் கேகாலையில் தனக்கென வீடொன்றை பூர்த்தி செய்து கொள்ளும் நிலையில் உள்ளார்.

அவதானிப்பு : இங்கு நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறது. இவர் குறுகிய கால பதவிகளை விரும்பும் ஓய்வற்ற நபராக விளங்குகிறார். அத்துடன், அவரிடம் இலங்கையின் வேதன மட்டத்திற்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக் கொள்ள முடியாத போக்கும் நிலவுகிறது. இலங்கையில் அவருக்கு நியாயமான சம்பளத்தில் (மாதம் 9000 ரூபா) தொழிலொன்று அளிக்கப்பட்ட போதும், வெளிநாட்டின் கஷ்டமானதும் நிச்சய மற்றதுமான தொழிலுக்காக தனது வீட்டுச் சௌகரியங்களை தியாகம் செய்ய விரும்புகிறார்.

விடய ஆய்வு 2

இவர் 30 வயதான பெண்மணி. விவாகமாகாதவர். க.பொ.த. (சாதாரண தரம்) வரை பயின்றவர். ஆறு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவரான இவர் மத்திய கிழக்கிற்கு செல்ல முன்பு மூன்று வருடங்கள் தெமட்டகொடையிலுள்ள ஒரு ஆடை தயாரிப்புத் தொழிற் சாலையில் தொழில் புரிந்தார். இத் தொழிற்சாலையில் கடமையாற்றிய அவரது சகோதரி யொருவர் மூலம் அவர் இத் தொழிற்சாலைக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். 1987 இல் உறவினரொருவர் மூலம் இவருக்கு பஹ்ரைனில் தொழில் வாய்ப்புக் கிட்டியது. பஹ்ரைனில் அவர் இயந்திர இயக்குனராக தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் தொழில் புரிந்தார்.

இவருடன் தெமட்டகொடையில் தொழில் புரிந்த சகோதரி தற்சமயம் டுபாயில் தொழில் புரிவதுடன், இவரது இளைய சகோதரியும் இவருடன் பஹ்ரைன் தொழிற்சாலையில் கடமையாற்றுகிறார்.

வெளிநாட்டுத் தொழில் எதிர்பார்ப்புக்கான காரணம் நிதி நெருக்கடி அவரை வற்புறுத்த வைத்துள்ளது. தகப்பன நோயினால் செயலிழந்துள்ளார். தாய் தையற் தொழிலினால் ஓரளவு வருமானத்தை ஈட்டுகிறார். மூத்த சகோதரன் நிரந்தரமான வருமானம் அற்ற ஒரு தொழில்நுட்பவினைஞர்.

அவர் பெற்றோரின் வேண்டுகோள்படி இலங்கை திரும்பி பொருத்தமான ஒருவரை கைப்பிடித்து குடும்பஸ்த ரானார். எனினும், பெற்றோர் விரும்பும் பட்சத்தில் பஹ்ரைன் திரும்ப விரும்புகிறார்.

இலங்கையில் அவரது ஆரம்ப சம்பளம் 800/- ரூபா. பஹ்ரைனில் அவர் ஆரம்ப சம்பளமாக மாதம் 40 தினார்களை (சுமார் 5000/- ரூபா) சராசரியாக மூன்று வருடங்கள் பெற்றார். அவர் தற்சமயம் மாதாந்தம் சராசரி 70 தினார்களை இலவச விடுதி வசதி, சீருடை, உணவு என்பவற்றுடன் பெறுகிறார். உணவு ஒவ்வொரு தேசத்தவரும் விரும்பிய வகையில் தயாரிக்கப்படுகிறது. பாதுகாப்பான சூழலில் வைத்திய வசதிகளும், மருத்துவ நிலைய செலவுகளும் வழங்கப்படுகின்றன. இங்கு தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பின்றி தளத்தை விட்டு வெளியே செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. வாரத்திற்கு ஒருமுறை வெள்ளிக்கிழமை நாட்களில் (உத்தியோகபூர்வ விடுமுறை தினம்) பெண்கள் தகுந்த பாதுகாப்புடன் கடை நிலையங்கள் அல்லது பூங்காக்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

பெரும்பான்மையான தொழிற்சாலைப் பணியாளர்கள் இலங்கையர்களாவர். இந்தியர்கள், பங்களாதேஷிகள், பாகிஸ்தானியர்கள் பிரதானமாக கண்காணிப்பு மட்டத்தில் கடமை புரிகின்றனர். ஆங்கில மொழியறிவின் அடிப்படையில் தொழிற்சாலை அலுவலகத்தில் கடமையாற்றும் தொழில் உயர்ச்சி வாய்ப்புகளும் உண்டு. ஆரம்பத்தில் இயந்திர இயக்குனர்களாக சேர்ந்த இரு இலங்கை யுவதிகள் அவர்களது ஆங்கில அறிவு, தகைமைகளின் அடிப்படையில் தற்சமயம் காரியாலய தொழில்களுக்கு உயர்வு பெற்றுள்ளனர்.

ஒப்பந்த காலம் இரு வருடங்களாயினும் அது இருமுறை நீடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இரு வருட கால இறுதியிலும் பாவிக்கப்படாத விமானக்கட்டணத் தொகை

மீள வழங்கப்படுகிறது. ஏனைய தொழில் நிபந்தனைகள் வாரத்திற்கு ஆறு நாள் வேலை, 1/2 மணித்தியால பகல் உணவு ஓய்வு நேரம் உட்பட மு.ப.8.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையிலான வேலை நேரம்; பி.ப. 5.00 மணி முதல் பி.ப.7.00 மணி வரையிலான இரு மணித்தியாலங்களை மேலதிக வேலை நேரமாகவும் அதே சமயம் கட்டாய வேலை நேரமாகவும் கணித்தல், 42 நாட்கள் விடுமுறை, வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மட்டும் வேலைக்கு சமுகமளிக்காமல் இருக்க அனுமதி வழங்கல், அனுமதிக்கப்படாத வரவின்மைக்கு சம்பள வெட்டு, இலங்கை பௌத்த உற்சவ நாட்களுக்கு மேலதிக விடுமுறை, நாளாந்த கோட்டாவிற்கு மேலதிகமான உற்பத்தியின் அடிப்படையில் ஊக்குவிப்பு கொடுப்பனவு, உபயோகப்படுத்தப்படாத வைத்திய, விடுமுறை லீவுகளுக்கு கொடுப்பனவு பெறல், என்பனவாகும். சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை வேறுபடுகின்றன.

சாதனைகள் : குறிப்பிட்ட பெண்மணி புதுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் அடங்கிய ஒற்றை மாடி வீடொன்றை நிர்மாணித்துள்ளதுடன் அவரது சேமிப்புக்களை நிலையான வைப்புக்களாக உள்ளூர் மக்கள் வங்கிக் கிளையில் வைத்துள்ளார்.

அவதானிப்பு : அவரது எளிமையான உடைகள் மத்திய கிழக்குச் சுபீட்சத்தினை வெளிப்படையாக காட்டுவதாக இல்லை. அவரது மெலிந்த உருவம் கடின உழைப்பின் அறிகுறி. தனதும் தனது குடும்பத்தினதும் நலனுக்கு உழைப்பதே அவரது ஒரே நோக்கம்.

விடய ஆய்வு 3:

இவர் 34 வயதான ஒரு முஸ்லிம் பெண், இரு ஆண் பிள்ளைகளின் தாய். இருபது வயதிலே குவைத்தில் தொழில் புரிய ஆரம்பித்த இவர் அப்பொழுதே விவாகமானவராக விளங்கினார். அவ்வமயம் அவர் ஒரு குழந்தைக்குத் தாயுங் கூட. அவர் க.பொ.த. (சாதாரண தர) மட்டம் வரை கல்வி கற்றுள்ளார்.

வெளிநாடு செல்வதற்கான காரணம் : இவர் தனது பாரம்பரிய முஸ்லிம் பின்னணிக்கு எதிர்மாறாக முஸ்லிம் இளைஞர் ஒருவரை காதல் திருமணம் புரிந்தவர். வசதியுள்ள குடும்பத்தவரான அவ் இளைஞர் தனக்கே சொந்தமான சிறு வியாபாரம் ஒன்றை நடாத்தி வந்தார். நிதி நிலையில் நிலவிய ஏற்றத்தாழ்வினால் இருவரது தந்தைமாரும் இவ்விவாகத்திற்கு அனுமதி வழங்கவில்லை. இவ் ஏற்றத்தாழ்வு தம்பதிகளின் திருமண வாழ்வின் அமைதியினையும் பாதிப்புறச் செய்ததுடன் இப்பெண்மணி தனது கணவர் மற்றும் உறவினர்களின் அனுமதியுடன் மத்திய கிழக்கிற்கு செல்ல இதுவே காரணமாகவும் அமைந்தது. அவரது பிள்ளை அவரது மாமியாரின் பராமரிப்பில் நன்கு பராமரிக்கப்பட்டது.

1982 இல் இப் பெண்மணி தனியார் முகவர் நிலையம் ஊடாக குவைத்தில் 13 பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தின் பணிப்பெண்ணாகச் சென்றார். அவரது ஆரம்பச் சம்பளம் 3500/ ரூபா. அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பிக்கும் அவரது வழமையான வேலை நேரத்தில் 11 பிள்ளைகளின் ஆடைகளை இயந்திரத்தில் சலவை செய்தல், முழுக் குடும்பத்தினருக்கும் சமையல் செய்தல், வீட்டுத் தளத்தை கழுவுதல் என்பனவும் அடங்கும். நவீன உபகரணங்களை இயக்குவதில் அவர் தேர்ச்சி பெற்றவர். மிகத் திறமையாக தொழில் புரிந்த அவர் தொழில் தருநரின் நம்பிக்கையையும் விருப்பினையும் பெற்றுக் கொண்டார். அவர் வெளிநாட்டில் வேலை புரியும் சமயம் கணவனுக்கு அனுப்பப்பட்ட பணம் பெரும்பாலும் அவரால் குடும்பச் செலவினங்களுக்கே செலவு செய்யப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர், தொழில்தருநரின் நன்நம்பிக்கையைப் பெற்ற அவருக்கு அவ்வீட்டுக்கு வெளியே கூடிய சம்பளத்தில் விற்பனை நிலையப் பெண்ணாக வேலையொன்று தேடிக் கொண்டு அவ்வீட்டிலே தங்கி இருக்கும்படி அவ் இல்லத்தவர்கள் ஆலோசனை வழங்கினர். அவருக்கு விற்பனை நிலையப் பெண்ணாகத் தொழில் புரியும் வாய்ப்பினை தேடிக் கொடுத்த அக்குடும்பத்தினர் இப்பெண்மணியின் கணவரையும் வரவழைத்து மற்றுமொரு வீட்டில் வீட்டுச் சாரதியாக கடமையாற்ற வாய்ப்பளித்தனர். இவரது கணவனின் வருகையின் பின்னர் இவ் இல்லத்தவர்கள், தம்பதிகள் தமக்கென வாடகை வீடொன்றை தேடிக்கொள்ள உதவி செய்தனர். இப்பெண்மணி மாதாந்தம் சுமார் 10000 ரூபாவரை விற்பனைப் பெண்ணாக சம்பாதித்தார். அவரது கணவர் தனது சம்பளத்தை இலங்கையில் அவரது பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உதவ பயன்படுத்தினார். அதேசமயம் குறிப்பிட்ட பெண்மணி தனது சம்பளத்தைச் சேமித்தார். தம்பதிகள் தாம் வாடகைக்கு அமர்த்திய வீட்டின் அறைகளை உப வாடகைக்கு விடுவதன் மூலம் மேலதிக வருவாயினையும் பெற்றனர்.

தனது தொழில்தருநர் உதவியுடன் கூட்டு மொத்தமாக அவரால் 14 உறவினர்கள் இலங்கையிலிருந்து இங்கு அழைக்கப்பட்டனர். அவர்களது இரண்டாவது குழந்தை குவைத்தில் பிறந்தது.

குவைத்தில் 12 வருடங்கள் தங்கி அவர்கள் இலங்கை திரும்பிய பின்னர் அவரது கணவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி உயிரிழந்தார். தற்சமயம் இப் பெண்மணி தனது ஆண்பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியறிவை வழங்கும் பொருட்டு மீண்டும் குவைத் திரும்ப தயாராகிறார். அவர் தனது மூத்த மகனை பாடசாலை விடுதியிலும் இளைய மகனை தனது மாமியாரிடமும் ஒப்படைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளார்.

சாதனைகள் : குருணாகலையில் ஒரு தென்னங் காணிக் கொள்வனவு, முழுதாகச் சம்பளம் விரிக்கப்பட்ட ஒரு மாடி வீடொன்றை கட்டி பூர்த்தி செய்துள்ளமை.

அவதானிப்பு : குறிப்பிட்ட பெண்மணியின் சொந்த அனுபவத்தின்படி முஸ்லிம் பெண்களின் தொழில் செய்யும் சூழல் இலங்கையை விட குவைத்தில் சாதகமானது. எனினும், பொதுவாக முஸ்லிம் பெண்களிடம் காணப்படும் மிக பிற்போக்கான தன்மை, ஒதுங்கு மனப்பான்மை என்பவற்றிற்கு மாறாக இவரிடம் திறமை, புத்தி சாதுரியம், விரைவில் கற்றுக் கொள்ளுதல், இணங்கிச் செல்லல் என்பவற்றை காணக்கூடியதாக இருப்பதை ஏற்க வேண்டும். உண்மையில்

இவரொரு முஸ்லிமாக இருப்பதால் அரபு உலகின் கலாசாரம், மொழி, மாதம், குடும்ப வாழ்வுப்போக்கு என்பவற்றை சுயமாகவே இனங்காணக் கூடியதாக உள்ளது. முஸ்லிம் ஒருவரால் தயாரிக்கப்பட்ட உணவைச் சாப்பிட அரேபியர் பெரும்பாலும் விரும்புகின்றனர் என்ற அவரது கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பற்றிய அவரது அணுகுமுறை யாதெனில் இவர் தம்மை விட எளியவர் என்ற அவரது கணவரின் உறவினர்களது அலட்சியப்படுத்தல்களிலிருந்து மிக வேகமாக மீட்சிபெற்று, தனது அந்தஸ்தையும் நிதி நிலைமையையும் உறுதிப்படுத்திக் கொள்ள சிறந்த வழி என அதனைக் கருதுவதாகும்.

அவர் தற்பொழுது தனது மச்சான், மச்சாள்களுடன் சரிசமன் நிலையில் வைத்துக் கணிக்கப்படுகின்றார். விசேடமாக முஸ்லிம் மக்களிடையே காணப்படும் வியாபித்த குடும்ப முறையின் பயனாக அவரது பிள்ளையின் கல்வியும் எவ்வித தடையுமின்றித் தொடர்ந்தது. தமது தாயின் வெளிநாட்டு சம்பாத்திய முயற்சிகளுக்கு அவரது பிள்ளைகளும் ஆதரவு வழங்குகின்றனர்.

விடய ஆய்வு 4

இவர் ஒரு சிங்களப் பெண், வயது 30. க.பொ.த. (சாதாரணதரப் பரீட்சையில் 5 பாடங்களில் மட்டுமே சித்தி பெற்று தோல்வி கண்டவர். அவருக்கு 5 வயதில் ஒரு பெண் பிள்ளை உண்டு. தச்சரான அவரது கணவரின் மாத வருமானம் சராசரி 2500 ரூபாவுக்கும் 4000 ரூபாவுக்கும் இடைப்பட்டதாகும். அவர்களது விவாகம் மச்சான், மச்சாள் முறையானதால் குடும்பப் பிணைப்புகள் ஏனையவற்றைவிட நெருக்கமானது. அவர்கள் அத்துமீறிக் குடியேறிய காணியில் கட்டப்பட்ட ஓலை வீட்டில் வாழ்கின்றனர். தமக்கென ஒரு வீடும், காணியும் அவசியம் என்ற இவர்களின் கனவை நனவாக்க ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் தரகர் முன்வந்தார். மத்திய கிழக்கில் செல்வ வளம் பற்றி அவர் ஆசை வார்த்தை ஊட்டினார்.

அவரது கணவன் மற்றும் பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் தன் பிள்ளையை தனது தாயின் பராமரிப்பில் விட்டு விட்டு குவைத் பயணமானார். பிள்ளை நன்கு பராமரிக்கப்பட்டது. அவர் 13 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு சேவகம் செய்தார். அவர்களில் ஒருவர் திருமணமானவர். அவரது எஜமான் ஒரு இராணுவ அதிகாரி, மனைவி தொழில் செய்யவில்லை. அவரது வேலை நேரம் அதிகால 4.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணி வரையாகும். அவரின் கூற்றுப்படி தினமும வீடுவாசலைக் கழுவி முழுக் குடும்பத்தினதும் துணிகளைத் துவைக்க வேண்டும். முதலில், எல்லாத் துணிகளையும் துவைத்து பின்னர் துணி துவைக்கும் இயந்திரத்திலும் துவைக்க வேண்டும். அரேபியர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தன்னை இணக்கப்படுத்திக் கொள்ள இயலாமை, மொழித் தடை என்பன அவரை விரக்தி கொள்ளச் செய்தது. காலை 11.00 மணிக்கு காலை உணவும் பி.ப. 3.00 மணிக்கு மதிய போசனமும் கொண்ட அங்குள்ள உணவு நேரசூசி அவரை அதிருப்தியுறச் செய்தது. முதல் இரு மாதங்களின் பின்னரே அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

கூட்டு மொத்தமாக இவரது பணிக்காலத்தை இரு மாதங்களைக் கொண்ட இரு பிரிவுகளில் அடக்கலாம். அவர் சம்பளம் பெற்ற முதல் இரு மாதங்களும் அவரது பயிற்சிக் காலமாக எஜமானர்களால் கருதப்பட்டது. அதனை பெரும்பாலும் அவர் தனது தொழில் தருநர்களுடன் கழித்த அமைதியான காலப்பிரிவு எனக் கருதலாம். அடுத்த இரு மாதங்களிலும் அவருக்கு எவ்வித சம்பளமும் வழங்கப்படாததுடன் மானசீக ரீதியிலும் உடலியல் ரீதியிலும் அவர் சவிரக்கமின்றி தொழில் தருநர்களால் துன்புறுத்தப்பட்டார். இத்துன்புறுத்தல்களால் இவ்விரு மாதங்களையம் அவர் வைத்தியசாலையில் கழிக்க வேண்டி ஏற்பட்டது. தொழில்தருநர்களால் தனக்கு வழங்கப்படும் வேலைகள் மிகப் பளுவானவை என அவர் முறைப்பாடு செய்ததன் விளைவாக வீட்டு எஜமானால் தாக்கப்பட்டு அவரது சம்பளம் இடைநிறுத்தப்பட்டது. இது மூன்றாவது மாதத்தில் நிகழ்ந்தது. முதற் தாக்குதலின் பின்னர் அவரது கைகள் செயலிழந்தன. அவர்களால் அவருக்கு எவ்வித சிகிச்சையும் வழக்கப்படவில்லை. அவர் இலங்கை தூதரகத்திற்கு தப்பிச் சென்றார். அங்கு அவருக்கு தொழில் வழங்கிய தனியார் முகவர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு தனக்கு மீண்டும் முன்னைய தொழில் தருநரிடம் தொழிலுக்கு செல்ல முடியாது என அவர் மறுத்ததால் மற்றுமொரு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். எனினும், அவரை வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டுமாயின் பணிப் பெண ஒருவரைப் பெற்றுக் கொள்ள தாம் முகவருக்கு வழங்கிய பணம் திருப்பி அளிக்கப்பட வேண்டுமென புது தொழில் தருநர்கள் கேட்டனர். முகவர்கள் அவ்வாறு திருப்பி வழங்க மறுத்தமையால் இப் பெண்மணி மீண்டும் முன்னைய தொழில் தருநர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். அங்கு அவர் மீண்டும் மோசமாகத் தாக்கப்பட்டார். தலையில் காயம் ஏற்படும் அளவுக்கு அவர் அடி உதைபட்டு, எரி காயங்களுக்கு உள்ளானார். எனவே அவர் மீண்டும் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். தூதரக அதிகாரிகள் சட்டத்தின் பிரகாரம் அவரது காயங்கள் பற்றி 'தஷ்மா' பொலிஸிற்கு முறைப்பாடு செய்தனர். பொலிசார் விசாரணை நடத்தி அவரை மன நோயாளர் வார்ட்டுக்கு அனுமதித்து அங்கு அவர் இரு மாதங்களைக் கழித்தார். அதன் பின்னர் அவர் வைத்தியசாலை உடையுடனே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார். தற்பொழுது அவர் மானசீக ரீதியிலும் உடலியல் ரீதியிலும் மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ளார். அவரது உடல் வீங்கி அவரை பற்றி அவருக்கே ஒரு வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

நிதி நிலையில் அவர் முதலில் எந்நிலையில் இருந்தாரோ அதே நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டுள்ளார். குவைத்திற்குச் செல்ல விமான டிக்கட் செலவுகளுக்காக அவர் பட்ட கடன்களால் அவர் முன்னைவிட ஏழ்மையில் தள்ளப்பட்டுள்ளார். அவர் குவைத்திலிருந்து திரும்பும் பொழுது தான் கொண்டு சென்ற உடைகளைத் தானும் மீளக் கொண்டு வரவில்லை.

அங்கு சம்பந்தப்பட்ட முகவர் நிலையம் பொறுப்பற்ற முறையிலும் கொள்கைக்கு முரணாகவும் செயற்பட்டுள்ளதென்பதை குறிப்பிட வேண்டும். முதலில் இப்பெண்மணி பற்றி எவ்வித தகவலும் கிட்டாத முதல் இரு மாதங்களில் அவரைப் பற்றி விசாரிக்கும்படி அவரது குடும்பம் விடுத்த

வேண்டுகோள்களை இம் முகவர் நிலையம் சட்டை செய்யவில்லை. அவரது குடும்பத்தினர் பயமுறுத்தல் செய்த பின்னரே அவர்கள் குவைத்திலுள்ள தமது சக முகவருடன் தொடர்பு கொண்டு இயங்க ஆரம்பித்தனர்.

அவதானிப்பு : குறிப்பிட்ட பெண்மணி தோற்றத்தில் சோம்பேறித்தனமும், சுத்தமின்மையும், மந்தகதியாக வேலை செய்பவருமானவர். அவரிடம் காணப்படும் சோம்பல்தன்மை அவரது இயற்கையான சுபாவமா அல்லது குவைத்தில் அவர் முகங்கொடுத்த சவால்களால் ஏற்பட்டதா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். முன்னையதே சரியானதென சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. வெளிநாடு செல்ல முன்னர் அவர் கயிற்றுத் துடைப்பங்களை தயாரிப்பதில் ஈடுபட்டார் (ஒரு துடைப்பத்திற்கு 1/ ரூபா வீதம் கிடைத்தது) தினமொன்றுக்கு சராசரி 100 துடைப்பங்களை தயாரிக்க முடியுமாயினும் அவரது குறைந்தபட்ச வெளியீடு ஒரு நாளைக்கு 40 மட்டுமே.

விடய ஆய்வு 5

இவர் 36 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை. இரு ஆண்பிள்ளைகள். ஒருவர் பெண்பிள்ளை. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி பெற்றவர். சவூதி அரேபியாவில் ஐந்து வருடங்கள் அதிபார வாகனச் சாரதியாக தொழில் புரிந்த பின்னர் கொங்கிறீட் தொழிலாளியாக அருபா தீவுகளுக்கு ஒரு வருடத் தொழிலுக்குச் சென்றார்.

வெளிநாட்டு தொழில் வாய்ப்புத் தேடக் காரணம் : 17 வயதில் பாடசாலை சகாவொன்றை திருமணம் செய்த இவர் 19 வயதில் ஒரு பிள்ளைக்கு தந்தையானார். ஓரளவுக்கு இவரது இளம் வயதுத் திருமணமும் குடும்ப பொறுப்புக்களைத் தாங்க இயலாமையும் இவரை வீட்டுக்குத் தொலைவில் தொழிலொன்றை நாட ஊக்குவித்தது. எனவே 23 வயதில் ரன்தெனிகலை மகாவலி திட்டத்தில் கட்டடத் தொழிலாளியாக நான்கு வருடங்கள் கடமையாற்றினார்.

தனது மனைவியின் எதிர்ப்புக்கு மத்தியில் 1988 இல் சாரதியாக சவுதி அரேபியா சென்றார். அவரது ஆரம்ப சம்பளம் 600 ரியால்கள். 1993 இல் இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பிய பின்னர் அவரது குடும்ப வாழ்க்கை சிதைவுற்றமையால் விரைவில் மனைவியை விவாகரத்துச் செய்தார். 1994 நவம்பரில் டச்சு திருவாகத்திற்குட்பட்ட அருபா தீவுகளில் கொங்கிறீட் தொழிலாளியாக ஒரு வருடம் தொழில் புரிந்தார். தொழில் முகவர் 300 டச் டாலர் மாதச் சம்பளத்திற்கு அவரை அமர்த்திய போதும் அந்நாட்டில் குறிப்பிடப்பட்ட குறைந்த பட்ச வயதெல்லையை அவர் கொண்டு விளங்கியமையால் அருபா தீவுகளில் அவருக்கு மாதாந்தம் 500 டச்சு டொலர்கள் வழங்கப்பட்டன. ஒப்பந்த முடிவுக் காலத்தில் அவர் சுமார் 1422 டச்சு டாலர்களை (சுமார் 40000 ரூபா) சம்பளமாகப் பெற்றார்.

அவதானிப்பு : இந்தபா பொறுப்புக்களை ஏற்க விரும்பாத சுயநலம் மிக்கவராக காணப்படுகிறார். அவரே குறிப்பிடுவது போல குடும்ப கடப்பாடுகளிலிருந்து நீங்கி தனக்கு வழங்கப்பட்ட கடமைகளை மட்டும் செய்ய இயலுமாகையால அவருக்கு வெளிநாட்டு வாழ்க்கைப்போக்கு நன்கு பொருத்தமாக அமைந்தது. அவரிடம் காணப்பட்ட பல சட்டரீதியற்ற தொடர்புகள் தனது மனைவியுடன் அதிருப்தி அடைய வழிகோலின. இந்நிலையில் பெண்கள் தொடர்பில் அவரது கண்ணோட்டம் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகும். பெண்கள் வீட்டிலே இருக்க வேண்டும் என நம்பும் அவர் அவர்களை வீட்டுக்கு வெளியே தொழில்புரிய அனுமதிப்பது அதிக சுதந்திரத்தையும் உலக ஆசாபாசங்களை அவர்களுக்கு திறந்து விடுவதாகவும் அமையும் என கருதுகிறார். எனவே தனது மனைவி வீட்டுக்கு வெளியே தொழில் செய்வதை அவர் மறுத்தார். இத்தகைய போக்கு அவரது விவாக வாழ்க்கை தோல்வி அடைய பங்களிப்புச் செய்தது. தற்சமயம் இவர் இலங்கையில் வசித்த போதும் இங்கு கட்டட நிருமாணத் துறையில் அல்லது அதிபார வாகனச் சாரதியாக தொழில் செய்யக்கூடிய பூரண தகுதிகள் இருந்தபோதும் உள்நாட்டில் அவர் தொழில் செய்ய பின் நிற்கிறார். மாறாக வெளிநாட்டுத் தொழிலை நாடுகிறார்.

சாதனைகள் : பொருளாதார ரீதியில் முன்பைவிட செல்வம் மிக்கவராக இருந்த போதும் அவரது தனிப்பட்ட பிரச்சினைகள் மோசமடைந்துள்ளன. அவரது குடும்பம் குலைந்துள்ளது. அவரது பிள்ளைகள் உறவினர்களின் பராமரிப்பில் உள்ளனர். கணிசமான காலம் வெளிநாட்டில் தொழில் புரிந்த பொழுதும் பல ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட அவரது வீடமைப்பு வேலை பூர்த்தியாக்கப் படவில்லை.

விடய ஆய்வு 6

கணவன், மனைவி, மகன், மகள் ஆகியோரைக் கொண்ட நான்கு அங்கத்தவர் குடும்பம். அரசாங்க வைத்தியசாலை தொழிலாளியாக கடமையாற்றிய கணவன் தற்சமயம் ஓய்வுபெற்றுள்ளார். அவரது மாதாந்த ஓய்வூதியம் சுமார் 2000 ரூபா. சிறுவர் விளையாட்டுப் பொருள் தொழிற்சாலையில் தொழில் புரியும் மனைவி மாதாந்த சம்பளமாக 1500 ரூபாவிற்கும் 2000 ரூபாவிற்கும் இடைப்பட்ட வருமானத்தைப் பெறுகிறார். அவர்கள் எதிர்நோக்கும் மோசமான பொருளாதார கஷ்டங்கள், தமது வீட்டை கட்டிப் பூரணப்படுத்த முடியாத நிலை என்பன காரணமாக தாய் தனது 50 வயதிலும் வெளிநாடு சென்று நல்வாழ்வு வாழ விரும்புகிறார். ஒரு நண்பர் மூலம் குவைத்தில் பணிப்பெண்ணாகச் சென்ற அவர் அங்கு மகிழ்ச்சியுடன் தொழில் புரிந்தார். அவரது மாதாந்த வருவாய் 5000 ரூபா. அவர் குவைத்தில் தொழில்புரிந்த 10 வருட காலத்தில் 30 வயதான அவரது மகள் பஞ்ஞரையிலுள்ள ஒரு ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலையில் தொழில் பெற்று ஆரம்ப மாதாந்த சம்பளமாக 4500 ரூபா பெற்றார்.

மத்திய கிழக்கில் தொழில்புரியும் பொழுது தாய் தனது முழுச் சம்பளத்தையும் குடும்பச் செலவுகளுக்கும் தமது வீட்டு வேலைகளை பூர்த்தி செய்யவும் தனது கணவனுக்கு அனுப்பி வைத்தார். தேவைப்படும் பொழுது மகளும் தந்தைக்கு பணம் அனுப்பினார். எனினும், படிப்படியாக ஆனால், நிரந்தரமாக கணவன் அவர்கள் அனுப்பும் பணத்தைச் சூதாட்டம், மது மற்றும் ஏனைய தீய செயல்களுக்கு

விரயமாக்கத் துவங்கினார். தனது வீண்விரயமான பழக்க வழக்கங்களுக்கு மனைவியும் மகளும் அனுப்பும் பணம் போதாமையால் அவர்கள் அனுப்பிய ஆடைகள் மின்சார உபகரணங்களையும் அவர் விற்கத் துவங்கினார். அவரும் கணிசமான அளவு கடனில் மூழ்கினார்.

குவைத் யுத்தம் ஆரம்பமானதால் அவரது மனைவி நாடு திரும்ப வேண்டி ஏற்பட்டது. தாம் கஷ்டத்துடன் சம்பாதித்த பணம் யாவும் தனது கணவனால் வீணடிக்கப்பட்டுள்ளதை அவர் இலங்கை திரும்பிய பின்னரே புரிந்து கொண்டார். அவர் மீண்டும் குவைத் செல்லாததுடன் தனது மகளையும் நாடு திரும்பும்படி வேண்டினார்.

சாதனைகள் : அவர்களது வாழ்க்கைத் தரம் முன்னைப் போலவே தொடர்ந்து நீடித்தது. மனைவியும் மகளும் மீண்டும் தமது முன்னைய தொழிற்சாலை வேலைகளுக்குத் திரும்பியதுடன் அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் மத்திய கிழக்கில் அவர்களுக்குக் கிடைத்த வருவாயுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைந்ததாகும். அவர்கள் தமது வீட்டை அடகு வைக்க நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதுடன் தமது சம்பாத்தியத்தில் அதன் தவணைப் பணத்தை மிகக் கஷ்டத்துடன் மாதாந்தம் செலுத்தினர். மீண்டும் அவர்கள் முகங்கொடுத்த நிதி நெருக்கடியினால் அவர்களது மகனுக்கு முறையான கல்வி வழங்கப்படாததுடன் அவர் தொழில் அற்று நிற்கிறார். கணவன் அவரது குடிப் பழக்கத்தை விடவில்லை. விவாகமாகாத மகளுக்கு பொருத்தமான கணவனொருவரைத் தேடுவதில் தொடர்ந்து இடையூறுகள் நிலவுகின்றன.

முடிவுரை

இவ் ஆய்வின் மாதிரிகள் இயலுமானவரை புலம் பெயர்ந்து பல்வேறு தொழிற் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் தெரிவு செய்யப்பட்டவைகளாகும்.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கும் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத தொழிற் பிரிவினரின் வகையினை 1ஆம் விடய ஆய்வு குறிக்கின்றது. தொழிற் பெயர்வில் ஆண்களின் போக்கை அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அதில் அவர் குறுகிய கால நன்மைகளை நாடுவதுடன் தான் எதிர்பார்த்ததைவிட கடமைகளை அதிகரிக்கும் பொழுது தனது குடும்ப கடப்பாடுகளுக்கு மத்தியில் தான் தொழில் புரிய வந்த நோக்கங்கள் அனைத்தையும் கைவிட்டு விடுகிறார். அவரது விடயம் 2ஆம் விடய ஆய்வுடன் ஒப்பிடும் பொழுது நேர்முரணானது. அதில் அவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தனது குடும்பத்தினர் நீண்டகால நன்மை கருதி ஆடைத் தொழிற்சாலை ஊழியராக கடமையாற்றுகிறார். அது தனது சுகாதார நலனுக்கு பாதகமாக அமைந்தபோதும் தனது நோக்கத்தை எய்த சுதந்திரம், மகிழ்ச்சி என்பவற்றை தியாகம் செய்கிறார்.

இலங்கையின் ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும் பொழுது இங்கு அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டபோதும் அவரை அறியாமலே அவர் சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்றார் என்பது தெளிவு. ஊக்கக் கொடுப்பனவு என்ற வடிவில் சுரண்டல் நடைபெறுகிறது. உதாரணமாக, இலக்குக்கு மேலதிகமான உற்பத்திக்கான ஊக்குவிப்பு, தினமும் இரு மணித்தியால கட்டாய மேலதிக நேர வேலை என்பன. இதனால் மொத்த வேலை நேரம் 10 மணித்தியாலங்களால் அதிகரிக்கப்படுகின்றது. (இது தொழிற் சட்டங்களுக்கு நேர்முரணானது) அனுமதியின்றி சமூகம் அளிக்காமைக்கு சம்பள வெட்டு, பெண்கள் வெளியே செல்கையில் அளிக்கப்படும் பாதுகாப்பு அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பாக வெளிப்படையாக தெரிந்தாலும் அது தனியார் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகும். தொழிற்சாலை பிரதேசத்திற்குள் பெண்களுக்கு விடுதி வசதி வழங்கப்படுவது கூட அவர்களை சிறைப்படுத்தப்பட்ட தொழிலாளர் படையினராக மாற்றுகின்றது. எனினும், இனனொரு பக்கத்தில் அவர் வாழ்ந்த கிராமிய சூழலின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகளால் இங்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட சூழல் அவருக்கு தடையாகத் திகழவில்லை.

3வது விடய ஆய்வு பெரும்பாலான விடயங்களில் மகிழ்ச்சிகரமானதும் வெற்றிகரமானதுமாகும். எனினும், அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முஸ்லிமல்லாத சாதிகள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளை முஸ்லிம் என்ற வகையில் அவரால் வெற்றிகரமாக சமாளிக்க இயலுமாயிற்று. அவரது ஆளுமை, அனுபவம் பிரதானமாக அவரது ஏற்புத்தன்மை அவரது வெற்றிக்கு பங்களிப்பு வழங்கியது.

இதற்கு எதிர்மறையாக 4 வது விடய ஆய்வு, தொடர்பு சாதனங்களும் பல தொழில் ரீதியான ஆய்வுகளும் வெளிச்சமிட்டு காட்டியுள்ள பல தோல்விகளில் ஒன்றாகும். அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அப்பெண்மணியின் நெகிழ்வின்மை, அவரது சூழலுக்கு அவர் காட்டிய இயற்கையான சோம்பல் சுபாவம் என்பன அவர் எதிர்நோக்கிய பல இன்னல்களுக்கு சந்தேகமின்றி காலாக அமைந்ததென குறிப்பிட வேண்டும். இவ்வாறாக விடயங்களில் விண்ணப்பதாரிகளை நன்றாக பரிசோதனைக்கு உட்படுத்தல், வெளிநாட்டு கலாசாரங்கள், அவர்கள் அங்கு செய்யவுள்ள வேலைகள் பற்றி அறிவுறுத்தல் செய்தல் என்பன வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது அவசியமற்றது. முழுக் குடும்பத்தினதும் ஆடைகளை இருமுறை அதாவது முதலில் கையாலும் இரண்டாவதாக துணி இயந்திரத்திலும் துவைக்க வேண்டும் என அவர் குறிப்பிடுவதன் பொருள் என்னவெனில் மிக வசதி மிக்க குடும்பங்களின் மனை ஒழுங்கு முறைகளைப் பற்றிய அடிப்படை அறிவு அவருக்கு இருக்கவில்லை என்பதையே தெளிவுறுத்துகின்றது.

தனது குடும்பக் கடப்பாடுகளை தட்டிக் கழிக்கும் பொருட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை விரும்பும் வகையினர் 5 வது விடய ஆய்வில் அடங்குவர். அவ்வாறானோர் வழமைக்கு மாறான அசாமானியர்களாக இருந்த பொழுதும் அவர்களது குடும்ப அலகுச் சிதைவுக்கு வெளிநாட்டில் ஏற்பட்ட காரணிகள் மட்டும் ஏதுவாக அமையவில்லை.

# 'பணிப்பெண் ஆட்சேர்ப்பில் தொழில் வாய்ப்பு பணியகத்தின் பிரவேசம் தனியார் ஏஜென்சிகளின் முறைகேடுகளிலிருந்து மகளிரை பாதுகாக்கிறது'

நிஸ்ஸங்க விஜேரத்ன

## நேர்முகம்

**தொழிற் திணைக்களத்தின் வெளிநாட்டுத் தொழிற் பிரிவு ஏற்கனவே செயற்பட்டுவரும்பொழுது வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகம் ஒன்று ஏன் ஸ்தாபிக்கப்பட்டது ?**

1985 வரை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு விவகாரம் தொழிற்திணைக்களத்தின் வெளிநாட்டு தொழிற் பிரிவினால் நிருவகிக்கப்பட்டது. 1978 இல் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அலகு என்ற அதன் முன்னைய கடமைகள் தரமுயர்த்தப் பட்டன.

எனினும், வேகமாக அதிகரித்து வரும் வேலைப் பளுவினால் 1980 நடுப்பகுதி அளவில் இப் பிரிவின் இயக்கம் நடமுறைச் சாத்தியம் அற்றதென நிருபணமாகியது. ஒழுங்காக்கல் உபகரணம் என்ற வகையில் புதிய போக்குகளுடன் ஒத்துழைக்க அது போதிய பலம் இன்றிக் காணப்பட்டதுடன் வழிமுறையை ஒழுங்குபடுத்தி, கண்காணிக்கும் நிருவாக பலமும் அதற்கு இருக்கவில்லை.

1985 ஆம் ஆண்டளவில் புலம்பெயரும் தொழிலாளர் வெளியேற்றம் சராசரி 50,000 ஆக இருந்ததுடன் அது விரிவடைந்து சென்றது. திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களின் தொகை சுமார் 500 ஆக இருந்ததுடன், அது கடும் கண்காணிப்பு முறையின் அவசியத்தை உணர்த்தியது. பெருக்கத்தின் பிரதிகூலங்களை அடையும் பொருட்டு பல சட்டவிரோத, அனுமதி அளிக்கப்படாத முகவர் நிலையங்கள் மலியத் துவங்கின. திறன்மிகு கட்டுப்பாட்டுத் தாபனம் ஒன்றின் அவசர தேவையை இச்சூழ்நிலை வேண்டி நின்றது. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு, தனியார் அனுப்பீடுகள் மூலம் இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கத்திற்கு அளிக்கும் கணிசமான பங்களிப்பும் நாட்டின் தொழில் இல்லாப் பிரச்சினைக்கு அது முன்வைத்த தீர்வும் வெளிநாட்டு மனிதவலு ஆட்சேர்ப்பினை மிக ஒருங்கிணைக் கப்பட்ட ரீதியில் பலப்படுத்தும் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியது.

இலங்கையின் பங்கினை விரிவாக்கி ஏனைய தொழிலாளர் ஏற்றுமதியாளர்களுடன் போட்டியிட சிறந்த வழிகாட்டற் சேவை ஒன்றும் சர்வதேச மேம்பாட்டு திட்டமொன்றின் அவசியமும் உணரப்பட்டது.

இத்தகைய அபிவிருத்திப் போக்குகளை கருத்திற் கொண்டு மனிதவலு ஏற்றுமதித் தொழிற்துறையினை முன்னேற்றத்தை நோக்கி நிருவகித்து, இயக்குவிக்கும் புதுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென கொள்கை வகுப்போரும் திட்டமிடலாளர்களும் வேண்டினர். அத்துடன் அரச திணைக்களங்களின் சிவப்பு நாடாக்களை வெட்டிச்செல்லும் சுயாதீனமான அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் ஏற்கப்பட்டது. இத்தகைய விசேட தேவைப்பாடுகள் 1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தின் உருவாக்கத்திற்கு வழிகோலின.

**வெளிநாட்டு தொழில் வாய்ப்புப் பணியகத்தின் நோக்கங்கள் யாவை ?**

சட்டத்தின் 15 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு இப் பணியகத்தின் பிரதான நோக்கங்களை பின்வரும் 3 விரிவான பகுதிகளின் கீழ் சுருக்கமாகக்குறிப்பிடலாம்:

1. தொழில்கள் பற்றிய உயர்ந்தபட்ச வாய்ப்புக்களை கண்டறிந்து /இலங்கைக்கான வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல்.
2. வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு வியாபாரத்தை ஒருங்கமைத்தல்.
3. பெயர்வுத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கும் பாதுகாப்பிற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.

**எந்தளவுக்கு பணியகம் குடிபெயர்வுத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றது ?**

21 ஆம் இலக்கச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பணியகம் பின்வரும் பிரதான துறைகளில் பெயர்வு தொழிலாளர்களுக்கு பொறுப்புக் கூறுகின்றது:

1. வெளிநாட்டில் தொழில்புரியும் பொழுது பாதுகாப்பு வழங்குதல்.
2. ஏமாற்றுதல் மற்றும் ஒழுங்கீனங்களிலிருந்து குடிபெயர்வுத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் மூலமாக முகவர் நிலைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்.
3. பெயர்வுத் தொழிலாளர்களும் குடும்ப அங்கத்தவர்களும் இடர்களுக்கு உட்படும் பொழுது

தேவையான சகாயங்களையும் உதவிகளையும் வழங்குதல்.

4. விதிகள், நிபந்தனைகள் என்பவற்றை நன்கு கண்காணித்து பெயர்வுத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்.

5. பெயர்வுத் தொழிலாளர்களுக்கு வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

சட்டத்தின் 15ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு, இலங்கைக்கு வெளியே தொழில் புரியும் இலங்கையருக்கு நலன்களையும் பாதுகாப்பையும் வழங்க வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ் உபவிதிகள் எந்தவொரு சூழ்நிலைக்கும் பொருத்தமானவாறு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் திட்டமிட்டு விளக்க மளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விதிமுறைகள், நிபந்தனைகள் என்பவற்றை விதிப்பதன் மூலம் பணியகம் முகவர் நிலையங்களை கட்டுப்படுத்தலாம். உதாரணமாக பணியகத்திற்கும் முகவர் நிலையத்திற்கும் இடையிலான கட்டாய சேவை ஒப்பந்தங்களை 15 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள குறிப்பான விதிகள், நிபந்தனைகளுக்கு முகவர் நிலையங்கள் உட்படுத்துதல்.

**பணியகத்தின் மூலம் தொழில் வாய்ப்புப் பெற்றோரின் விதாசாரம் என்ன ?**

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக நேரடியாக ஆட்சேர்க்க பணியகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டபோதும், இத் தொழிற்துறையில் அதற்கு மிக நெருக்கமான கடப்பாடுகள் இருப்பதால் அது ஒரு முகவர் நிலையமாக செயல்படுவ தில்லை. விசேடமாக கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கற் துறைகளில் பணியகத்தின் கடப்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. எனினும், சமீப காலங்களில் பணியகம் இக் கொள்கையை ஓரளவுக்கு மாற்றி நேரடி ஆட்சேர்ப்பினை உயர்தரப்படுத்த முயற்சித்துள்ளது. பணிப் பெண்களை நேரடியாகவும் பணியகத்தின் ஊடாகவும் சேர்க்க இது வழி கோலியுள்ளது.

**பணியகத்திற்கு ஏன் ஏக முகவர் நிலையமாகச் செயற்பட முடியாது ?**

தற்சமயம் இங்குள்ள சுமார் 500 முகவர் நிலையங்களின் வேலைகளைச் செய்யக்கூடிய அளவு வளங்கள் பணியகத்திடம் இல்லை. அத்துடன் தொழில் முயற்சிகளில் அனைவருக்கும் சம சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை இலக்காக் கொண்ட திறந்த பொருளாதார அமைப்பின் கீழ் பணியகம் ஏக முகவர் நிலையமாக செயற்படுவது முரணானது.

வீட்டுப் பணிப் பெண்களை சேர்க்கும் விடயத்தில் பணியகம் நுழைய முக்கிய காரணம் தொழில் முகவர்களின் சுரண்டலிலிருந்து தொழில் தேடும் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகும். இதன் பயனாக வீட்டுப் பணிப் பெண்களின் பெயர்வுச் செலவுகள் கணிசமான அளவு கீழிறங்கியுள்ளன. இது தொழில் வாய்ப்புகளுக்கு பெண்களைக் கவர வேண்டுமாயின் பணியகத்தின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் தாமும் பின்பற்ற வேண்டும் என்ற நிலைக்கு முகவர் நிலையங்களை பலவந்தப்படுத்தியுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் மேற்குறித்த காலப் பிரிவில் அனுமதி வழங்கப்பட்ட முகவர் நிலையங்களின் சராசரி சேர்ப்புத் தொகை பற்றியும் ஆராயப்பட வேண்டும்.

*1991–1993* நீங்கலாக ஏனைய ஆண்டுகளில் தனியான முகவர் நிலையம் என்ற வகையில பணியகம் தன்னாதிக்கம் பெற்று விளங்குவதை மேற்குறித்த எண்கள் காட்டுகின்றன.

**பணியகத்தின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்ட குறிப்பான சுரண்டல் சந்தர்ப்பங்கள் உண்டா ?**

மத்திய கிழக்கில் தொழிலை ஏற்க விமான டிக்கெட் வழங்கும் கட்டத்திலே பிரதானமாக சுரண்டல் நடைபெறுகிறது. எதிர்பார்க்கும் தொழில்தருநர்கள் விமானக் கட்டணத்தை செலுத்தியுள்ள போதும் முகவர் நிலையங்கள் அவ்வாறு அல்ல எனக் கூறி கட்டணச் செலவை மீள அறவிடுகின்றனர். இங்கு விமானக் கட்டணம் இரட்டிப்பாகின்றது. பெரும்பாலான ஏழை குடிபெயர்வுத் தொழிலாளர்கள் அச்செலவினை ஏற்க தமது வீடு, காணிகளை விற்பனை செய்கின்றனர். அல்லது அடகு வைக்கின்றனர். பணியகம் இச்சந்தர்ப்பத்தில் முன்வந்து பணியகம் மூலம் செல்லும் பெயர்வுத் தொழிலாளர்களுக்கு இலவச விமான பயணங்களை வழங்குகின்றது. இம்முறை அறிமுகப் படுத்தப்பட்ட சமயம் பணியகம் குடிபெயர்வுத் தொழிலாளர்களால் நிரம்பி வழிந்ததுடன் முகவர் நிலையங்கள் இன்னல் அடைந்தன. எனவே, இந் நடவடிக்கைகள் பணியகத்துடன் போட்டியிட வேண்டுமாயின் இலவச

அட்டவணை *1*

| வருடம் | பணியகத்தின் ஆட்சேர்ப்பு | ஏஜென்சிகளின் ஆட்சேர்ப்பு | பணியக ஆட்சேர்ப்பு % |
|---|---|---|---|
| 1990 | 457 | 42,168 | 1.1 |
| 1991 | 263 | 64,805 | 0.4 |
| 1992 | 274 | 44,378 | 0.6 |
| 1993 | 130 | 48,623 | 0.3 |
| 1994 | 280 | 59,887 | 0.5 |
| 1995- ஜுன் | 491 | 40,613 | 1.2 |

அட்டவணை 2

| வருடம் | ஆட்சேர்ப்பு | ஏஜென்சிகள் எண்ணிக்கை | ஏஜென்சி ஒன்றுக்கான சராசரி |
|---|---|---|---|
| 1990 | 42,169 | 220 | 192 |
| 1991 | 64,805 | 237 | 273 |
| 1992 | 44,378 | 273 | 163 |
| 1993 | 48,623 | 250 | 194 |
| 1994 | 59,887 | 322 | 186 |
| 1995-. ஜுன் | 40,613 | 364 | 112 |

பிரயாண வசதிகளை வழங்கி ஒழுங்கான தடத்தில் செல்ல முகவர் நிலயங்களை நிர்ப்பந்தப்படுத்தின.

குடிபெயர்வுத் தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்த இராஜதந்திர காரியாலயங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?

மேற்குறித்தவற்றிற்கு மேலதிகமாக பெயர்வுத் தொழிலாளர்களின் தகராறுகள், முறைப்பாடுகளை தீர்த்து வைக்க் பணியகத்தின் இணைப்புடன் இராஜதந்திர அதிகாரிகள் தொழில் அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீத் பணியாற்றுகின்றனர். அடுத்த ஆண்டில் மத்திய கிழக்குத் தூதரகங்களிலும் இலங்கையர் தொழில்புரியும ஆசிய நாடுகளிலும் 8 பிரதிநிதிகளை நியமிக்க பணியகம் திட்டமிட்டுள்ளது.

25,000 பேருக்கு அதிகமான இலங்கையர் தொழில்புரியும் நாடுகளில் 8 நலன்புரி அதிகாரிகளை நியமிக்கும் கருத்திட்டத்திற்கு சமீபத்தில் அமைச்சானது அங்கீகாரம் வழங்கியது.

குடிபெயர்வுத் தொழிலாளர்களை தொல்லைப்படுத்தும் சம்பவங்கள் கிடைக்கும்பொழுது அவற்றில் தலையிட பணியகத்திற்குள்ள அதிகாரங்கள் என்ன ?

கலவரங்கள், கொலைகள் போன்றவை அறியக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பணியகம் வெளிநாட்டு அமைச்சின் ஒத்துழைப்புடன் அத்தகைய சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இத்தகைய விடயங்கள் தொடர்பான சட்டங்கள் வெளிநாட்டு அமைச்சின் விடயதானத்தின் கீழ் வருவதால் இவ்விடயங்கள் உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

எல்லாப் பெயர்வுத் தொழிலாளர்களும் கட்டாயப் பதிவிற்கு உட்படுத்தப்படுவதன் அவசியம் என்ன ?

சட்டவிரோதமான முகவர் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கட்டாய பதிவு செய்தல் அவசியமாகின்றது. பணியகத்திற்கு தொழில் மூலம் பற்றிய விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தொழில் தருநரின் பெயர் வழங்கப்பட வேண்டும்.

கடந்த ஏப்ரலில் வெளரவ தொழில், தொழிற்பயிற்சி அமைச்சரின் தலைமையில் கீழ் மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போது எமது தூதரகங்களின் உதவியை நாடும் பலர் எமது பணியகத்தில் பதிவு செய்த கொள்ளாதோராவர். இவர்களை ஆட்சேர்ப்புச் செய்து பதிவு செய்யப்படாத தொழில் முகவர்களை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. எனவே, அவர்கள் எமது காப்புறுதி, இலவச மீள்வு வசதி போன்ற நலன்காப்பு உதவிகளை தாமாகவே இழந்துள்ளனர். இவ் உதவிகள் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கே வழங்கப் படுகின்றன. எனவேதான் கட்டாய பதிவு திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும், புலம் பெயர்வோர் பற்றிய சிறந்த தரவு திட்டமொன்றை வைத்திருப்பதும் முக்கியமானதென கருத்திற் கொள்ளப் பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகள் வெற்றி அறிந்துள்ளனவா ?

ஆம்! பெருமளவு வெற்றி கண்டுள்ளது. இப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட முன்னர், எமது நடைமுறையில் இருந்த பதிவு முறையின்படி மாதாந்த சராசரி வெளியேற்றம் 5000 ஆகும். கடந்த ஆண்டு மே மாதம் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இத்தொகை சுமார் 15,000 ஐ எட்டியது.

அதன் அமுலாக்கலில் பிரச்சினைகள் ஏதும் உண்டா ?

இலங்கையில் விடுமுறையைக் கழித்து மீண்டும் வெளிநாட்டு தொழில்களுக்கு திரும்புவோரிடம் அறவிடப்படும் பதிவுக் கட்டணம் தொடர்பாக சில விமர்சனங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. இவ் வாதத்தை கவனத்திற்கொண்டு அவ்வாறு விடுமுறை கழிந்து தொழிலுக்கு திரும்புவோரின் சம்பளத் திட்டங்களைக் கருத்திற் கொள்ளாது, 1995 அக்டோபர் 24ந் திகதி முதல் குறைக்கப்பட்ட கட்டணமாக 3200 ரூபா அறவிட வெளரவ தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியுள்ளார்.

குடிபெயர்வுத் தொழிலாளர்களுக்காக நீங்கள் அறிமுகப்படுத்திய 'சுரக்ஷ' காப்புறுதித் திட்டத்தின் நன்மைகள் என்ன ?

1994 அக்டோபர் 15 ஆந் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள 'சுரக்ஷ' காப்புறுதித் திட்டம் குடிபெயர்வுத்

தொழிலாளர்களுக்கு பல வழிகளிலும் சிறந்த நன்மைகளை வழங்குகிறது. இத் திட்டத்தின் விசேட சிறப்பம்சம் என்னவெனில் பெயர்வுத் தொழிலாளரிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்படாததாகும். ஒரு நபருக்கான தவணைக் கட்டணம் 480 ரூபா பணியகத்திற்கும் முகவருக்கும் இடையில் பகிரப்படுகின்றது. எனினும், சமீபத்திய தீர்மானம் முகவரின் பங்களிப்பை இதிலிருந்து தவிர்ப்பதுடன் முழு நிதிப் பொறுப்பும் பணியகத்தால் ஏற்கப்படுகின்றது.

பெயர்வுத் தொழிலாளர்களின் வைத்திய, கல்விச் செலவுகளுக்கு எதிர்மாறாக அத்தொழிலாளர்களின் குடும்ப அங்கத்தவர்களை காப்புறுதிக்கு உட்படுத்தும் வகையில் கடந்த ஆண்டு ஜூலையில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

*எல்லா குடிபெயர்வுத் தொழிலாளர்களுக்கும் காப்புறுதி கட்டாயமானதா ?*

காப்புறுதி, பணியகத்தில் பதிவு செய்து கொள்ளும் எல்லா பெயர்வுத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும் ஒரு வசதியாகும். பதிவு செய்தல் கட்டாயமானதால் பெயர்வுத் தொழிலாளர் பதிவினால் காப்புறுதி தன்னிச்சையாக இயக்குவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1995 செப்டம்பர் இறுதியில் 104,005 பெயர்வுத் தொழிலாளர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன (அட்டவணை 3 ஐப் பார்க்க). இதற்காக 28.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையில் 15 மில்லியன் ரூபா பணியகத்தால் ஏற்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3

"சரக்ஷ" திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட குடியகன்றோர்

| | | |
|---|---|---|
| 1994 | அக்டோபர் | 2,523 |
| | நவம்பர் | 5,002 |
| | டிசம்பர் | 6,015 |
| 1995 | ஜனவரி | 7,754 |
| | பெப்ரவரி | 5,634 |
| | மார்ச் | 4,452 |
| | ஏப்ரல் | 6,975 |
| | மே | 10,535 |
| | ஜூன் | 10,318 |
| | ஜூலை | 11,819 |
| | ஆகஸ்ட் | 14,078 |
| | செப்டம்பர் | 18,900 |
| மொத்தம் | | 104,005 |

*இதுவரை இதனால் பயன் பெற்றோர் உண்டா ?*

ஆம் ! 1995 செப்டம்பர் வரை 605 பெயர்வுத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் விமானக் கட்டணச் செலவு அளிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளனர். அத்துடன், தலா சுமார் 125,000 ரூபா வீதம் ஐந்து மரணங்களுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலனுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை 10.1 மில்லியன் ரூபாவாகும்.

*பணியகத்தின் கீழ் பல பயிற்சி நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன என நாம் அறிகிறோம். அவை எத்தகைய பயிற்சிகளை வழங்குகின்றன ?*

பணியகத்தின் கீழ் இதுவரை 13 பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. விரைவில் மேலும் 12 பயிற்சி நிலையங்கள் நாடு பூராக அமைக்கப்படவுள்ளன.

வீட்டுப் பணிப் பெண்களுக்கான பயிற்சி, மனை ஒழுங்கியலின் பல்வேறு துறைகளை உள்ளடக்குகின்றது. சமையல், நவீன சமையலறை உபகரணங்களை பாவித்தல், சமூக, கலாசார ஒப்புரவு, அரபு, ஆங்கில அடிப்படை அறிவு, வங்கியியல் நடவடிக்கைகள், விசேடமாக சேமிப்பு என்பன இவற்றில் அடங்கும்.

கடந்த டிசம்பர் முதல் வீட்டுப் பணிப் பெண்களுக்கு பயிற்சிச் சான்றிதழ் கட்டாயமானதால் விரைவுபடுத்தப்பட்ட பயிற்சி வசதிகள் அவசியமானவை. இந்நிலையங்கள் மூலம் வருடாந்தம் 65,000 எதிர்பார்ப்புப் பெயர்வுப் பெண்களை பயிற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆடை தயாரிப்பு தொழிற்காலை ஜூகி இயக்குனர் களுக்கான தொழிற் பயிற்சிகள் கேகாலை, குருனாகலை பகுதியில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போதைய நிலையங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, தங்காலை, பதுளை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, கேகாலை, குருனாகலை, சிலாபம், மீரிகம, அநுராதபுரம் முதலிய இடங்களில் அமைந்துள்ளன.

*பணியகத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஏதும் உண்டா ?*

பணியகம் வெறுமனே மனித வலுசேர்ப்பு முகவர் நிலையம் என்ற நிலையத் தாண்டிச் செல்ல உத்தேசித்துள்ளது. பணியகத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் அதிகார சபையாக அதனை மீள ஒழுங்கமைக்கும் உத்தேசம் எதிர்காலத் திட்டத்தில் இடம் பெறுகின்றது. தற்போதுள்ள வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கௌரவ தொழில் அமைச்சரால் உயர் அதிகாரம் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது தற்போதைய சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உத்தேசித் துள்ளது. எனவே, எதிர்காலத்தில் தொழில் நிருவாகம், ஆட்சேர்ப்புத் தேவைப்பாடுகள், தொழில்களுக்கான விதிகள், நிபந்தனைகளைத் தீர்மானித்தல் போன்ற அம்சங்களில் அதிக ஆக்கபூர்வமான கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப் படவுள்ளது.

( 36 ஆம் பக்கம் பார்க்க)

# பெய்ஜிங் உலக மாநாடு : மகளிர் எதிர்நோக்கும் இன்றைய பிரச்சினைகளும் நாளைய சவால்களும்

உலகம் புதிய ஆயிரமாவது ஆண்டொன்றின் உதயத்தின் நுழைவாயிலில் நிற்கும் இவ்வேளையில் நான்காவது உலக மகளிர் மகாநாடு சீனாவில் பெய்ஜிங் நகரத்தில் நடைபெறுகிறது. மகளிர் மேம்பாட்டை நிர்ணயிக்கும் சவால்களை எதிர் கொள்ளக் கூடிய மகளிர் தலைமைத்துவமொன்று அவசரமாகத் தேவைப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலேயே இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. கடந்த தசாப்தம் மகளிர் நிலையில் பல மாற்றங்களை எடுத்து வந்தது; இம்மாற்றங்களால் உலகெங்கிலும் வாழும் மகளிர் அந்தஸ்தில் சாதகமானதும் பாதகமானதுமான தாக்கங்கள் ஏற்பட்டன.

நைரோபி மாநாட்டின் ஒரு தசாப்தத்திற்குப் பின்னரும்கூட அதிகமாக மகளிர் இராணுவ ஆட்சியாளர்களின் நெருக்குதலிலும், ஏழ்மைச் சமுதாயங்களின் தரித்திர நிலையிலும் ஆயுத மோதல் சூழ்நிலைகளிலும் தந்தை வழிச் சமுதாய விழுமியங்களிலும் துன்புற்று வருகின்றனர். இன்றுவரை மகளிர் மீதான பாலியல் துஷ் பிரயோகம் பரவலாக நிலவி வருகின்றது. இந்தியாவின் பல பாகங்களிலும் சீதனக் கொலைகள் தாண்டவமாடுகின்றன. பெண் சிசுக்கொலை இந்தியாவிலும் சீனாவிலும் பரவியுள்ளது.

மறுபுறம், மகளிர் நடவடிக்கைகள் அவர்களின் வாழ்வில் பல சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. டிரினிடாட்-டொபாகோவின் தேசியக் கணக்குகளில் மகளிரின் வேதனமற்ற ஊழியத்தையும் இடம்பெற வைக்கும் மசோதாவொன்று அந் நாட்டின் செனட் சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது; விவாகரத்து செய்யப்பட்ட பின்னரும் தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு மகளிர் தமது விவாக வீட்டிலேயே தங்கும் உரிமையை வழங்கும் நாட்டின் சிவில் அந்தஸ்து சட்டத்தின் மீதான திருத்தப் போராட்டத்தில் இராக், மகளிர் வெற்றி கண்டுள்ளனர். முன்னர், வழக்கு நடைமுறைகள் முடிவடைந்தவுடன் அவர்கள் இல்லத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. இராக் மகளிர் சிவில் சேவையாளர்களின் மகப்பேற்று விடுப்பினை 42 நாட்களிலிருந்து 1 வருடத்திற்கு அதிகரித்துள்ளது. இந்தியாவின் மகளிர் குழுக்கள் பெண் சிசுக் கருக்கலைப்புப் பழக்கத்தினை ஒழிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு போராடி இந்தியப் பாராளுமன்றத்தில் சட்டவாக்கமொன்றை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டனர். இது பிரசவத்திற்கு முன்னரான பால் நிர்ணயிப்பை தடைசெய்கிறது. இவை யாவும் சமீபத்தில் மகளிரால் நடாத்தப்பட்ட போராட்டங்களில் ஒரு சில மட்டுமேயாகும்.

நைரோபியிலிருந்து வியன்னா, செய்ரோ, கொபன்ஹேகன் ஊடாக மகளிர் பெய்ஜிங்குக்குச் சென்ற பாதையின் ஒவ்வொரு தடத்திலும் அவர்கள் மென்மேலும் பலமும் தன்னம்பிக்கையும் பெற்றுள்ளனர். பெய்ஜிங்கில் எழுப்பப்பட்ட யதார்த்தமான பிரச்சினைகள், இலங்கை போன்ற நாடுகளிலும் மத்திய கிழக்கு, பொஸ்னியா போன்ற நாடுகளிலும் இடம்பெறும் மனிதக் கொலைகள், பங்களாதேஷில் இறந்துகொண்டிருப்போர், பபுவா நியூகினியாவில் மர்மமாக மறைந்தோர், ருவாண்டாவில் கற்பழிப்புக்கும் படுகொலைக்கும் இரையானோர் என்போர் குறித்த அக்கறைகளாகும். மகளிர் அபிவிருத்திக்கான செயற்திட்டமொன்று - அதாவது, நடவடிக்கைத் திட்டமொன்று- ஏற்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இவற்றுக்கான பொறுப்பினை அரசாங்கங்கள் ஏற்கவுள்ளன. 2000 ஆவது ஆண்டினை முன்னோக்கி மகளிரின் மேம்பாட்டுக்காக 1985 ஆம் ஆண்டு முதல் கையாளப்பட்ட தந்திரோபாயங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதனையும் மறு மதிப்பீடு செய்வதையும் இது பிரதிபலிக்கின்றது.

நடவடிக்கை செய்திட்டம் மகளிர் மேம்பாட்டிற்குத் தடையாக விளங்கும் 12 பிரதான பகுதிகளை அடையாளம் கண்டு நிரல்படுத்தியுள்ளது :

**1. வறுமை**

- உலகின் சுமார் 130 கோடி வரையிலான வறியோரில் 70 வீதமானோர் மகளிராவர்.
- 1988 இல் வறுமையில் வாழும் மொத்த கிராமிய மகளிர் தொகை 56.4 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1965-1970 களில் இத்தொகை 47 வீதத்தால் அதிகரித்துள்ளது.
- உலகம் பூராவும் நான்கில் ஒரு பகுதிக் குடும்பங்களுக்கு மகளிரே தலைமை தாங்குகின்றனர். 1979 முதல் 1989 வரை மகளிர் சர்வதேச ஆய்வு நிலையத்தால் நிகழ்த்தப்பட்ட 66 ஆய்வுகளில் 44 ஆய்வுகள், மகளிரை தலைமையாகக் கொண்டு விளங்கிய குடும்பங்கள், ஆண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களை விட வறுமைப்பட்டுக் காணப்பட்டன என்பதை எடுத்துக்காட்டின.

இன்றைய உலகில் - குறிப்பாக, வளர்முக நாடுகளிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் - பெருகி வரும் வறுமையினால் மகளிர் விகிதசமனற்ற ஒரு பங்கினைப்பெற்று வருகின்றனர். அவர்களின் சுமைகள் பொருளாதார வாய்ப்பின்மை, நில உரித்துடமை, வம்சாவழியுரிமை, கல்வி, உதவிச் சேவைகள், தீர்மானங்களை மேற்கொள்வதில் குறைந்த பட்ச பங்களிப்பு - என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன.

நடவடிக்கைகள்

அரசாங்க நடவடிக்கைகள்:

- பால் கண்ணோட்டத்தின் அடிப்படையில் தேசிய செயல்திட்டங்கள், கொள்கைகள்

என்பவற்றின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல்.

- மனையாளர்களுக்கிடையில் வளங்களை சமமாக பகிர்ந்தளிக்கக்கூடியவாறான செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தலும் ஊக்குவித்தலும்.
- உற்பத்தி மூலவளங்களில் மகளிருக்கு சமமாகவும் அதிக நியாயமாகவும் வாய்ப்பளிக்கும் வகையில் பொதுச் செலவினங்களை ஒதுக்குதல்.
- பொருளாதார மூலவளங்களை மகளிர் பூரணமாகவும் சமமாகவும் அடையும் வகையில் சட்டங்களையும் நிருவாக நடைமுறைகளையும் மீளமைத்தல்.
- கடன் வசதிகள் மகளிரை எட்டச் செய்யும் வகையில் முறைசார், முறைசாரா கடன் வழங்கும் தாபனங்களுக்கிடையிலான தொடர்பினை வலுப்படுத்தல்.
- பல்பக்க நிதி நிறுவனங்களும் இருதரப்பு நன்கொடையாளர் நடவடிக்கைகளும்.
- மகளிர் மீதான எதிர்மறைத் தாக்கங்களை குறைக்கும் பொருட்டு அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டத் தாக்கங்களை மீளாய்வு செய்தல்.

அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகள்

- வறுமை எதிர்ப்பு செயற் திட்டங்களின் செயற்திறனை விருத்தி செய்தலும் அவற்றின் அமுலாக்கலைக் கண்காணித்தலும்.

மகளிரின் சுகாதாரம், கல்வி, சமூக சேவை என்பவற்றை முன்னேற்றகரமாக்கும் தேசிய உபாயங்களை அபிவிருத்தி செய்தல்.

**2. கல்வி**

தொடக்கக் கல்வி மட்டத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் ஆண்-பெண் சமன்பாடு ஏறத்தாழ ஓரளவுக்கு நிலவி வந்த போதிலும், பெண் பிள்ளைகளுக்கு (விசேடமாக, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில்) தரமான கல்வி மறுக்கப்பட்டுள்ளது. இடையில் கல்வியை நிறுத்திக் கொள்ளும் விகிதம் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் தொடர்பாக உயர்வாக உள்ளது. உலகின் எழுத்தறிவற்ற மக்களில் மூன்றில் இரு பங்கினர் மகளிராக இருப்பதுடன், அவர்களில் பெரும்பான்மையோர் கிராமிய மகளிராக உள்ளனர்.

- உலகின் 100 கோடி எழுத்தறிவற்ற வயது வந்தோரில் மூன்றில் இரு பங்கினர் மகளிராவர்.
- அவர்களில் 45 வயதிற்கு மேற்பட்ட மகளிரைப் பொறுத்த வரையில், வளர்முக நாடுகளில் படிப்பறிவற்ற விகிதம் 50 சதவீதமாகும். ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் இது 70 சதவீதம் வரையில் அதிகரித்து காணப்படுகிறது.
- ஆரம்ப பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் சுமார் 50 கோடி பிள்ளைகளில் 10 கோடி பிள்ளைகள் நான்கு வருடங்களை பூர்த்தி செய்ய முன்னர் கல்வியை நிறுத்தி விடுகின்றனர். இவர்களில் மூன்றில் இரு பங்கினர் பெண்பிள்ளைகளாவர்.
- மகளிர், கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் பெருமளவில் நுழைகின்றனர். 1990 இல் மூன்றாம் நிலைக்கல்வி பெறும் ஒவ்வொரு 100 ஆண்களுக்கும் பெண்களின் சராசரி விகிதாசாரம் ஆபிரிக்காவில் 32, ஆசியா, பசுபிக் பிராந்தியத்தில் 84, மேற்கு ஐரோப்பாவில் 94, கிழக்கு ஐரோப்பாவில் 104, இலத்தீன் அமெரிக்கா, கரிபியன் பிராந்தியத்தில் 106 எனக் காணப்பட்டது.

நடவடிக்கை

அரசாங்கங்களால்:

- 2000 ஆவது ஆண்டில் உலகளாவிய ரீதியில் அடிப்படை கல்வியைப் பெறவும், ஆரம்ப பாடசாலை வயதுப் பிள்ளைகளில் குறைந்த பட்சம் 80 வீதமானோருக்கு ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்யவும் வாய்ப்பளித்தல்.
- 2005 ஆம் ஆண்டில் ஆரம்ப, இடைநிலை கல்விக்கு இடையிலான பால் இடைவெளியை நீக்கி, 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் எல்லா நாடுகளிலும் அகிலம் தழுவிய ஆரம்பக் கல்வியை வழங்குதல்.
- மகளிரின் எழுத்தறிவின்மை விகிதத்தை-குறிப்பாக, கிராமிய, குடிபெயர்ந்தோர், அகதிகள், உள்நாட்டு ரீதியான இடம் பெயர்ந்த வலது குறைந்த மகளிர் போன்றோரின் எழுத்தறிவின்மையை- குறைந்த பட்சம் 1990 ஆம் மட்டத்திற்குக் குறைத்தல். குறிப்பாக விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் பாகுபாடற்ற கல்வி, பயிற்சி, (தொழிற்பயிற்சி உட்பட) என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.

சர்வதேச அமைப்புகள், நன்கொடையாளர்களால் :

- அமைப்பு ரீதியான சீராக்கம், பொருளாதார மீட்சிச் செயற்திட்டங்களில் கல்விக்கான நிதியளிப்பு மட்டத்தினை அதிகரித்தல் அல்லது பராமரித்தல்.

அரசாங்கங்கள், கல்வித் தாபனங்கள் சனசமூகங்களால்:

- குழந்தை பராமரிப்பு மற்றும் சலுகைகளுக்கு தாய்மாருக்கு உதவிகளை வழங்குதல்.

**3. சுகாதாரம்**

- எச்.ஐ.வி. வைரஸினால் பாதிக்கப்பட்ட வயது வந்தோரில் மகளிர் 40 சதவீதத்தை கொண்டு விளங்குகின்றனர். 2000 ஆவது ஆண்டளவில் இவ் வைரஸினால் பாதிக்கப்பட்ட மகளிர் 1.5 கோடி அளவில்

இருப்பதுடன் அவர்களில் 40 இலட்சம் பேர் மரணிப்பர்.

- பிரதி வருடமும் மகப்பேற்று சிக்கல்களால் குறைந்தபட்சம் 500,000 பெண்கள் மரணிப்ப துடன், மற்றும் 100,000 பேர் பாதுகாப்பற்ற கருக்கலைப் பினால் இறப்பர்.

உயிரியல் ரீதியான வேறு பாடுகள், சமூக நிலைமைகள், பாகுபாடுகள், சுகாதாரப் பராமரிப்பு குறைபாடுகள், போதிய சுகாதார நலன் பேணல் மற்றும் சேவைகள் இன்மை என்பன உட்பட்ட பல காரணிகள் மகளிரின் சுகாதாரத்தினைப் பாதிக்கின்றன. உணவுப் பற்றாக்குறை, வசதி குறைந்த வீடுகள், தூய குடிநீர் வசதியினை பெறும் வாய்ப்பின்மை என்பன வளர்முக நாடுகளின் மகளிர் சுகாதாரத்தை அச்சுறுத்தும் காரணிகளாகும். மகப்பேற்று சுகாதாரத்தில் போதிய கவனஞ் செலுத்தப்படாமை மகளிர் மரண விகிதத்தை மேலும் உயர்த்தியுள்ளது.

நடவடிக்கை

ஐக்கிய நாடுகள் அமைப்பு, வைத்திய சமூகம், ஆய்வு நிறுவனங்கள், அரச சார்பற்ற தாபனங்கள், வெகுஜன தொடர்பு சாதனங்கள் மற்றும் பிறவற்றுடனான கூட்டுறவுடன் அரசாங்க நடவடிக்கைகள்.

- பால் அம்சங்களை கவனத்தில் கொண்ட சுகாதார செயற் திட்டங்களை வடிவமைத்தல், அமுல் நடத்தல்.

- ஏற்கத்தக்க ஆரம்ப சுகாதார நலன் காப்பினை வழங்குதல்.

- பெண் பிள்ளைகளின் தேவை களில் குறிப்பாக கவனஞ் செலுத்தல்.

- எச்.ஐ.வி/ எயிட்ஸ் மற்றும் ஏனைய பாலியல் சம்பந்தமான நோய்கள் தொடர்பில் தீர்மானங் களை மேற்கொள்வதில் மகளிரின் ஈடுபாட்டை உறுதிப் படுத்தல்.

- எச்.ஐ.வி. மற்றும் பாலியல் ரீதியான நோய்களிலிருந்து மகளிரை பாதுகாக்கும் அபிவிருத்தி உபாயங்களுக்கு வசதி அளித்தல்; பாலியல் ரீதியான நோய்கள், எச்.ஐ.வி. என்பவற்றை தடுக்கும், ஏற்கத்தக்க சேவைகளை மகளிர் பெற்றுக் கொள்ளுவதை உறுதிசெய்தல்.

- மகளிர் சுகாதாரம் பற்றிய ஆய்வுகளை ஊக்குவித்தல்; சுகாதாரத் துறையில் மகளிர் தீர்மானம் மேற்கொள்வோர் தொகையை அதிகரித்தல்; மகளிர் சுகாதாரம் பற்றிய தரவுப் பகுப்பாய்வு, ஆய்வுக் காண்புகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.

- சுகாதார நலன் சேவை, சமூக சேவைகள் என்பவற்றின் மீதான நிதி அளிப்பினை அதிகரித்தல்.

## 4. வன்முறை

- அமெரிக்காவில் ஒவ்வொரு எட்டு வினாடிகளிலும் ஒரு பெண் உடலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுவதுடன், ஒவ்வொரு ஆறு நிமிடங்களுக்கு ஒருவர் வீதம் கற்பழிக்கப் படுகின்றனர்.

- இந்தியாவில் தினமும் ஐந்து பெண்கள் சீதனம் தொடர்பான தகராறுகளால் எரிக்கப் படுகின்றனர்.

- பபுவா-கினியா வில் நடாத்தப் பட்ட ஆய்வுகள் மூலம் அங்கு 67 சதவீதமான பெண்கள் உள்நாட்டு கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறியக்கிடைக்கின்றது.

மகளிருக்கு எதிரான வன்முறை ஒரு சர்வதேச பிரச்சினையாகும். வரலாற்று ரீதியில் ஆண்கள், பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களுக்கு பாகுபாடு காட்டி வந்துள்ளனர். சட்டம், உதவி, பாதுகாப்பு பற்றிய தகவல்கள் பெண்களுக்கு குறைவாகவே எட்டுகின்றன. சட்டங்களின் குறைபாடு, நடப்பிலுள்ள சட்டங்களை அமுல்நடத்துவதில் அதிகார பீடங்கள் காட்டும் மந்தப்போக்கு என்பன சில விவகாரங்களில் பன்முறையை அதிகரிக்க வைக்கின்றது. பெண்களின் தாழ்வு நிலையை நியாயப்படுத்தும் கலாசார பாரம்பரியங்களும் பெண்களுக்கு எதிரான பன்முறைக்கு பங்களிப்புச் செய்கின்றன. தொடர்பு சாதனங்கள் கூட பெண்களை பாலியல் பண்டங்களாக உருவாகப்படுத்தி மற்றுமொரு பங்களிப்பை வழங்கு கின்றன.

## 5. மோதல்கள்

- உலகின் 2.3 கோடி அகதிகளில் 74 சதவீதத்தை பெண்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

- யுத்தத்தின் முதல் மாதத்தில் பொஸ்னியா-ஹெர்ஸ கோவினாவில் 20,000 க்கு மேற்பட்ட பெண்கள் கற்பழிக்கப் பட்டதாக அறிக்கைகள் தெரிவிக் கின்றன.

போர் அல்லது ஆயுத மோதல் இடம்பெறும் காலங்களில் பெண்கள் பல்வேறு வழிகளில் பாதிப்புக்குள் ளாகின்றனர். அவ்வாறான மோதல் களுக்கான தீர்மானங்களை மேற் கொள்வதில் அவர்கள் சம்பந்தப் பட்டபோதும், தாமாக ஆயுத பாணிகளாக ஆகாவிடினுங்கூட சமூக, பொருளாதார வாழ்வு தடங்கற்படுத் தப்படும் பொழுது குடும்பங்களைப் பராமரிக்கும் பெண்கள் மீதே கூடிய சுமை ஏற்றப்படுகின்றது. மேலும், பெண்கள் போர் சூழ்நிலைகளில் நிதமும் சித்திரவதைக்கும், காணாமற் போகுதலுக்கும், கற்பழிப்புக்களுக்கும் உட்படுகின்றனர்.

நடவடிக்கைகள்

அரசாங்க நடவடிக்கை :

- சமாதான, பாதுகாப்பு நட வடிக்கைகளில் மகளிரின் பங்களிப்பை பலப்படுத்தல்.

- யுத்த மூலவளங்கள் மற்றும் அவை தொடர்பான கைத் தொழில்கள் என்பவற்றை அபிவிருத்தி நோக்கங்களுக்கு மாற்றுவதைத் துரிதப்படுத்தல்.

- ஆயுத மோதல்களின்போது பெண்களுக்கும், சிறுவர்களுக்கும்

பாதுகாப்பு வழங்கும் சர்வதேச ஒப்பந்தங்களை உறுதிப்படுத்துவது பற்றி கருத்திற் கொள்ளல்.

சர்வதேச தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடனான அரசாங்க நடவடிக்கைகள் :

- கல்வி, பயிற்சி என்பன மூலம் சமாதான வழியில் தகராறுகளை தீர்த்துக் கொள்வதை ஊக்குவித்தல்.
- பெண்களின் பங்கேற்புடனான சமாதான ஆய்வுகளுக்கு உற்சாகமளித்தல்.
- அகதிகளுக்கான உதவிகளைத் திட்டமிடும் பொழுது பெண்களின் பங்கேற்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பெண் அகதிகளின் பாதுகாப்பு, உடலியல் ரீதியான நன்மதிப்பு என்பவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- போர் மற்றும் இனரீதியான சுத்திகரிப்பு என்பவற்றின் உபகரணங்களாக கற்பழிப்பு மற்றும் சீழ் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்தல்.

## 6. பொருளாதாரப் பங்கேற்பு

பிரதான உணவு உற்பத்தியாளர்களாகவும் பொருளியல் வாழ்வில் கணிசமான பங்களிப்பாளர்களாகவும் பெண்கள் திகழ்ந்தாலும்கூட, பொருளியல் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதில் அவர்கள் பெருமளவு புறமொதுக்கப்படுகின்றனர். பெரும்பாலான சமூகங்களில் காணி, மூலதனம், தொழில்நுட்பம் என்பவற்றை உள்ளிட்ட பல்வேறு உற்பத்தி துறைகளில் சம அளவில் வாய்ப்புக்களைப் பெறவோ அல்லது கட்டுப்படுத்தவோ பெண்களுக்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. அவர்களின் ஊழியம் கூட குறைக் கொடுப்பனவு செய்யப்பட்டும் குறைப் பெறுமதியில் மதிக்கப்பட்டும் வருகிறது.

- 1990 இல் உலகின் மொத்த ஊழியர் படையின் 32 சதவீதம் பொருளியல் ரீதியில் செயலாற்றல் கொண்டவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- அரசாங்கத்தின் உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் பதவிகளில் (அமைச்சர் மட்டம் அல்லது அதற்கு உயர்வான) பெண்களின் விகிதாசாரம் மிகக் குறைவாகும். எல்லா அமைச்சர் பதவிகளிலும் 6.2 வீதமாயினும் பொருளாதார அமைச்சுக்களில் பெண்களின் வீதம் 3.6% ஆகும்.
- சமீபத்திய ஆய்வுகளின்படி, அமெரிக்காவின் பாரிய கம்பெனிகளில் ஒவ்வொரு 100 ஆண்களுக்கும் 8 பெண்கள் உள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. பெரும்பாலான பெண் முகாமையாளர்கள் கீழ் மட்டங்களிலேயே ஒன்று திரண்டுள்ளனர். அமெரிக்காவிற்கு வெளியேயுள்ள 1000 பாரிய கம்பெனிகளில் 100 நிருவாகஸ்தர்களுக்கு ஒரு பெண்மணி வீதமே கடமை யாற்றுகின்றனர்.

நடவடிக்கை

அரசாங்க நடவடிக்கைகள் :

- ஆண், பெண் இருபாலாரும் சம வேலைக்கு சம சம்பளம் அல்லது சம பெறுமதியான வேலையினை வழங்கும் உரிமையினை உத்தரவாதப் படுத்தும் சட்டங்களை இயற்றி அமுல் நடத்தல்.
- வேலை வாய்ப்புகளில் பால் அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான சட்டங்களை இயற்றி அமுல் நடத்தல்.
- பொருளாதார ரீதியான தீர்மானம் மேற்கொள்வதில் மகளிரின் பூரணமானதும் சமமானதுமான பங்கேற்பை அளிக்கத்தக்க வகையிலான உபாய வழிமுறைகளையும், சாதகமான நடவடிக்கைகளையும் கையாள்தல்.
- மகளிரால் கொண்டு நடாத்தப்படும் வர்த்தக முயற்சிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் வழங்குவதுடன், கடன், மூலதன வசதிகளை பெறத்தக்க வகையில் அவர்களைப் பலப்படுத்துதல்.

அரசாங்கம் மற்றும் நிறுவனங்களால்:

- அலோசனை சபைகள் மற்றும் பிற அரங்குகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல்.
- பெண்களுக்கு கடன் வழங்குவதை அதிகரிக்கும் வகையில் வங்கித் துறையினை இயக்குவித்தல்.

தேசிய, சர்வதேச நிதி அபிவிருத்தி முகவர் தாபனங்களால்:

- கிராமிய பெண்களுக்கு அதிகளவு மூலவளங்களை வழங்கக்கூடிய கொள்கைகளை அமுல் நடத்தல்.
- சிறு அளவிலான பெண் முயற்சியாளர்களுக்கு மூல வளங்களை வழங்கக்கூடிய முயற்சிகளுக்கு உதவி அளித்தல்.

## 7. அதிகாரப்பகிர்வும் தீர்மானம் எடுத்தலும்

- 1993 இல் உலகளாவிய ரீதியில் 6 பெண்கள் மட்டுமே அரசாங்கத் தலைவர்களாக இருந்தனர். 1994 இன் இறுதியில் 10 பெண்மணிகள் தத்தமது அரசாங்கங்களுக்கு தலைமை தாங்கினர். இத் தொகை வரலாற்றில் முன்னெப் பொழுதும் இருந்திராத அளவாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் 185 அங்கத்துவ நாடுகளில் பெண் நிரந்தரப் பிரதிநிதிகள் 6 பேர் மட்டுமே.
- 100 க்கும் அதிகமான நாடுகளின் பாராளுமன்றங்களில் ஒரு பெண்மணி கூட இல்லை.

இன்று அரசியலில் பெண்களை அதிகம் காணக்கூடியதாக இருந்த போதிலும், சமூகத்தை வடிவமைக்கும் அதிகார அமைப்புகளில் அவர்களுக்கு குறைவாகவே இடம் கிட்டுகின்றது. உயர்மட்ட ராஜதந்திரிகள் அல்லது சர்வதேச தாபனங்களில் பெண்களின் பூரண பங்கேற்பு போதியளவில் இல்லை. நடப்பிலுள்ள நெறிகள், நடைமுறைகள் காரணமாக பெண்கள் தலைமைத்துவ பதவிகளுக்கு நியாயமான முறையில் போட்டியிட முடியாதுள்ளது. அத்தகைய பாகுபாட்டிற்கு, எதிர்மறையான தீவிர மனப்பாங்குகள் பங்களிப்புச் செய்கின்றன. தீர்மானங்களை மேற்கொள்வதில் பெண்களின் முனைப்பான பங்கேற்பு இன்றி சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம் முதலிய குறிக்கோள்களை அடைய முடியாது.

நடவடிக்கை

அரசாங்க நடவடிக்கைகள்:

- அரசாங்க அமைப்புக்கள், குழுக்கள் என்பவற்றில் பால் சமநிலைக் குறிக்கோளை ஸ்தாபித்தல்.

அரசியற் கட்சிகளால்:

- பெண்களின் பங்கேற்புக்கு எதிரான பாகுபாடுகளை நீக்கும் பொருட்டு கட்சி அமைப்புகளையும் நடைமுறைகளையும் பரிசீலனை செய்வது பற்றி கருத்திற் கொள்தல்.

ஐக்கிய நாடுகள் சபையினால் :

- ஐ.நா. சபை தாபனங்களின் சிரேஷ்ட பதவிகளுக்கு பெண்களை நியமிக்கும் வழிமுறைகளை அபிவிருத்தி செய்தல்.

- தீர்மானம் மேற்கொள்தல் சம்பந்தமான தரவுகளை தொடர்ந்து சேகரித்தலும் பகுப்பாய்வு செய்தலும்.

அரச சார்பற்ற தாபனங்களால் :

- தகவல், கல்வி என்பன மூலம் பெண்களிடையே ஒத்துழைப்பை கட்டியெழுப்புதல், பலப்படுத்துதல்.

- ஆண், பெண் பாலார் சமத்துவம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்புக் கூற வேண்டிய நிலையை ஏற்படுத்துவதற்கு பாடுபடல்.

## 8. தேசிய, சர்வதேச அமைப்புகள்

பெரும்பாலான நாடுகளில் மகளிரின் உயர்வுக்காக தேசிய மட்டத்திலான நிறுவனங்கள் (உதாரணமாக அமைச்சுகள், புள்ளிவிவர அதிகாரிகள், ஆய்வுப் பிரிவுகள்) அமைக்கப்பட்டாலும் கூட, இத்தகைய பணிகளை சரிவர நிறைவேற்ற அவசியமான நிதி, மனித வளங்கள் போதியனவாக இல்லை. சர்வதேச மட்டத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. மேலும், பால் அடிப்படையிலான தகவல்கள் புள்ளிவிபரங்கள் என்பனவும் போதியளவில் இல்லை.

- உலகம் பூராவுமுள்ள எல்லா சமுதாயங்களிலும் பெண்களின் நிலையை கண்காணித்து, அவர்களின் உரிமைகளை மேம்படுத்தும் பொருட்டு 1946 ஆம் ஆண்டு பெண்ணின் அந்தஸ்து பற்றிய ஐ.நா. ஆணைக்குழு அமைக்கப்பட்டது. வளர்முக நாடுகளில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மூலமாக ஐ.நா. சபையின் மகளிர் அபிவிருத்தி நிதியம் நேரடியான தொழில்நுட்ப, நிதி உதவிகளை வழங்குகின்றது.

- நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் முகவர்கள் என்ற வகையில் பெண்களின் நிலையை உயர்த்தும் முகமாக ஐ.நா.வின் மகளிர் மேம்பாட்டிற்கான சர்வதேச ஆய்வு, பயிற்சி நிறுவனம் (INSTRAW) ஆய்வுகள், பயிற்சிகள் மற்றும் தகவல் நடவடிக்கைகளை செயற்படுத்துகின்றது.

நடவடிக்கைகள்

அரசாங்க நடவடிக்கை:

- மகளிரின் உயர்வுக்காக இயலுமான மிக உயர்மட்டத்தில் தேசிய ரீதியான அமைப்புக்களை உருவாக்குதல்.

- கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள முன்னர் பால் பகுப்பாய்வுகளை நடாத்துதல்.

- மகளிரின் உயர்வுடன் தொடர்புள்ள தேசிய, பிராந்திய, சர்வதேச அமைப்புக்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

- பால் அடிப்படையிலான புள்ளிவிபர பிரசுரங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்படுவதை உறுதிப்படுத்தல்.

தேசிய, சர்வதேச புள்ளிவிபர சேவைகள் மூலம்:

- பால் அடிப்படையிலான தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், முன்வைத்தல்.

- ஆண், பெண்கள் மீதான வறுமை அளவீடுகள் பற்றிய தரவுச் சேகரிப்பை முன்னேற்ற கரமாக்கல்.

ஐக்கிய நாடுகள் சபையால் :

- மகளிரின் மனித உரிமைகள் தொடர்பான தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு என்பவற்றை சிறந்த முறையில் நிறைவேற்ற ஊக்கமளித்தல்.

## 9. மனித உரிமைகள்

சட்டத்தின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்ட உரிமைகள் மகளிருக்கு இருப்பினும், அவ் உரிமைகளை மேம்படுத்தவோ அல்லது பாதுகாக்கவோ அரசாங்கங்கள் தவறியதன் காரணமாக, பெரும்பாலும் அவற்றை பூரணமாக பிரயோகிக்க முடியாதுள்ளது. இதற்கான தேசிய,

சர்வதேச மட்டத்தில் பொருத்தமான வழிமுறைகளும் அருகிக் காணப் படுகின்றன. மகளிருக்கு எதிரான எல்லா வகையான அநீதிகளையும் ஒழிக்கும் ஒப்பந்தத்தினை ஏற்றுக் கொள்ளாத நாடுகளில் மகளிர் உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்கப் படுவதில்லை. இன்று வரை மகளிருக்கு எதிரான எல்லா வகையான அநீதிகளையும் ஒழிக்கும் ஒப்பந்தத்திற்கு 139 நாடுகள் கைச்சாத் திட்டுள்ளன.

நடவடிக்கை

அரசாங்க நடவடிக்கை

- மகளிருக்கு எதிரான அனைத்து வகையான அநீதிகளையும் ஒழிக்கும் ஒப்பந்தம் உட்பட எல்லா சர்வதேச சட்டங் களையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது அனுமதித்தல்.
- மனித உரிமை மீறல்களை அகற்றும் நடப்பிலுள்ள வழிமுறைகள் பற்றிய தகவல்களை பிரசித்தப்படுத்தல்.
- மகளிரின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய மட்டத்திலான நிறுவனங்களை உருவாக்குதலும் பலப் படுத்தலும்.
- சிறுவர் உரிமை பற்றிய சாசனத்தை நடைமுறைப் படுத்தி, ஏற்றுக் கொள்ளல்.
- தேசிய சட்டங்களை மீளாய்வு செய்து மகளிருக்கு அநீதி இழைக்கும் சட்டங்களை அகற்றுதல்.
- அரச அதிகாரிகளுக்கு பால் அடிப்படையிலான மனித உரிமைக் கல்வி, பயிற்சி என்பவற்றை வழங்குதல்.
- நீதிமன்றங்களிலும் மற்றும் பொலிஸ் / சிறைச்சாலை அதிகாரிகளாக் கடமை யாற்றுவதற்கு பெண்களுக்கு சம உரிமையை உறுதிப்படுத்தல்.

## 10. தொடர்பு சாதனங்கள்

இன்று அதிகளவு பெண்கள் தொடர்பு சாதனங்களில் கடமை யாற்றிய போதும் பெரும்பாலான நாடுகளில் கொள்கை ரீதியான தீர்மானங்களை சிறு தொகையினரே மேற்கொள்கின்றனர். தொடர்பு சாதனங்கள் இன்னமும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் பாத்திரம் சமூகத்திற்கும், நாட்டிற்கும் அவர்களது பங்களிப்பு என்பன பற்றி பழங்கால கருத்துருவங்களில் தங்கி நின்று, சிதைவான ஒரு பிம்பத்தையே காட்டுகின்றன. தொடர்பு சாதனங்கள் பொதுவாக ஆண்களின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்து வருவதால் அவை ஆண்களின் கருத்துருவங் களையும் முன்னுரிமைகளையும் பிரதிபலிக்கின்றன எனக் கொள்ளலாம்.

- அனைத்து தொடர்புச் சாதனங் களிலும் பெண்களின் கூட்டு மொத்த வேலை வாய்ப்புப் பங்கு குறைவானதாகும். ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒலிபரப்பு, செய்திப் பத்திரிகைத் துறைகளில் மகளிரின் பங்கு சராசரி 25 வீதத்திற்கு குறை வாகும். ஐரோப்பாவில் பத்திரிகைத் துறையில் அது 30 வீதமாகவும் ஒளிபரப்பில் 36 வீதமாகவும் காணப்படுகின்றது.
- பெண்கள் தொடர்பு சாதன உயர் பதவிகளில் அருதலாகவே இடம் பெறுகின்றனர். உலக ளாவிய 30 நாடுகளில் 200 தொடர்பு சாதனத் தாபனங் களில் 'யுனெஸ்கோ' வினால் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி ஏழு தாபனங்களில் மட்டுமே பெண்கள் தலைமை தாங்கு கின்றனர்.
- 10 நாடுகளில் மேற்கொள்ளப் பட்ட ஐ.நா. சபையின் ஆய்வுகளின் படி, தொலைக் காட்சி செய்திகளில் மகளிர் சம்பந்தப்பட்ட விடயங்கள் 1.4 வீதம் மட்டுமே எனக் காட்டுகின்றன. இவற்றினை அளிக்கும் முக்காற் பங்கு பேர் ஆண்களாவர்.

நடவடிக்கை

அரசாங்கத்தால் :

- தொடர்பு சாதனங்களில் மகளிரின் சம பங்களிப்பை மேம்படுத்தல்.
- மகளிரின் தொடர்பு சாதன அமைப்புக்களை ஊக்குவித்தல், அங்கீகரித்தல்.
- மகளிர் குறித்த சரியான சித்தரிப்பினை உறுதிப்படுத்தும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து, தகவல் தந்திரோபாயமொன்றை அமுல் நடத்தல்.

தேசிய, சர்வதேச தொடர்பு சாதன அமைப்புகளால், அரச சார்பற்ற நிறுவனங்களால்:

- தொடர்பு சாதனங்கள் மூலம் மகளிர் தொடர்பான சம நிலையான பல்வேறு வகைப் பட்ட சித்தரிப்புகளை அபிவிருத்தி செய்தல்.
- தொடர்பு சாதனங்களை அவதானிக்கும் பொருட்டு தொடர்பு சாதன கண்காணிப்பு குழுக்களை அமைக்க ஊக்கமளித்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தை அதிகளவில் பயன்படுத்த மகளிரைப் பயிற்றுவித்தல்.

## 11. சுற்றாடலும் அபிவிருத்தியும்

- வளர்முக நாடுகளின் உணவு உற்பத்தியில் அரைப்பங்கிற்கு பெண்கள் பொறுப்பு வகிக்கின்றனர். சில ஆபிரிக்க நாடுகளில் நீர், எரிபொருள் என்பவற்றைப் பெற அவர்கள் 10 கி.மீட்டர் அல்லது அதற்கு மேல் நடக்க வேண்டியுள்ளது.
- சமீப தசாப்தங்களில் கிழக்கா பிரிக்காவின் பெருமளவு மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் மகளிராலேயே மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்தியாவில் மகளிர் நெற்பயிர்ச் செய்கை ஊழியத்தில் நாற்று

நடுகை, மீன் நடுகையில் 75% ஐயும், அறுவடையில் 60% ஐயும் போர் அடித்தலில் 33% ஐயும் பங்களிப்புச் செய்கின்றனர்.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் வீட்டுப் பாவனைக்கான நீர், எரிபொருள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பு பெண்களைச் சார்ந்துள்ளது. எனவே, அவர்கள் சுற்றாடலின் தரம், ஏற்புத்தன்மை என்பன பற்றி விசேட கவனஞ் செலுத்துகின்றனர். எனினும், தீர்மானங்களை மேற்கொள்வதில் பெண்கள் பெரும்பாலும் சேர்த்துக் கொள்ளப்படாமையால் அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு கொள்கை வகுப்பின்போது கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.

நடவடிக்கை

அரசாங்கத்தால் :

- எல்லா மட்டங்களிலும் சுற்றாடற் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதில் மகளிரின் பங்குபற்றலுக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.
- அறியப்பட்ட சுற்றாடல் அசுத்தங்களால் மகளிருக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைக் குறைத்தல்.
- தகவல், கல்வி என்பவற்றை மகளிர் எட்டுவதற்கான வசதிகளை ஏற்படுத்தலும் அதிகரித்தலும்.
- மகளிர், சுற்றாடல் என்பனவற்றின் மீதான ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல்.

அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புக்கள், மற்றும் தனியார் துறையினரால்:

- பொருத்தமான ஐ.நா. அமைப்புக்களில் ஆண், பெண் பால் அடிப்படையிலான தாக்கங்களைக் கருத்திற் கொண்டு, மகளிருக்கு நலன் பயக்கும் கருத்திட்டங்களை வடிவமைக்க ஊக்குவித்தல்.
- மகளிர், நிலைக்கத்தக்க அபிவிருத்தி என்பன பற்றிய பால் அடிப்படையிலான தரவு மூலங்களை அபிவிருத்தி செய்தலும் ஆய்வுகளுக்கு ஆதரவு வழங்கலும்.



**12. பெண்பிள்ளை**

- 1993 இல் 13 கோடி சிறுவர்கள் ஆரம்ப பாடசாலை கல்வியைப் பெறவில்லை; இவர்களில் 8.1 கோடி பேர் பெண் பிள்ளைகளாவர்.
- வளர்முக நாடுகளில் 45 கோடி பெண்கள், சிறு பருவ போஷாக்கின்மையால் உடல் ரீதியில் செயலிழந்தவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- வருடாந்தம் 20 இலட்சத்துக்கும் அதிகமான பெண்பிள்ளைகள் பிறப்பு உறுப்புகள் துண்டிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பல நாடுகளில் பெண் பிள்ளைகள் சிறு பிராயம் முதல் பெரியவர்களாகும் வரையில் பெரும்பாலும் தாழ்வானவர்களாக கருதப்பட்டு பாகுபடுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதன் விளைவாக, அவர்களுக்கு ஆண் பிள்ளைகள் போன்று பொது இடங்களில் சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை.

நடவடிக்கை

அரசாங்க நடவடிக்கை :

- பெண்பிள்ளைகள் அகிலம் தழுவிய ஆரம்பக் கல்வியை பெறுதல், பூர்த்தி செய்தல் என்பவற்றை உறுதிப்படுத்தல்.
- பெண் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான கொள்கைகளை அபிவிருத்தி செய்து, அமுல் நடத்தலும், அவர்களது சம சந்தர்ப்பத்தை உறுதிப் படுத்தலும்.
- சட்ட ரீதியான குறைந்த பட்ச விவாக வயதிற்கான சட்டங்களை கடுமையாக அமுல் நடத்தலும், தேவைப் படும் பட்சத்தில் குறைந்த பட்ச வயதை உயர்த்தலும்.
- பெண் பிள்ளைகள் தொடர்பாக பின்பற்றப்படும் முரண்பாடான போக்குகளையும் வழக்கங்களையும் மாற்றியமைக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்தல்.
- கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பெண்பிள்ளைகளின் சந்தர்ப்பங்களை மேம்படுத்தும் பொருட்டு பாட விதானங்களை அபிவிருத்தி செய்தல்.
- பொருளாதார ரீதியான சுரண்டல்களிலிருந்து பெண் பிள்ளைகளைப் பாதுகாத்தலும் தொழிலுக்கான குறைந்த பட்ச வயதினை நிர்ணயித்தலும்.

அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள், அரச சார்பற்ற தாபனங்கள் :

- தடைகள் அற்ற கல்வி அமைப்பினை ஊக்குவித்தல்.
- பெண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கும் முறைசார், முறைசாரா கல்விக்கான கொள்கைகளையும் செய்திட்டங்களையும் அபிவிருத்தி செய்தல்.

- உணவுப் பங்கீடு, போஷாக்கு மற்றும் சுகாதார சேவைகளை பெறுவதில் பெண்களுக்கு காட்டப்படும் பாகுபாடான நடைமுறைகளை இல்லா தொழிக்கும் பொருட்டு அவை பற்றி தகவல்களை வழங்குதல்.
- தொழில் புரியும் இடம் உட்பட பெண் பிள்ளைகளுக்கு எதிரான எல்லா வகையான அச்சுறுத்தல்களிலிருந்தும் அவர்களை பாதுகாத்தலும் பாதுகாப்பு வழங்குதலும்.
- பெண்பிள்ளைகளை வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பதற்கான சட்டரீதியான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

பெய்ஜிங் மாநாடு

இனம், மதம், நிறம், மற்றும் கலாசார எல்லைகளைத் தாண்டிய மனங்களின் சந்திப்பு மகளிர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஒரு உலகளாவிய கருத்துருவததை வழங்கியதுடன், அது (பல தடைகள் அவர்களை வேறுபடுத்தியபொழுதும்) சமத்துவத்தை நோக்கிய தமது அணிவகுப்பில் அனைத்து மகளிரும் ஒரே வகையான பிரச்சினைகளுக்கும், பின்னடைவுகளுக்கும் முகங் கொடுக்கின்றனர் என்ற உண்மையையே தத்தமது இல்லங்களுக்கு கொண்டு சென்றனர்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் கண்ணோட்டத்தில் உலகின் வட புலத்தில் மகளிர் எதிர்நோக்கும் சமூக நலச் சேவைகளின் வெட்டு, வேலை நீக்கம் என்பன தென்புலத்தில் அமுல் நடத்தப்படும் கட்டமைப்புச் சீராக்கக் கொள்கைகளில் பிரதிபலிப்பதை நாம் காணலாம். இவ் ஒருமைப்பாடு முன்பு நிலவிய வடக்கு-தெற்கு என்ற பிரிவினைக் கோடுகளை ஊடறுத்துச் செல்கின்றது.

மகளிர் சுகாதாரம் பற்றிய பிரச்சினைகள் இம்மேடையில் கடுமையாக முழக்கப்பட்ட பிரச்சினைகள் மட்டுமன்றி பெய்ஜிங் மாநாட்டின் பிரச்சினைக்குரிய விவகாரமுமாகும். தமது மீள் உற்பத்தி சுகாதாரத்தை கட்டுப்படுத்தும் மகளிருக்கான உரிமையின் அடியாக எழுப்பப்படும் ஒருங்கமைப்புக்கான உரிமை போன்ற விவகாரங்கள் கடுமையாக விவாதிக்கப்பட்டன. இது பற்றிய கருத்துக்கள் விரோதங்களை, கலாசாரங்களை ஊடறுத்துச் சென்றன. இவ் விவகாரத்தில் மகளிரின் தெரிவு உரிமையினை மறுக்கும் பாகிஸ்தான் ஒருபுறம் இருக்க, பெரு நாட்டுத் தலைமைத்துவம் பிறப்பு கட்டுப்பாடு போன்ற விவகாரங்களில் கத்தோலிக்க திருச்சபையின் சர்வாதிகாரப் போக்கை கடுமையாக கண்டித்தது.

பெண் பிள்ளைகளின் உரிமை பற்றிய விடயத்தில் திறந்த அதிகாரங்களைக் கொண்ட நாடுகளில் பெண் கருச்சிசுக்கள் அழிக்கப் படுவதன் மூலம் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாடு காட்டல் அவர்களது பிறப்புக்கு முன்பே ஆரம்பிக்கப்படுகிறது என்ற சர்ச்சைக் குரிய கருத்தை இந்தியா வெளியிட்டது. வாரிசுரிமையினைப் பொறுத்த வரைகூட பெண் பிள்ளைகளின் உரிமைகளுக்கு எதிரான பாகுபாட்டினைக் காணலாம். இஸ்லாமிய நாடுகள் அவர்களுக்கு சம வாரிசுரிமை வழங்குவதை நிராகரித்து, அதனை வாரிசுரிமைக்கான சம உரிமை என வாசிக்கப்பட வேண்டுமென திருத்தஞ் செய்தன. இத்திருத்தங்களின் எதிரொலி சொற்சிலம்பங்களை கடந்து நிற்கின்றது.

இம்மாநாட்டு நடவடிக்கைகளின் சாத்தியப்பாடு மகளிர் குழுக்கள், வற்புறுத்தல் குழுக்கள் என்பன தத்தம் நாடுகளில் அவர்களது கோரிக்கைகளுக்காக குரல் கொடுப்பதன் செயற்பாடுகளிலே தங்கியுள்ளது.

இலங்கையப் பொறுத்தவரை ஐ.நாடுகள் சபையின் மகளிர் மீதான பாகுபாட்டினை ஒழிக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1993 இல் அமைச்சரவையில் அனுமதி அளிக்கப் பட்ட மகளிர் சாசனத்தில் பிரகடனப் படுத்தியுள்ளவாறு மகளிருக்கான தேசிய ஆணைக்குழு அமைக்கப் படுமாயின் மகளிருக்கு பொருளாதார பொறியின் அதிகளவு சம உரிமை



கிடைப்பதற்கு வழி கோலப்படும். இன்றைய வினா என்னவெனில், இவ் எல்லா சட்டங்கள், ஒன்றுகூடல்கள், சீர் திருத்தங்கள் அனைத்தும் சாதாரண பெண்களின் வாழ்வில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதாகும். தமது மிக வசதி படைத்த சகோதரிகள் உலக அரங்குகளிலும் மாநாடுகளிலும் சொகுசாக அமர்ந்து இவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மோசமான வறுமைப்பாட்டிலிருந்து இவர்களை விடுவிக்க அணி திரளும் பொழுது இவர்கள் அடிமைத்தனமும் வறுமையும் மிகுந்த வாழ்க்கையை தொடர வேண்டி வருமா ?

இவ்விடத்தில் 'ஏசியாவீக்' சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்ட வார்த்தைகளை மேற்கோள் காட்டுவது பொருத்தமுடையதாகும். பிஜிங்கில் எமது செயற்பாடு முட்டாள்தனமானதல்ல. அது அடிமைத்தனத்திலிருந்து மகளிரைத் தொடர்ந்து நீக்கும் முயற்சியாகும். அதனை நீக்க எம்மால் உதவ முடியும்; எமது பணி என்னவெனில் அவர்களின் வேதனைக்கு, சிரிப்பிற்கு, அழுகைக்கு செவிமடுப்பதாகும். பிரச்சினைப் படுத்தும் அமைதியினைக் கலைக்க எம்மால் உதவ முடியும். நாம் எங்கிருந்தோம் என்பதை அறிவதும் தாம் எங்கே செல்கின்றோம் என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்வதும் உத்தியோக மொழி தடையினாலான விதிகளினாலோ அல்லது இராஜதந்திர மறுப்பு நடடிக்கைகளினாலோ அன்றி எமது நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்கங்களின் பொறுப்பேற்பினை உறுதிப்படுத்திக் கொள்வதுமே எமது குறிக்கோள்.

( 10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப வாழ்க்கைப் பிரச்சினைகள்

எவ்வாறாயினும், ஊழியர் குடியகல்வு - தொடர்பான பிரச்சினைகள் தொழில் செய்யும் இடங்களோடு மட்டும் மட்டுப்பட்டவையல்ல. குடியகல்வோர் தமது மூல இடங்களில், குறிப்பாகக் குடும்ப மட்டத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மூல இடம் தொடர்பான பிரச்சினைகள் அரசாங்கத்துக்கு அரசாங்கம் என்ற மேல்மட்டங்களில் குறிப்பிட்டுக் காட்டக் கூடியனவாக உள்ளன. எனவே, இக்கட்டுரை குடும்ப வாழ்க்கை தொடர்பான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட முயல்வதோடு, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு புதிய சிந்தனையையும் முன்வைக்கின்றது. தற்பொழுது நாட்டில் நிலவும் உக்கிரமான வேலையில்லாப் பிரச்சினை காரணமாக, இவ்வூழிய போக்கு மீது எவ்விதத்திலும் கட்டுப்பாடுகளை முன்மொழிவதற்கு இக்கட்டுரையாளர் முயலவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளை நோக்கிய தொழிற்றிறன் அற்ற ஊழியர் நகர்வானது சுயேச்சையான ஒரு நிகழ்வாகும். இந்நகர்விற்கு முற்பட்ட கால கட்டத்தில் நகர்விற்கான போக்குகளை உருவாக்கிக் கொள்வதற்காக எதிரிடையான (-) காரணிகளுக்கு எதிராக நேரிடையான (+) காரணிகளை குடியகல்வுக்குரியவர் எடைபோட்டுப் பார்ப்பார். இக்காலத்துக்குள் இடைப்பட்ட தடைகளை சமாளிப்பது போலவே இறுதி நடவடிக்கையை மேற்கொள்ள முன்னர் பிரத்தியேகக் காரணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள அவரால் முயற்சி மேற்கொள்ளப்படும்.

குடியகல்வுக்கு முற்பட்ட இக்கட்டத்தில் பல பயணிகளின் வீட்டுச் சூழலில் கொந்தளிப்பு தோன்றும். இந்நிலைமையானது வெளிச் செல்வோரையும் தங்கியிருப்போர்களையும் ஏகோபித்துப் பாதிப்பதுடன், சென்றவரின் பிரிவுக் காலம் முழுவதும் குடும்பத்தில் இக் கொந்தளிப்பு தொடர்வதுடன், சில வேளை சென்றவர் ஒரு "மாறிய மனிதராக" திரும்பி வந்ததில் இருந்தும் தொடரலாம்.

உண்ணாட்டுப் பத்திரிகைகளும் மின்னியக்க தொடர்பு சாதனங்களும் வெளியேறியோர் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பிரசுரித்தும் காண்பித்தும் வருகின்றன. இளவயதுப் பிள்ளைகளைக் கவனியாது கைவிடுதல், பிள்ளைகளின் கல்வியில் இடையூறுகள் தோன்றுதல், கட்டிளமைப் பருவத்தை அடையும் இளைஞர், யுவதிகளின் நடத்தைப் போக்குகள் மாற்றமடைதல், போதைப் பொருட் பாவனை, அவற்றைக் கடத்தல் அல்லது பங்கீடு செய்தல் போன்ற பாதாள உலக குற்றவியல் நடவடிக்கை களுக்கு தம்மை வழக்கப் படுத்திக் கொள்ளல், இளம் பாலியல் குற்றங்கள் விபசாரம் மற்றும் பெற்றோரின் சமூக விரோத நடவடிக்கைகள் என்பன அவ்வறிக்கைகளில் எடுத்துக்காட்டப் படுகின்றன.

சில சமயங்களில் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பான திறந்த கலந்துரையாடல்கள் - உதாரணமாக, குடும்ப நலனை குடியகல்வு எவ்வாறு பாதிக்கின்றது, வெளிநாடு சென்றவர் பிரிந்திருக்கும் காலத்தில் குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எந்தளவு வெற்றிகரமாக குடும்பம் இச் சவால்களை எதிர் கொள்ளலாம் முதலான விடயங்கள் - குடியகல்வின் மொத்த செயற்பாட்டினை சுமுகமாக வழிநடத்த உதவுகின்றன. அவ்வாறான குடும்பங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பின் உச்ச பயன்களைப் பெற்றுக் கொள்கின்றன. இது போன்ற சாதகமானதும் நன்மையானதுமான பக்கம் பற்றிய அறிக்கைகளுக்குக் குறைவில்லை.

எவ்வாறாயினும் வெளி நாடு சென்றோர் பெரும்பாலானவர்களின் குடும்பங்களின் யதார்த்த நிலை சிறப்பாக இல்லை. ஒரு தந்தையின் அல்லது தாயின் நீண்ட பிரிவு நிலை குடும்ப வாழ்க்கையைச் சீர் குலைக்கின்றது. ஓர் அங்கத்தவர் பிரிந்திருப்பதில் தோன்றும் பிரச்சினைகள் அதற்கு ஆளாகின்றவர்களால் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறான ஒரு நடவடிக்கையால் முழுக் குடும்பமும் நன்மை பெற வேண்டுமானால் குடும்ப அங்கத்தவரின் பழமை பேணும் செயன்முறைகள் மாற வேண்டும். அது போக புதியதும் மேலதிகமானதுமான கடமைகளை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் எஞ்சியிருக்கும் அங்கத்தவர்களுக்கு ஏற்படலாம்.

இவ்வாறான குடியகல்வு நகர்வுகள் வாழ்க்கைச் சக்கரத்தின் ஒரு குறுங்காலத்திற்கே எல்லைப்படுத்தப் பட்டனவாகும். இந்த மனித ஆக்க குடும்ப வாழ்க்கைப் பிரச்சினைகள் முறையாக இனங்காணப்பட்டால் மட்டுமே குடியகல்வு மூலம் அக் குடும்பங்கள் விரும்பும் நன்மைகளை அடைய முடியும். எனவே, அவரவர் களுக்குத் தீர்த்துக் கொள்ள முடியாத குடும்ப வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கற் சேவை ஒரு மாற்று வழியாகும்.

---

( 27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1996 க்கான எதிர்காலத் திட்டங்களில் சில பின்வருமாறு :

1. பிரதான மத்திய கிழக்கு, தூரகிழக்கு நாடுகளில் பணியகப் பிரதிநிதிகளை நியமித்தல்.

2. பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையை 30 ஆக அதிகரித்தல்.

3. பெயர்வுத் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நலன் பயக்கும் வெளிநாட்டு தொழிலாளர் நலவுரிமை நிதியமொன்றை உருவாக்குதல்.

3. 1996 ஆண்டளவில் ஆட்சேர்ப்பை 150,000 ஆக உயர்த்துதல்.

5. வெளிநாட்டு தொழில் மேம்பாட்டு நிதியம் ஒன்றை உருவாக்கி இயக்குவித்தல்.


வாழ்வு அல்லது சாவு
காத்திருப்பு
துயரங்களின் குரல்
கடல்கடந்த வாழ்வு
3
4

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது, பதிவு எண்:QD/21/News/96

# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த இருபது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- சுற்றுலாத்துறையும் பொருளாதாரமும்
- இலங்கைப் பங்குச் சந்தை
- வர்த்தக வங்கித்தொழில் : இன்றைய நிலை
- அமைப்பு ரீதியான சீராக்கங்களும் வளர்முக நாடுகளும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதி விலை : ரூ. 15/- ஆண்டு சந்தா : ரூ.180/-**
**ஆண்டு சந்தா (வெளிநாடு),**

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா / ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள் - US$ 33-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

**Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.**